# சித்தாந்தம்

32 11-12
நவம்பர்-டிசம்பர்
1959

R623ம211,N28
N59-32.11-12
209319

d No. M. 2330

'SIDDHANTHAM'
Vol. 32—No. 11

# த்தாந்தம்

சவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

2 | விகாரி கார்த்திகை 1959 நவம்பர் | இதழ் 11

உள்ளுறை — பக்கம்


| | |
|---|---|
| நக்கோவையார் | ... 353 |
| ஹனும் அன்பும் | ... 361 |
| வற்கொடி | ... 368 |
| ரெப்புரை | ... 372 |
| ம்பையும் புள்ளும் | ... 373 |
| ரின் நுண்மாண் | ... 378 |
| ய்திச் சுருக்கங்கள் | ... 382 |


பத்திராசிரியர் : புலவர் - முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.
உதவிப் பத்திராசிரியர் : மு. நாராயணசாமி

சைவ சித்தாந்த மகா சமாஜம்
14, வாரன் ரோடு, மயிலாப்பூர், சென்னை-4

: சந்தா ரூபா 3 — தனிப்பிரதி அணா 4

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின்

சமய நூல் வெளியீடுகள்

| | ரூ. ந.பை |
|---|---|
| திருமந்திரம்—2 பகுதிகள் —சித்தாந்த பண்டிதர், ப. இராமநாத பிள்ளை அவர்கள் விளக்க உரையுடன் | 18-00 |
| அகத்தியர் தேவாரத் திரட்டு —கயப்பாக்கம்-சதாசிவச் செட்டியார் உரை | 3-50 |
| சிவஞானபோதச் சிற்றுரையும் விளக்கமும் —ப. இராமநாத பிள்ளை | 5-00 |
| சிவஞானபாடியம் —உயர்ந்த பதிப்பு | 5-00 |
| திருவிளையாடற்புராணம் —மதுரைக் காண்டம், நாட்டார் உரையுடன் | 9-00 |
| பெரியபுராணம் —சுந்தரர் வரலாறு | 3-50 |
| பெரியபுராணம் —திருநாவுக்கரசர் வரலாறு | 3-25 |
| சிவஞானபோதப் பொழிப்புரை —கா. சுப்பிரமணிய பிள்ளை | 0-75 |
| திருவாசக விரிவுரை —மறைமலையடிகள் | 6-00 |
| சோமசுந்தர நாயகர் வரலாறு —மறைமலையடிகள் | 2-25 |
| மாணிக்கவாசகர் வரலாறும் காலமும் —மறைமலையடிகள் | 18-00 |

| | ரூ. ந.பை |
|---|---|
| தேவார ஒளிநெறிக் கட்டுரை —அப்பர் | 4-50 |
| —சம்பந்தர் | 5-00 |
| தணிகைமணி, வ. சு. செங்கல்வராய பிள்ளை | |
| திருவிளையாடல் வசனம் | 4-00 |
| கந்தபுராண வசனம்—சு. அ. இராமசாமிப்புலவர் | 5-00 |
| கம்பராமாயண வசனம் —சு. அ. இராமசாமிப் புலவர் (இருபகுதிகள்) | 10-00 |
| வில்லிபாரத வசனம் | 5-00 |
| சீவகசிந்தாமணி வசனம் | 6-25 |
| சிவன் —க. சி. நல்லையா | 1-00 |
| தமிழர் சமயம் —கா. சுப்பிரமணிய பிள்ளை | 2-00 |
| சிவஞானசித்தியார் ஆராய்ச்சி —க. சிவகுருநாத பிள்ளை | 1-75 |
| பிள்ளைத்தமிழ்க் கொத்து | 5-00 |
| மணிவாசகப்பெருமான் வரலாறு | 1-75 |
| சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாறு | 2-25 |
| அப்பர் சுவாமிகள் வரலாறு | 1-75 |
| சேக்கிழார் சுவாமிகள் வரலாறு | 1-50 |
| தாயுமான சுவாமிகள் வரலாறு | 2-25 |

விரிவான பட்டியலுக்கு எழுதுங்கள் :

திருநெல்வேலித் தென்னிந்திய

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,

1/140, பிராட்வே, சென்னை-1



Reg. M. 2330


உ

சிவமயம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு


மலர் 32 | விகாரி கார்த்திகை | 1959 நவம்பர் | இதழ் 11


## திருக்கோவையார்*

(முருகவேள்)

மாணிக்கவாசகப் பெருமான் அருளிச் செய்த திருவாசகம் திருக்கோவையார் என்னும் இருபெரு நூல்களும், நம் தமிழ்மொழிக்கண் உள்ள அரும்பெறல் நூல்களுள் முதன்மைச் சிறப்பிடம் பெறுதற் குரியனவாய்ப் பெரும் புகழ் வாய்ந்து திகழ்வனவாகும். திருவாசகம் மாணிக்கவாசகரின் அயரா அன்பின் திறனை விளக்குகிறது ; திருக்கோவையார் அவர்தம் அளப்பரிய புலமை யறிவின் பெற்றியினைப் புலப்படுத்துகின்றது. சிவபெருமானின் அருள் நலங்களைப் புகழ்ந்து பாடிப் போற்றுகின்றது திருவாசகம் ; நமது அருமைச் செந்தமிழ் மொழியின் அகப்பொருள் இலக்கண நலங்களைத் திறம்படத் தெளித்துணர்த்தித் தேற்றுகின்றது திருக்கோவையார் ! மாணிக்க வாசகப் பெருமானின் சிவபத்திச் சிறப்பினையும் சிவானுபவத் திறங்களையும் திருவாசகத்தால் உணரலாம் ; நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும் பாடல் சான்ற பண்டைச் சங்க காலப் புலநெறி வழக்கின் இயல்புகளைத் திருக்கோவையார் நமக்குத் தெள்ளிதிற் புலப்படுத்தும் ! திருவாசகம் சிவநெறித் திருநூல்'; திருக்கோவையார் செந்தமிழ்ப் பெருநூல் ! திருவாசகம் தெவிட்டாத தேனையனைய சிறப்பினை

* திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டையில் 4-10-59 ஞாயிறன்று நிகழ்ந்த திருவாசக விழாவிற் பேசியதனைத் தழுவியது.

யுடையதெனின், திருக்கோவையார் அத்தேனிடை யூறிய தெய்வநலம் செறிந்த செந்தமிழ் அமிழ்தம் போல்வதாகும்.

" தண்டமிழின் மேலாந் தரம் " எனத் தகுந்த பெருஞ் சிறப்பைப் பெற்றொளிரும் திருவாசகம் திருக்கோவையார் என்னும் இவ்விரு பெருநூல்களும், சங்ககால இலக்கியங்களுக்கும் பிற்கால நூல்களுக்கும் இடையே, ஓர் எல்லைக்கல் போல விளங்கும் மேம்பாடு மிக்கன. பிற்காலக் கவிதை வகைகள் பலவும் தோன்றுவதற்கு வழி வகுத்துக் காட்டிய கழிபெருஞ் சிறப்பினவாய், அவற்றினின்றும் ஓரளவு வேறுபட்டுச் சிறந்த பொருளும் போக்கும் நடையும் அமைப்பும் உடையனவாய், புதுமையும் பழமையும் பொருந்தக் கலந்த பொலிவும் வளமும் மிக்க மாட்சிமையவாய், இவ் விருபெரு நூல்களும் தெய்வநலம் செறிந்து வீறுற்று விளங்கித் திகழ்கின்றன.

திருவாசகமும் திருக்கோவையாரும் தத்தம் துறையில் தனிப்பெரு மாட்சிமை சான்றவை. இரண்டும் கவிதை யுலகில் தந்நிகர் அற்றுத் தலைசிறந்து திகழ்பவை! கவிதை என்பது கவிஞனின் உள்ளத்தில் இயல்பாகப் பொங்கி எழும் ஆற்றல் மிக்க உணர்ச்சிப் பெருக்கமே யாகும். ("Poetry is the spontaneous overflow of powerful feelings.") கவிஞனின் உள்ளத்தில் உணர்ச்சிகள் பொங்கி எழும்போதே, அவை விரைந்து கவிதையாக மலர்வதும் உண்டு. அன்றி, ஒரோ ஒருகால் அவை கவிஞனின் உள்ளத்திலேயே பன்னாள் ஊறிக் கிடந்து "மெல்லவே கரு இருந்து" தெளிந்து வெளிப்படுவதும் உண்டு. ("Poetry takes its origin from emotion recollected in tranquility"—Wordsworth.) இவ்விருதிறக் கவிதைகளுக்கும் முறையே திருவாசகமும் திருக்கோவையாரும் மிகச் சிறந்த எடுத்துக்காட்டுகள் ஆகும். மாணிக்கவாசகரின் உள்ளத்தில் இயல்பாகப் பொங்கி யெழுந்த பத்திமை யுணர்ச்சி திருவாசகம் என்னும் தெய்விகக் கவிதையாக வெளிப்பட்டது. அதனைத் தங்கு தடையின்றிப் பொங்கிப் பெருகி இழுமென இழிதரும் திருக்குற்றால மலை யருவிக்கு ஒப்பிடலாம். "சிறைபெற நீர்போல் சிந்தைவாய்ப் பாயும் திருப்பெருந் துறையுறை சிவனே" என மாணிக்கவாசகர் தாமே அருளிச் செய்திருத்தல் ஈண்டுக் கருதுதற்



குரியது. திருக்கோவையார் இரண்டாம் வகைக் கவிதைகளைச் சேர்ந்தது. பெருக்கெடுத்து 'ஓடிவரும் வெள்ளத்தை அணைகோலித் தேக்கிக் கால்வாய்கள் பலபல கவினுற வகுத்து, அவற்றின் வழியே வயல்களுக்குப் பயனுறப் பாயவிடும் மேட்டூர்அணைத் திட்டம் போன்றது திருக்கோவையார்!

கவிதைகள் எல்லாம் கவிஞனின் பலதிற அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு எழுவனவாகும். கவிஞனின் அனுபவமாகிய அகவுணர்ச்சிகளைச் சொற்களின் வடிவில் மாற்றித்தரும் மொழிபெயர்ப்பே கவிதைகள் என்பர் அறிஞர். ("Poetry is the translation of experience into language.") கவிஞன் தனது அனுபவங்களைத் தன்னியல்பில் தன்னை அறியாமலே, "எனைநான் என்பதறியேன் பகல்இரவு ஆவதும் அறியேன் மனவாசகங் கடந்தான்எனை மத்தோன்மத்தன் ஆக்கினன்" என்றாற் போல, தன்வய மிழந்து வெளியிடுவதும் உண்டு. தனது அனுபவங்களைப் பிறர்க்கும் இனிதெடுத் தியம்பிப் புலங்கொள உணர்த்தி, அவற்றை மற்றையவர்களும் அடையச் செய்தல் வேண்டும் என விரும்பி வெளியிடுவதும் உண்டு. ("Poetry does not merely tell us what a man experienced, it makes his very experience itself live again in our minds, by means of the incantation of its words"—L. Abercrombie.) முன்னைய வகைக்குத் திருவாசகமும், பின்னைய வகைக்குத் திருக்கோவையாரும் தலைசிறந்த எடுத்துக்காட்டுக்கள் எனலாம். "நான் தனக்கு அன்பின்மை நானும் தானும் அறிவோம்" என்றாற் போல, இறைவனுக்கும் மாணிக்கவாசகருக்கும் இடையே நிலவிய தொடர்புகள் பற்றிய உணர்ச்சிகளைத் தன்னியல்பில் வெளியிடுவது திருவாசகம்! திருக்கோவையாரோ, "யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்னும் பேரருட் பெற்றி பற்றித் தாம் நுகர்ந்த இறையருள் இன்ப நலங்களை, மன்பதைக் கெல்லாம் நன்கினி தெடுத்துரைத் துணர்த்தி, "கடுத் தின்னுதானைக் கட்டி பூசிக் கடுத் தீற்றிய வாறு போல" உலகை உய்வித்தற் பொருட்டு இயற்றப் பெற்றதாகும். வேறொரு வகையாற் கூறலுறின், மாணிக்கவாசகரால் தம்முயிர்க்குறுதி வேண்டிப் பாடப் பெற்றது

திருவாசகம் எனவும், உலகுயிர்கட்குறுதிவேண்டிப் பாடம் பெற்றது திருக்கோவையார் எனவும் கூறலாம்.

திருவாசகம் மாணிக்கவாசகரின் பத்திமை வாழ்வின் பலதிறப் படிநிலைகளையும் பளிங்கென விளங்கக் காட்டுகின்றது. மாணிக்கவாசகரின் பலவகை மனநிலை அலைவுகள், கையறவு, உணர்ச்சித் தடுமாற்றம், அமைதியின்மை, வசறவு என்பன பலவற்றையும்கூட நாம் திருவாசகத்தின்கண் ஒரோவழி ஆங்காங்குக் காணலாம். ("Thiruvasakam depicts in beautiful hymns the progress of the soul........, its first awakening, its joy and exaltation, waywardness and despondency, struggle and unrest, the peace and the joy of union."—Dr. G. U. Pope) ஆனால், திருக்கோவையாரோ "சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட அத்தன் எனக்கு அருளியவாறு ஆர் பெறுவார்? அச்சோவே!" என்றாற்போல, இறையருளைக் "காழில் கனி" எனலாம்படிக் குறைவறப் பெற்றொளிர்ந்த நிறைபெரும் இன்ப நிலையின் உச்சியினின்று பாடப் பெற்றதாகும்.

" அயில்முகக் குலிசத்து அமரர்கோன் நகரும்,
அளகையும் என்றிவை அயனார்
பயிலுறவு உற்ற படிபெரும் பான்மை
இப்பெருந் திருநகர் படைத்தான்."

என்புழி, இந்திரனின் அமராவதியையும் குபேரனின் அளகாபுரியையும் முதற்கண் படைத்துப் பயின்றுகொண்டு, அதனாற் கைவந்த திறம்பற்றியே, பின்னர்ப் பிரமன் அயோத்தி நகரை அழகுறப் படைத்தான் என, அயோத்தி நகரின் அளப்பரும் சிறப்பைக் கம்பர் கவிநலம் அமையப் பாடியவாறு போலவும்; 'முதற்கண் வலியனவற்றை வயமாக்கிப் பயின்றுகொண்டு, அதன் பின்னரே இறைவன் என்னை ஆட்கொண்டான். கல்லை மென்கனியாக்கும் விச்சை கொண்டே என்னைத் தன் கழற்கு அன்பன் ஆக்கினான். என்னைத் தனக்கு அடிமை கொள்ளுதல் காரணமாகப் பிறிதொன்றின்மேல் இட்டுக் கல்லை வளைத்தான். கல்லினும் வல்லெனும் என் நெஞ்சத்தை வளைத்தல் காரணமாக, முதற்கண் பயின்று பழகிக் கொண்டதே யன்றித் தனக்கொரு பகையுண்டாய்ச் செய்ததன்று' என்னும் கருத்தில், "தெவ்வரை மெய்யெரி காய்சிலை ஆண்டு, என்னை ஆண்டுகொண்ட செவ்வரை மேனியன்" எனத் தாமே பாடியருள்வது போலவும்; மாணிக்கவாசகர் திருவாசகம் பாடித் தேர்ந்து கைவரப்பெற்ற சிறந்த சிவஞானத் தெளிவின் முதிர்வில் பாடியருளியதே திருக்கோவையார் எனின், அதன் அருமை பெருமைகளை யாம் என்னென்பேம்! "யாவையும் பாடிக் கோவை பாடுக" என வழங்கும் அறிஞர்களின் உரையும் ஈண்டு அறிந்தின்புறற்பாலது.



இனி, வேறு சிலவும் ஈண்டுக் கருதுதற்குரியன. காலத்தைப் படைப்பவனும் காலத்தாற் படைக்கப்படுபவனும் கவிஞன் ("A great poet is the creator and creature of his age"—W. H. Hudson) என அறிஞர்கள் கூறும் கூற்று, மாணிக்கவாசகருக்கும் பொருந்துவதாகும். அவர்தம் காலத்திற் "புத்தன் முதலாய புல்லறிவிற் பல்சமயம் தத்தம் மதங்களில் தட்டுளுப்புப்பட்டு நின்றன."

" ஆறு கோடி மாயா சத்திகள்
வேறு வேறுதம் மாயைகள் தொடங்கின.
ஆத்தம் ஆனார் அயலவர் கூடி
நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர்.
விரத மேபர மாகவே தியரும்
சாதம் ஆகவே சாத்திரம் காட்டினர்.
சமய வாதிகள் தத்தம் மதங்களே
அமைவ தாக அரற்றி மலைந்தனர்.
மிண்டிய மாயா வாதம் என்னும்
சண்ட மாருதம் சுழித்தடித் தாஅர்த்து,
உலோகா யதன்எனும் ஒண்டிறற் பாம்பின்
கலாபே தத்த கடுவிடம் எய்தி,
அதிற்பெரு மாயை எனைப்பல சூழ்ந்தன."

தமிழகத்தின் பொற்காலம் எனத் தகுந்த சங்க காலம் முடிவடைந்து கொண்டிருந்தது. சங்ககால நூல்களும் பழக்க வழக்கப் பண்பாடுகளும் சிதைந்து சீரழிந்துகொண்டிருந்தன. தமிழ் நாட்டில் வேற்றுவரும் வேற்றுக் கொள்கைகளும் நுழைந்து புகுந்தமையாற் பல பெருங் குழப்பங்கள் மக்கள் மனத்தில் நிகழ்ந்துகொண்டிருந்தன. மாணிக்கவாசகர் சங்க இலக்கியங்களை நன்கு பயின்றவர்.

சங்கப் புலவர்களையும், அவர்கள் வளர்த்த “தண்ணார் தமிழ்” மொழியையும் பெரிதும் விரும்பிப் போற்றியவர். சங்கத் தமிழில் அவர்க்கு இருந்த ஈடுபாட்டினை “உயர்மதிற் கூடலின் ஆய்ந்த ஒண்தீந் தமிழ்” எனப் போதரும் அவர் தம் பாராட்டுரை கொண்டு தெளியலாம்.

அத்துணைப் பெருநலஞ் சான்ற சங்ககால நாகரிகமும் பண்பாடும் இலக்கியங்களும் பிற சிறப்புக்களும் சிதைந்து சீரழியத் தலைப்பட்டமைக் குரிய காரணம் யாதென மாணிக்கவாசகர் ஆராய்ந்திருத்தல் கூடும்! சங்ககாலத் தமிழ் மக்கள் தூய காதல் வாழ்வைப் போற்றி ஒழுகினர். அக் காதல் வாழ்வில் நாளடைவில் “பொய்யும் வழுவும்” புகுந்தன. மக்களிடையே தீயொழுக்கங்கள் பரவின. சங்ககாலத் தூய காதல் வாழ்வு, பிற்றை நாளிற் றீய காமக் களியாட்டங்களாக மாறின போலும்! மிகச் சிறந்து விளங்கிய கிரேக்க உரோம நாகரிகங்கள் எல்லாம் ‘மருங் கறக் கெட்டு’ மாய்ந்து மறைய நேர்ந்தமைக்கு, அந் நாட்டு மக்கள் வளம் நிறைந்த செல்வச் செருக்கிலும் வரம்பிகந்த காமக் களியாட்டங்களிலும் தீய செயல்களிலும் ஈடுபட்டுழலத் தலைப்பட்டமையே ஒரு பெருங் காரணமாதலை அறிஞர்கள் அனைவரும் கூறக் கேட்கின்றனம் அல்லமோ?*

*“Despot succeeded despot, each rivaling each in cruelty. Claudius had his wife, Messalina, murdered; Nero, his mother, Agrippina; Commodus, his sister and his wife; Caracalla, his brother. Such gentle attentions appear to have been the rule in the imperial families. To make up for this, out of the fifty emperors who occupied the throne in the first three centuries of the regime thirty-seven died violent deaths—were poisoned, beheaded, stabbed, had their throats cut, or committed suicide. They were the victims of their relations, their wives, their mistresses, their soldiers, or—themselves. The Roman Principate was to offer an inexhaustible supply of subjects for the tragic writers of future centuries......Vice was everywhere in the ascendant. The most



அத்தகைய இழிநிலை தமிழ்நாட்டுக்கும் எய்துதல் ஆகாது எனப் பெரிதும் மாணிக்கவாசகர் மனக்கவற்சி யுற்றனர் போலும்! அதன் விளைவாகத் தமிழகத்தையும் உலகத்தையும் திருத்தி உய்வித்தற்கு எழுந்ததே திருக்கோவையார் எனலாம்.

திருக்கோவையாரின் சிறப்பினைக் குமரகுருபர சுவாமிகள் தாம் பாடியருளிய சிதம்பர மும்மணிக் கோவையின்கண், “காமஞ் சான்ற ஞானப் பனுவல்” என்னும் பொருள் பொதிந்த தொடராற் போற்றிப் பாராட்டுகின்றார். அப் பாராட்டுரை ஆழ்ந்த பெருங்கருத்து அமைந்ததாகும். சங்க நூல்களிற் ‘காதல்’, ‘காமம்’ என்னும் இரு சொற்களும் பெரும்பாலும் ஒத்த பொருளிலேயே இழிவுக் குறிப்பின்றி விரவி வருகின்றன. தொல்காப்பியர் அவ்விரண்டினையும் தூய பொருளிலேயே வழங்கியுள்ளார். திருவள்ளுவர் ‘காமம்’ என்னும் சொல்லைக் காமத்துப்பாலுள் நல்ல பொருளிலேயே ஆண்டிருக்கின்றார். ஆயினும், அவர் “காம வெகுளி மயக்கம்...” என்புழி அதனைத் தீய குறிப்பினும் பெய்துள்ளார். பரிபாடல் “காதற் காமம் காமத்துச் சிறந்

“enlightened” of the emperors, Trajan and Hadrian, practiced forms of sexual indulgence which are usually regarded as unmentionable, though Catullus hymned them in verse. Luxury and irreligion gave strength to debauchery. Rome had ceased to believe in anything, except, perhaps, in quacks and fortunetellers...Atheism and superstition flourished in Rome of the decadence.

—*The History of the World, Rene Sedillot.*

“When the ruling group and the society as a whole relax their sexual code, within three generations there is usually a cultural decline, as was the case in the later stages of the Babylonian, the Persian, the Macedonian, the Mongol, the Greek, and the Roman civilizations, as well as at the end of the Old and the Middle Kingdoms and of the New Empire, and during the Ptolemic period in Egypt.

—*Call For Sane Sex Order, Dr. P. A. Sorokin.*

தது" என அதனைப் பாகுபாடு செய்து பாடிக் காட்டுகின்றது. குறுந்தொகையின்கண்,

"காமம் காமம் என்ப காமம்
அணங்கும் பிணியும் அன்றே..." (136, 204)

என வரும் பாடல்களால், மக்களிடையே காமம் நன்றெனவும் தீதெனவும் இரு வேறு முரண்பட்ட கொள்கைகள் நிலவியமை தெளியப்படும். சொற்களும் அவை குறிக்கும் பொருள்களும், மக்களின் மனநிலைக் கேற்ப உயர்ந்தும் இழிந்தும் திரிபெய்துதல் இயல்பு. காலப் போக்கில் காதலும் காமமும் போன்ற சொற்கள் இழிபொருள் எய்தியமை, மக்கள் மனநிலையும் ஒழுக்க நிலையும் இழிவெய்தியமையினையே இனி துணர்த்தும் சான்றாகும். மக்களுள் ஒரு சாரார் காம வுணர்வை அறவே கடிய முயலுகின்றனர். மற்றொரு சாரார் அதன் வயப்பட்டொழுகி வருகின்றனர். இரு சாராரும் இருவேறு கோடியில் நிற்றலின், மாணிக்கவாசகர் அவ்விரு சாரார்க்கும் இடைநின்று பொதுவழி - புதுவழி ஒன்று கண்டார்.

"பெற்றசிற் றின்பமே பேரின்பமாய் அங்கே
முற்ற வரும்பரி சுந்தீபற
முளையாது பந்தமென் றுந்தீபற"

என்றாற் போலக் காதல் உணர்ச்சியோடு கடவுளுணர்ச்சியைக் கலந்து பாடினார். காமச் சுவையும் ஞானப் பொருளும் அமையத் தமது திருக்கோவையார் நூலை இயற்றினார். சங்ககாலப் புலவர்கள் தமது பாடல்களிற் காதலுணர்வைப் பாடிச் சென்றனராக, நம் மாணிக்கவாசகப் பெருமான் காதலுணர்வோடு கடவுளுணர்வையும் கலந்தியைத்து நலந்திகழப் பாடியருளிய திறன், அறிஞர் அனைவர்க்கும் ஆராப் பெருவிருந்து ஆவதாகும்.

சங்கம் தரும்முத்தி யாம்பெற வான்கழி தான்கெழுமிப்
பொங்கும் புனற்கங்கை தாங்கிப் பொலிகலிப் பாறுலவு
துங்கம் மலிதலை யேந்தலின் ஏந்திழை தொல்லைப்பன்மா
வங்கம் மலிகலி நீர்இல்லை வானவன் நேர்வருமே.

புரங்கடந் தானடி காண்பான் புவிவிண்டு புக்கறியா
திரங்கிடெந் தாய்என் றிரப்பத்தன் ஈரடிக் கென்இரண்டு
கரங்கள்தந் தான்ஒன்று காட்டமற் றுங்கதும் காட்டிடென்று
வரங்கிடந் தான்தில்லை அம்பல முன்றில்அம் மாயவனே.



ஓங்கும் ஒருவிடம் உண்டம் பலத்தும்பர் உய்யஅன்று
தாங்கும் ஒருவன் தடவரை வாய்த்தழங் கும்அருவி
வீங்கும் சுனைப்புனல் வீழ்ந்தன் றழுங்கப் பிடித்தெடுத்து
வாங்கும் அவர்க்கறி யேன்சிறி யேன்சொல்லும் வாசகமே.

காய்வயின் உள்ள குணமுமில் லேனைநற் றொண்டுகொண்ட
தீவயின் மேனியன் சிற்றம் பலமன்ன சின்மொழியைப்
பேய்வயி னும்அரி தாகும் பிரிவெளி தாக்குவித்துச்
சேய்வயிற் போந்தநெஞ் சேஅஞ்சத் தக்கதுன் சிக்கனவே.

---

# அறனும் அன்பும்

(முரு. பழ. இரத்தினம் செட்டியார்)

"அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை."

—திருக்குறள் - "அன்புடைமை" - 6.

இந்தக் குறளுக்குப் பரிமேலழகர் அரியதோர் உரை எழுதியிருக்கிறார். ஆனால் பரிமேலழகர் உரைக்கு மாற்றுரை சொல்வதில் இப்பொழுது அதிக ஆர்வம் காட்டப்படுவதால் இன்றைய எழுத்தாளர்களும் திருக்குறள் விரிவுரையாளர்களும் இதற்கு வேறு பல உரைகள் கூறி வருகின்றனர். நாம் இங்கு முதலில் மாற்றுரைகளை ஆராய்ந்து அப்புறம் பரிமேலழகர் உரையைக் கவனிப்போம்.

மாற்றுரை (1) "அறத்திற்கு மட்டும்தான் அன்பு துணைசெல்லும் என்று கூறுபவர்கள் அறியாதவர்கள். தீமையான செயல்களுக்கும் அன்பேதான் அடிப்படைத் துணையாகும்."

இங்ஙனம் உரை சொல்பவர்கள் இது பொருந்தும் என்பதற்கு அடியில் வருமாறு காரணம் காட்டுகிறார்கள்:—

"நோய்வாய்ப்பட்ட தாய்க்கு மருந்து வாங்கப் பணமில்லாத ஓர் ஏழை மகன் பிறர்க்குரித்தான ஒரு பொருளைத் திருடுகிறான். அவன்செயல் தீயதாக இருப்பினும் தாயிடத்துக்கொண்ட அன்பே அவனை இச்செயலில் ஈடுபடுமாறு

செய்கிறது. எனவே தீய காரியங்களுக்கும் அன்பேதான் அடிப்படைக் காரணமாக அமைகிறது என்பது இதனால் பெறப்படுகிறது.''

இவ்வுரையை ஆதாரமாக வைத்துத்தான் 'கல்கி' 'கள்வனின் காதலி' என்னும் கதையைத் துவங்கி இருக்கிறார். பலர் இவ்வுரை பொருந்தும் என நினைக்கிறார்கள்.

தீமைக்கு அன்பு துணையாகச் சில சமயங்களில் செல்லும் என்பதை ஒப்புக்கொள்ளலாம். ஆனால் எல்லாத் தீய காரியங்களுக்கும் அன்பே காரணம் எனக் கூறமுடியுமா? தாய்க்கு மருந்து வாங்குவதற்காகத் திருடுபவனும் இருக்கிறான்; சாராயம் வாங்கப் பணமில்லாமல் திருடுபவனும் இருக்கிறான். உலகியலில் பெரும்பாலும் பொறாமை, பகைமை, வெகுளி, வெறுப்பு, ஆசை, வெறி ஆகியவை காரணமாகவே மறச்செயல்கள் நடைபெறுகின்றன. அன்பு காரணமாக நடைபெறும் மறச்செயல்கள் மிகக் குறைவு. சிறுபான்மை அன்பு காரணமாக மறச்செயல்கள் நிகழ்வதை வைத்து மறத்திற்கும் அஃதே துணை என வரையறை செய்வது பொருந்துமா? '' அஃதே '' என்பதிலுள்ள ஏகாரம் எல்லா மறச்செயல்களுக்கும் அன்பே துணை எனப்பொருள் கொள்ளவேண்டிய நிலையில் அமைந்திருக்கிறது. ஓரோவழி அன்பு காரணமாக மறம் நிகழ்வதுண்டு என்பதைக் காட்டுவது வள்ளுவர் கருத்தாக இருக்குமானால், '' அஃதே துணை '' என இவ்வளவு அழுத்தமாகக் கூறியிருக்கமாட்டார். அறத்திற்கே அன்பு சார்பு எனச் சொல்பவர்கள் அறியாதவர்கள் என்று முதலடிக்குப் பொருள் சொன்னோமானால் அடுத்த அடியில்வரும் '' அஃதே '' என்பதிலுள்ள ஏகாரம் துணிவைக் காட்டும் தேற்றப்பொருள் தருமே அன்றி அசையாகப் பொருளின்றி நிற்காது. ஆகவே எல்லாத் தீமைக்கும் அன்பே அடிப்படை என்றால்தான் இந்தப் பொருள் பொருந்தும். பெரும்பான்மை அவா, வெகுளி, அழுக்காறு முதலியனவே தீமைக்கு அடிப்படை என்பதைச் சொல்லவேண்டுவதில்லை. ஒரு வேளை இந்த உரையைச் சொல்பவர்கள் அவா, வெகுளி முதலியன அன்பின் மாற்றுருவங்கள் என்று விவாதிக்க முயலலாம். நம் உள்ளத்தில் சத்துவ குணம் மேலிட்டு நிற்கும்பொழுது தோன்றுவது அன்பு; ரஜோ, தமோ குணங்கள் மேலிட்டு



நிற்கும்பொழுது தோன்றுவன வெகுளி, அவா முதலியவை. திரு. வி. கலியாண சுந்தரனார் அவர்கள் இதனை இன்னும் நன்கு விளக்கிப் பின்வருமாறு எழுதியுள்ளார்கள் .—

'' அறியாமையின் விளைவு அழுக்காறு, அவா, வெகுளி, முதலியன. அறிவின் விளைவு அன்பு, அருள், பொறுமை முதலியன.''

—திருக்குறள் விரிவுரை - பக்கம் 120.

அறியாமையில் விளையும் அவாவும் அறிவில் விளையும் அன்பும் ஒன்றுக்கொன்று மறுதலையாய் இருப்பதால் ஒரே குணத்தின் மாற்றுருவம் எனக் கூறமுடியாது. எனவே அன்பு வேறு; ஆசை வேறு. எல்லாம் ஒன்றென்றால் அறம், மறம் என்னும் வேறுபாடே அர்த்தமற்றதாகிவிடும்; அறநூற்கள் எழுதவேண்டிய அவசியமும் இல்லாமற் போகும்.

மறச் செயல்கள் பெரிதும் அன்புக்கு மாறுபட்ட குணங்களையே காரணமாகக்கொண்டு நிகழ்வதால், '' மறத்திற்கும் அஃதே துணை '' என்னும் அடிக்குச் சொல்லும் இந்த உரை பொருந்துமாறில்லை.

மாற்றுரை (2) '' மகன் பிழை செய்தால் அவன் திருந்தவேண்டும் என்பதற்காகத் தந்தை அவனைத் தண்டிக்கிறார். அவர் செய்யும் தண்டனை கொடுமையாக இருப்பினும், அன்பு காரணமாகவே அவர் அத்தண்டனையைச் செய்வதால் மறத்திற்கும் அன்பே துணை என்று கூறுவது பொருந்தும். ஆண்டவன் பாவிகளைத் தண்டிப்பதை மறக்கருணை என்று சொல்கிறோம். இதனைத்தான் '' மறத்திற்கும் அஃதே துணை'' என்னும் அடி குறிப்பிடுகிறது.''

இந்த உரை சிறிது பழமையானது என்பதைப் படிக்கும் பொழுதே அறிந்து கொள்ளலாம். ஏனெனில் புதிய உரைகாரர்கள் இறைவனின் மறக்கருணை பற்றிப் பேசமாட்டார்கள். சிவஞான சித்தியாரில் அருணந்தி சிவம் '' தந்தை பிழைசெய்த மகனைத் தண்டிப்பது செயல் வகையால் துன்பமாக இருப்பினும் கருத்து வகையால் அன்பேயாதல்போல இறைவன் நாம் செய்யும் தீவினைகளுக்காக

நம்மைத் தண்டிப்பதும் அருளேயாகும்'' எனக் கூறியிருக்கிறார். இதனை ஆதாரமாகக் கொண்டு இந்த உரை எழுந்திருக்கிறது. ஆனால் தந்தையும் இறைவனும் இயல்பிலே அன்பு மிகுந்தவர்கள்; அவர்கள் நம்மைத் தண்டித்தால் நாம் திருந்தவேண்டும் என்னும் நல்நோக்கொடு செய்திருப்பார்கள் என்பதைச் சந்தேகம் இன்றி ஒப்புக்கொள்ளலாம். ஆனால் உலகில் எத்தனையோ பேர் நம் முன்னேற்றம் கண்டு அழுக்காறுற்று, நம்மை அழித்துவிட வேண்டும் என்னும் நோக்கொடு நமக்குத் துன்பம் விளைவிப்பதைப் பார்க்கிறோம்; உலக வரலாற்றில் எத்தனையோ அரசர்கள் நல்லவர்களைப் பிடித்துச் சிறையிலிட்டுத் தண்டித்திருப்பதைக் காண்கிறோம். அங்ஙனம் இருக்கத் தண்டனைக்கெல்லாம் அன்பே காரணம் எனக் கூறமுடியுமா? ஆகவே இந்த உரையையும் நாம் ஏற்பதற்கில்லை.

மாற்றுரை (3) "அறத்திற்கு மட்டும் தான் அன்பு துணை என்று சொல்பவர்கள் அறியாதவர்கள்; வீரத்திற்கும் அன்பேதான் துணை ஆகும்."

திரு. டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் இந்த உரையைக் கூறியிருக்கிறார். புதிய உரையாக ஏதேனும் சொல்ல வேண்டும் என்பதற்காக இந்த உரை சொல்லப்பட்டிருக்கிறதென்றே நினைக்கவேண்டியதிருக்கிறது. வீரம் என்பது அறத்தின் கூறுகளில் ஒன்று. பத்துப்பேரைக் கொலை செய்துவிட்டுப் பொருள்களை அபகரித்துச் செல்வதை நாம் வீரம் என்று சொல்வதில்லை. நாட்டிற்காகவோ, கொள்கைக்காகவோ, தன்னையோ பிறரையோ காப்பாற்றுதற்காகவோ நேரான வழியில் போராடி உயிர் விடுவதையோ அல்லது வெற்றி காண்பதையோதான் வீரம் என்று கூறுகிறோம். ஆகவே "மறம்" என்னும் சொல் அறநோக்கோடு போராடும் பொழுதுதான், "வீரம்" என்னும் பொருள் தரும்; அறக்குறிக்கோள் ஒன்றுமில்லாத பொழுது "மறம்" என்பது "மூர்க்கம்" எனப் பொருள்படும். எனவே அறத்தின் கூறுகளில் ஒன்றாகிய வீரம் என்பதை இவ்விடத்தில் இழுத்துப்போட்டுப் பொருள் சொல்வதில் கருத்தே இல்லாமற்போகிறது. "அறத்திற்கே அன்பு துணை என்று சொல்பவர்கள் அறியாதவர்கள்; அறத்தின் கூறுகளில் ஒன்றாகிய வீரத்திற்கும் அன்பேதான் துணை" எனக் கூறுவது முன்



னடியில் சொன்னதையே பின்னடியில் திருப்பிச்சொன்னதாகுமன்றி அறத்திற்கு மாறுபட்ட மறத்திற்கும் அஃதே துணை என்பதற்குப் பொருள் சொன்னதாகாது.

மாற்றுரை (4) "அறத்திற்கு மட்டுமே அன்பு துணையாகும். மறத்திற்கும் அஃதே துணை என்று சொல்பவர்கள் அறியாதவர்கள்."

இந்த உரையை நாமக்கல் கவிஞர் திரு. வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் எழுதியிருக்கிறார்கள்.

"அறத்திற்கே அன்பு சார்பு" என்னும் அளவில் நிறுத்தி, "என்ப அறியார்" என்னும் சொற்களைப் பின்னடியில் கொண்டுவந்து சேர்த்து, "மறத்திற்கும் அஃதே துணை என்ப அறியார்" எனப் பொருள் கூறியிருக்கிறார்கள். இங்ஙனம் பொருள் சொல்வதில் தவறில்லை. செய்யுட்களில் வரும் சொற்களைப் பிரித்துக் கூட்டி உரை சொல்ல உரிமை உண்டு. ஆனால் கருத்து வகையால் இந்த உரை சிறப்புடையதெனக் கொள்ள முடியவில்லை. அறத்திற்கு மட்டும்தான் அன்பு சார்பு என வரையறை செய்தால், ஒரோவழி அன்பு காரணமாக நடைபெறும் மறச்செயல்களுக்கு என்ன சமாதானம் சொல்வது? அன்பு காரணமாக அச்செயல்கள் நடைபெறவில்லை என விவாதிக்க முயல்வது இரக்கமற்ற தன்மையைக் காட்டுமே அன்றி உண்மை நிலையை உணர்ந்து பேசுவதாகாது. அன்பு காரணமாக நடைபெறும் தீச்செயல்களை நாம் அங்கீகரிக்க முடியாதென்றாலும் அவற்றை அநுதாபத்தோடு நோக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்த அநுதாப உணர்ச்சி இல்லாவிட்டால் அறம் என்பதே வெறும் ஆடம்பரத்திற்காகப் பேசப்படும் தத்துவமாகிவிடும். அறத்திற்கே அன்பு சார்பு என வரம்பு கட்டி, மறத்திற்கும் ஒரோவழி அன்பு துணைசெல்லும் என்று சொல்பவர்களை அறியாதவர்களென்று சொல்லிவிட்டால், அநுதாப உணர்ச்சி தோன்றுவதற்கே இடமில்லாமற் போய்விடும். எல்லாத் தீயசெயல்களுக்கும் அன்பே துணை என வரையறை செய்து சொல்வது பொருந்தாது என முன் குறிப்பிட்டோம். அதேபோல அறத்திற்கு மட்டும்தான் அன்பு சார்பு என வரையறை செய்யும் இந்த உரையும் பொருந்தாது எனக் குறிப்பிட விரும்புகிறோம்.

இனிப் பரிமேலழகர் உரையைக் கவனிப்போம். அவர் உரை வருமாறு :—

“அன்பு துணையாவது அறத்திற்கே என்று சொல்லுவர் சிலர் அறியார்; ஏனை மறத்திற்கும் அவ்வன்பே துணையாவது.”

ஒருவன் செய்த பகைமை பற்றி உள்ளத்து மறம் நிகழ்ந்துழி அவனை நட்பாகக் கருதி அவன்மேல் அன்பு செய்ய அது நீங்குமாதலின், மறத்தை நீக்குதற்கும் துணையாம் என்பார், ‘மறத்திற்கும் அஃதேதுணை’ என்றார், “துன்பத்திற்கு யாரே துணையாவார்” என்புழிப் போல.”

“அறத்திற்கு மட்டும்தான் அன்பு துணை எனச் சொல்பவர்கள் அறியாதவர்கள்; மறத்தை நீக்குவதற்கும் அன்பேதான் துணை” என்பது பரிமேலழகர் உரையின் கருத்து.

நம் உள்ளத்தில் பகைமை உணர்ச்சி மேலிட்டு நிற்கும்பொழுது அதனை நீக்குதற்கு ஒரேவழி நமக்குத் தீங்கு இழைத்தார்மீது அன்பு கொள்ளுவதேயாகும். அங்ஙனம் அன்பு கொள்ளும்போது நம் உள்ளத்தில் எழுந்த மற உணர்ச்சி நீங்குவதோடு நம்மீது பகைமை காட்டினார் நெஞ்சத்தும் அவ்வன்புணர்ச்சி நெகிழ்ச்சியை உண்டு பண்ணி நிரந்தர நேசம் ஏற்பட வழி செய்யும். உள்ளத்துள் அன்புணர்ச்சியை வளரவிடாது தீமை புரிந்தார்மீது பகைமைகொண்டு நாமும் பதிலுக்குத் தீமை புரிந்தோமானால் மேன்மேலும் தீமை பெருகுமே அன்றி அமைதி ஏற்படாது. “அன்பு அற உணர்ச்சி உள்ள இடத்தில்தான் பயன்படும். பலாத்காரம் தாண்டவமாடும் இடத்தில் பதிலுக்குப் பலாத்காரத்தைக் கைக்கொண்டால்தான் அடங்குமே அன்றி அன்பைக் கடைப்பிடித்தால் அஃது அடங்காது” எனச் சொல்பவர்கள் உலகில் உண்டு. ஆனால் பெரியோர்கள், “பலாத்காரத்தை நீக்க அன்பு ஒன்றேதான் வழி” என நமக்குப் போதிக்கிறார்கள். “அஃதே துணை” என்பதிலுள்ள ஏகாரம் இந்த முடிவில் வள்ளுவர் கொண்ட உறுதியை நமக்குத் தெரிவிக்கிறது. தீமையை ஒழிக்க அன்புதான் துணை என்பதை வள்ளுவர் போன்ற பெரியவர்கள் வரையறை செய்து சொல்லக் கடமைப் பட்டிருக்கிறார்கள். நாம் அன்பின் வலிமை பற்றிச் சந்தேகப்படலாம். ஆனால் பெரியோர்களுக்கு அந்தச் சந்தேகம் இல்லை. அதனால்தான் உறுதியொடு அதனைத் தெரிவிக்கிறார்கள். அஹிம்சா தர்மப் பெருநெறியின் அடிப்படையான தத்துவத்தை இந்த உரைமூலம் பரிமேலழகர் எடுத்துக் காட்டுவது ஒரு தனிச் சிறப்பாகும். “மறத்தை நீக்குதற்கும்” என நுட்பமாக அவர் உரை எழுதிய திறம் மிகவும் பாராட்டற்குரியது.



செய்யுளில், “மறத்திற்கும் அஃதே துணை” என்று இருக்கிறது; பரிமேலழகர் வலிந்து “மறத்தை நீக்குதற்கும்” என உரை எழுதுவது பொருந்துமா? என்று கேட்கலாம். “ஆபத்திற்கு நீயே துணை” என்றால் “ஆபத்தை உண்டாக்குவதற்கு நீயே துணை” என்று யாரும் பொருள் கொள்வதில்லை. “ஆபத்தை நீக்குவதற்கு நீயே துணை” என்றுதான் பொருள் கொள்வோம். திருவள்ளுவர் காமத்துப்பாலில், “நெஞ்சொடு புலத்தல்” என்னும் அதிகாரத்தில் “துன்பத்திற்கு யாரே துணையாவார் தாமுடைய, நெஞ்சம் துணையில் வழி.” எனக் கூறியிருக்கும் குறளில், “துன்பத்திற்கு யாரே துணையாவார்” என்பதற்குத் “துன்பத்தை நீக்குவதற்கு யாரே துணையாவார்” எனப் பொருள் கொள்வதுபோல, இந்தக் குறளில் “மறத்திற்கும் அஃதேதுணை” என்பதற்கு “மறத்தை நீக்குதற்கும் அன்பேதுணை” எனப் பொருள் கொள்ள வேண்டும் என்று பரிமேலழகர் எழுதியிருக்கிறார். ஆகவே இது வலிந்து கூறியதாகாது.

“மறத்திற்கும் அஃதேதுணை” என்பதற்குப் “பலாத்காரத்தை ஒழிப்பதற்கும் அன்பே துணை” எனக் கூறியிருக்கும் கருத்து யாவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய ஒன்றாகும். பலாத்காரத்தில் நம்பிக்கைகொண்ட மேல்நாட்டு அரசியல் வாதிகளும் இப்பொழுது இதனை ஒப்புக்கொள்கிறார்கள். ஆத்திகர், நாத்திகர், யாவரும் இதனை ஏற்று இன்றைய உலகிற்கு இது மிகவும் அவசியம் எனக் கூறி வருகின்றனர். எனவே புதிய உரைகாரர்கள் இதனை மறுப்பதற்குக் காரணம் என்ன என்பது தெரியவில்லை. எல்லா இடங்களிலும் தீமையை ஒழிக்க அன்பே துணை என்பது பெரியோர்களின் தீர்க்கமான முடிவு. இதில் கருத்து வேறுபாடு கொண்டவர்களும்கூட வள்ளுவர் வாக்குக்கு

இத்தகைய உரைதான் உயர்வு தரக்கூடியது என்பதை மறுக்க முடியாது. உலகமெங்கும் திருக்குறளைப் பரப்ப வேண்டுமென்றால் இம்மாதிரியான பெருமைமிக்க உரைகளை நாம் பயன்படுத்த வேண்டுமே அன்றிப் பொருட்சிறப்பில்லாத சாதாரண உரைகளைக் கூறிக்கொண்டிருக்கக் கூடாது.

பரிமேலழகர் உரைக்கு மாற்றுரை சொல்பவர்கள் அந்த உரையிலும் பார்க்க மிக்க கருத்தாழமும், நயமும் உள்ள உரைகளைச் சொல்லவேண்டும். "தீமைக்கு அன்பு துணை" என்றும், "வீரத்திற்கு அன்பு துணை" என்றும் சொல்கின்ற உரைகள் திருக்குறளின் தரத்தை வெளிநாட்டார் குறைத்து மதிப்பிடும்படியாகச் செய்துவிடும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு இதனை முடிக்கின்றோம்.

---

# சேவற் கொடி

(திருப்பாதிரிப்புலியூர்-வித்துவான் - திரு. க. சம்பந்தன்)

இக்காலத்தில் எங்கு பார்த்தாலும் மாநாடுகள் நடைபெறுகின்றன. தொழிலாளர் மாநாடுகள், உழவித் தொண்போர் மாநாடுகள், அரசியற் கட்சியாளர் மாநாடுகள், சமயத்துறை மாநாடுகள், விஞ்ஞானத்துறை மாநாடுகள், சமூக மாநாடுகள், வணிகத்துறையாளர் மாநாடுகள், பாவை மாநாடுகள், காப்பியம், திருமுறை, திருக்குறள் முதலிய நூற்களையொட்டி நடைபெறும் மாநாடுகள் எனப் பற்பல மாநாடுகள் நடைபெற்று வருவதை நாம் கண்டும் கேட்டும் வருகின்றோம். இம் மாநாடுகளில் முதற்கண் நடைபெறும் நிகழ்ச்சி யாது? அதுதான் கொடி ஏற்றுதலாகும். இக்கொடியேற்றம் திருக்கோவில்களின் பெருவிழாக் காலங்களிலும் நடைபெறுவதைக் காணலாம். பண்டு ஆட்சி புரிந்து வந்த அரசர்கள் அனைவரும் தத்தமக்கென ஒப்பற்ற ஒவ்வொரு கொடியினையுடையவராயிருந்து வந்துள்ளனர். அவர்களைப் போலவே இந்நாளில் உலகில் உள்ள அரசர்கள் அனைவரும் ஒவ்வொரு கொடியினை வகுத்துக்கொண்டு வானளாவப் பறக்க விடுகின்றனர். உலகப் பொதுச் சபையில் பங்குகொண்ட அனைத்து



நாடுகளின் கொடிகள் எல்லாம் அங்குப் பறந்தாடுகின்றன என்பதை அறியும்போது கொடியில்லா நாடுகளே இல்லை, கொடியில்லா மாநாடுகள் இல்லை, கொடியேறாக் கோவில்களும் இல்லை என்பதையும் நாம் உணரலாம்.

உலகில் உள்ள யாவராலும் போற்றப்படும் தகுதியுடையவர் கடவுள், ஆசிரியர், அரசர் என்பவர். அவர்கள் மிக்க சீர்மையுடையவர். அன்னாரைச் சூழ்ந்து இருப்பவை எல்லாமும் போற்றத்தகும் தன்மையுடையனவே. அவற்றுள் சிறந்தன பத்து. அவை தசாங்கம் எனப்படும். அவை திருப்பேர், நாடு, நகரம், ஆறு, மலை, ஊர்தி, படை, முரசு, மாலை, கொடி என்பவைகளாம். மணிவாசகப் பெருமான் தன்னையாட்கொண்ட குருநாதனாகிய சிவபெருமானது அங்கங்கள் பத்தினையும் புகழ்ந்து ஓதிய பதிகத்திற்குத் திருத்தசாங்கம் என்று பெயர். அப்பத்தினுள் சிறந்தது கொடி.

கொடிகள் அவரவர்கட்கு வேறு வேறு வகையாக அமைந்துள்ளன. அவற்றுள் சில அத் தலைவரின் அடையாளங்களைக் குறித்துக் காட்டுவன. சில அவரது நல்லொழுக்கங்களை எடுத்து விளக்குவன. சில கொடையால் வந்த புகழினை நாட்டுவன. சில பெருமையால் வந்த ஒளியினை நிறுவுவன. சில அவரது வெற்றியினைக் கூறுவன. சில அவர் மேற்கொண்டுள்ள பணிவை அறிவிப்பன. சில அவர் பணியாமையை உணர்த்துவன. சில தமது நாட்டின் எல்லைக்கு வரம்பைக் காட்டி நிற்பன. சில பெரியோர்களது எண்ணங்களையும் தீர்மானங்களையும் உணர்த்துவன. சில அவர் கொள்கைகளைப் புகல்வன.

கடவுளர்க்கு அவரவர் ஊர்ந்து செல்லும் ஊர்திகளே கொடிகளாக அமைந்துள்ளன. அக் கொடிகள் அம் மூர்த்திகள் வந்த வரலாற்றினையும் அன்பர்கட்கு அவர் அருளிய அருளிப்பாட்டினையும் நன்கு விளக்கா நிற்பன. தேவர்கள் பலர்; அவர்கள் கொடிகளும் பல. எடுத்துக் காட்டாகச் சிவபெருமானுக்கு இடபமும், திருமாலுக்குக் கருடனும், அயனுக்கு அன்னமும், ஐங்கரனுக்கு ஆகுவும், மன்மதனுக்கு மீனமும் கொடிகளாகும். இதிகாசங்களில் வரும்

தெய்வாம்சம் பெற்ற தலைவர்கட்கும் ஒவ்வொரு கொடி உண்டு. முரசக்கொடி, அநுமக்கொடி, அரவக்கொடி, வீணைக் கொடி முதலான கொடிகளும் தமிழ் வேந்தர்கட்கு விற் கொடி, புலிக்கொடி, மீனக்கொடி முதலான கொடிகளும் இருந்துள்ளன. ஆனால் நாம் இங்கு ஆராய்தற்குரிய கொடி அரும்பெறல் மரபிற் பெரும்பெயர் முருகன் தன் அங்கையில் தாங்கிய சேவற் கொடியாகும். நமது அறுமுகப் பெருமா னுக்குத் தன்ஊர்தியாகிய மயிலும் கொடியாகும். இதனை "பல் பொறி மஞ்ஞை வெல்கொடி அகவ" என்பதனானும் அறிய லாம். சிறப்பாக எங்கும் முருகன் திருக்கரத்தில் எந்நாளும் நீங்காது நிற்கும்தகையது சேவற்கொடியேயாகும். "சேவலங் கொடியோன் காப்ப ஏமவைகல் எய்தின்றால் உலகே" என் பது குறுந்தொகைக் கடவுள் வாழ்த்து. "சேவற்கொடி யாய் திருச்செந்தூர்த் தேவா" என்பது பிள்ளைத் தமிழ்.

முருகன் என்ற சொல் முருகு+அன் எனப் பிரிக்கப் படும். முருகு என்பது மணம் இளமை அழகு கந்தழி (தெய்வத்தன்மை) ஆம் பொருள்களை உணர்த்தும் பல பொருள் ஒரு சொல். கந்தழி என்பது தெய்வத்தன்மை. மனிதத் தன்மையினைக் கடந்தது தெய்வத் தன்மை. மனிதத் தன்மை பற்றுடன் நிற்பது. தெய்வத் தன்மை பற்றற்ற தன்மையுடையது. இன்னும் தனக்கு ஒரு சார்பும் இல்லா தது. பலர்க்கும் சார்பாயுள்ளது. அருவாய் இருப்பது. மனம் மொழிகளைக் கடந்து நிற்பது. ஒளிமயமானது. இன்னும் பல பெருமை வாய்ந்தது.

முருகு என்னும் ஒரு பரம்பொருளே மும்மூர்த்தி கட்கும் முத்தொழில் இயற்ற ஆற்றலைத் தந்தது. கணபதி கந்தன் முதலிய கடவுள்களாக உருக் கொண்டுவந்தது. இன்னும் பலவேறு சமயத்தினர் போற்றும் கடவுளர் கண்ணும் நின்று அவரவர் கருத்தின் வழியொழுகி அருள் செய்வதும் இதுவே. இதுவே அருவநிலை. முருகனாக உருவநிலை கொண்டபோதும் மயிலும் சேவலும் உண்டு. அருவநிலையிலும் சேவலும் மயிலும் உண்டு. முருகனாகிய உருவ நிலையில் வந்த சேவல் காலையில் கூவி உறங்கி இருந்த



உலகினர்களை எழுப்புகிறது. ஒளிதரும் சூரியன் வருகையினை உணர்த்துகிறது. பரம்பொருளாகிய அருவநிலையில் உள்ள முருகுவின்பால் உள்ள சேவல் நாதமாகும். மயில் விந்து வாகும். நாதம் ஆகின்ற சேவல் இறைவன் ஒடுங்கிச் செய லற்று அறிவற்று அமைந்து கிடந்த ஆன்மாக்கட்குச் செய லும் அறிவும் இன்பமும் வர ஒலிக்கிறது. விந்துவாகிய மயில் அவர்கட்கு உடலாய் நின்று உலகத்தினைத் தாங்கு கின்றது. உலக மயமாகிய முருகனையும் தாங்குகிறது. இச் சேவல் கூவ உலகம் உண்டாகின்றது.

சேவல் கேவலம் ஓர் பறவை என எண்ணலாகாது. நாம் எந்நாளும் அதனைப் புகழவேண்டும். அருணகிரியாரும் "ஆடும் பரிவேல்அணிசேவல் எனப் பாடும்பணியே பணியாய் அருள்வாய்" என்று முருகனை வேண்டுகின்றார். "சேவலும் மயிலும் போற்றி" என்றும் "குக்குடம் வாழ்க, செவ்வேள் ஏறிய மஞ்ஞை வாழ்க" என்று கச்சியப்ப சிவாசாரியாரும் போற்றி வாழ்த்தியுள்ளார். நாதமாக இருந்து உலகத்தினைப் படைத்த சேவல், உலகத்தினைக் காத்த சேவல், தனது நாதத் தில் ஒடுங்கும் சேவல், முருகனுடைய அருளைப் பெற்ற சேவல், தேரின்மீது இருந்து ஆரவாரித்த சேவல் அம் முருகப்பெருமான் திருக்கரத்தில் என்றும் இருந்து அஞ்ஞான இருளில் அழுந்திக் கிடக்கும் ஆன்மாக்களை எழுப்பி ஞான ஒளியைக் கண்டு திருவருள் பெறும்படிச் செய்யக் கருணைகொண்டு நாளும் விடியற் காலத்தில் இருபத் தைந்து நாழிகைகட்கெல்லாம் திருப்பள்ளி எழுச்சியாகக் கொக்கறு கோகோ! கொக்கறு கோகோ என்று கூவுகிறது. என்பதை-நாமெல்லாம் அறிந்துகொள்ள வேண்டும். அங் ஙனமே எழுந்து முருகனையும், அவன் கரத்திருக்கும் சுடர் வடிவேலையும், அவன் ஊர்தியாம் மயிலையும், கொடியாம் கோழியையும் வாயார வாழ்த்துதல் வேண்டும். உள்ளம் நினைக்கவேண்டும். உடல் வணங்க வேண்டும். மணிவாசகப் பெருமானும் "கோழி சிலம்பச் சிலம்பும் குருகு எங்கும்" என்றும், "கூவின பூங்குயில் கூவின கோழி" என்றும் கோழி பள்ளி எழுச்சி பாடுவதைப் பாடுகிறார். ஆகவே நாம்

கோழிக் கொடியோன் அடிபணிய வேண்டும் என்று கூறி இக்கட்டுரையை முடிக்கிறேன்.

" கோழிக் கொடியோன் அடிபணி யாமல் குவலயத்தே
வாழக் கருதும் மதியிலிகாள் உங்கள் வல்வினைநோய்
ஊழிற் பெருவலி யுண்ணவொட்டா துங்களத் தமெல்லாம்
ஆழப் புதைத்து வைத்தால் வருமோ நும் மடிப்பிறகே "

—கந்தரலங்காரம்

## மதிப்புரை

திருவாசக விழாச் சிறப்பு மலர் : திருச்சிராப்பள்ளி அருள்நெறித் திருக்கூட்டச் சார்பில் சென்ற மாதம் நடைபெற்ற திருவாசக விழாவின்போது வெளியிடப்பெற்ற இச் சிறப்பு மலரில் சிவத்திரு. குன்றக்குடி அடிகளார் முதலிய பல பேரறிஞர்களால் எழுதப் பெற்ற 25 கட்டுரைகள் அடங்கியுள்ளன. திருவாசகத்தினைக் குறித்துப் பலவேறு தலைப்புக்களில் எழுதப் பெற்றுள்ள அக்கட்டுரைகள் அனைத்தும் அன்பர்களுக்கு ஆராப் பெருவிருந்தாகும். திருவாதவூர் திருப்பெருந்துறை முதலிய திருக்கோயில்களும், மாணிக்கவாசகரின் பலவேறு படிமங்களும் கண்கவர் வனப்பு மிக்க நிழற்படங்களாக மலரின்கண் இணைக்கப்பட்டுள்ளன. நல்ல தாளில் அழகுற நன்கினிது பதிக்கப்பட்டுள்ளது. பக்கங்கள் 150, விலை ரூபாய் இரண்டு. வேண்டுவோர் திருச்சி அருள்நெறித் திருக்கூட்டச் செயலாளர் திரு. சோ. கிருஷ்ணன் (58, வன்னியடித் தெரு, மலைக் கோட்டை, திருச்சி-2.) அவர்களுக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

---

" தேவாரத் தல வணக்கம்" - காரைக்குடி சிவநேசர் திருக்கூட்டம் பதிப்பித்தது. போற்றித் திரு அகவல் முறையில் பாடப்பெற்றுள்ளது. தேவாரத்தில் வந்துள்ள பாடல் பெற்ற சிவஸ்தலங்கள் யாவும் அதிலுள்ளன. 8 புதுக்காசுத் தபால் பில்லைகள் "திரு. ராய. சோ. திருநாவுக்கரசு, சிவநேசர் திருக்கூட்டம், காரைக்குடி" என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

# குடம்பையும் புள்ளும்

(திரு. பி. கிருஷ்ணசாமி)

செந்நாப் புலமைத் திருவள்ளுவர்பெருமான் தலைசிறந்த கவிஞர் ; துறைபோய மெய்யுணர்வின் விளக்கம் ; பல்கலைக் குரிசில். ஒருவர் சிறந்த கவிஞரா எனக் காண்பதற்கு எண்ணற்ற உரைகற்கள் உள்ளன. " எவனும் ஆழ்ந்த மெய்யுணர்வாளனு யிராமல், ஒருபோதும் ஓருயர்ந்த கவிஞனாய் இருந்ததில்லை," ("No man was ever yet a great poet, without being at the same time a profound philosopher"—*S. T. Coleridge.*) என்ற ஓர் உரைகல்லினை மேனாட்டு ஆசிரியர் ஒருவர் படைக்கின்றார். இவ்வுரைகல்லில் தீட்டிக்காணுங்காலும், உலகப் புகழ்பெற்ற திருவள்ளுவரின் புலமைப்பசும்பொன்னொளி மாற்றில் உயர்ந்தே துலங்குகின்றது. திருவள்ளுவரில் கவிதை நலமும், மெய்யுணர்வின் விளக்கமும், ஒளியும் நிழலும் போலவே ஒத்தியைந்து திகழ்கின்றன. கவிதைநலம் பிறங்குமிடத்திலே மெய்யுணர்வு மெலிந்திருப்பது, கண்ணுக்கு இனிமையும், தின்னற்குக் கசப்புமாய எட்டிக்கனி போன்றது. கவிதை நலமின்றி மெய்யுணர்வின் விளக்கம் மட்டும் இருப்பது, உடலுக்கு உரனூட்டினும் நாவிற்குச் சுவையில்லா மருந்தினைப் போன்றது. ஆனால், கவிதை நலமும், மெய்யுணர்வின் விளக்கமும் ஒருங்கே விரவித் திகழ்வதோ நாவிற்கு மட்டுமன்றி உடலுக்கும் பெருநலன் விளைக்கும் இன்னமிழ்தம் போன்றது! இவ்விரு நலனும் ஒருங்குறுமையால் மேனாட்டிலும் நம் நாட்டிலும் எத்தனையோபேர் திறனாய்வாளர்களின் போற்றுதலைப் பெறாது போயினர். ஆனால், ஆசிரியர் திருவள்ளுவரோ இவ்விரு பெருநலனும் ஒருங்கு வாய்க்கப் பெற்ற பெரும் புலவர்! அதனால்தான் அவர் பிறமொழியினராலும் புகழ்ந்து இசைபாடப் பெறுகின்றார். அவ்வரும் பெரும் புலமை, திருக்குறள் முழுமையிலும் பரவிக்கிடக்கக் காணலாம். அவ்வரும் 'பெறற் புலமை நலத்தின்' பெற்றி தெளிய "ஒரு குழிசிச் சொன்றிக்கு ஒரு சோறு பதமாம்"

என்னும் முறைமைபற்றி, ஒரேஒரு குறள் மணியினை ஆராய்தலே ஈண்டைக்கு அமையும் :

" குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு "

என்பது திருவள்ளுவரின் திருக்குறள் மணிகளுள் ஒன்று. " நிலையாமை " என்னும் தலைப்பிற் காணப்படும் மிகச் சிறந்ததொரு கருத்தோவியமாகக் கவினுற்றுத் திகழ்கின்றது. உடம்புக்கும் உயிர்க்கும் இடையே நிலவும் தொடர்பினை இத் திருக்குறளின் வாயிலாகத் திருவள்ளுவர் இனிது விளக்கி யருள்கின்றார். மணக்குடவர்,

" கூடு தனியே கிடக்கப் புள்ளுப் பறந்து போனாற்போலும், உடம்போடு உயிர்க்கு உள்ள நட்பு "

என இத் திருக்குறட்குப் பொருள் காண்கின்றார். ஆனால், ஆசிரியர் பரிமேலழகரோ,

" முன் தனியாத முட்டை தனித்துக் கிடப்ப அதனுள் இருந்த புள்ளுப் பருவம் வந்துழிப் பறந்து போன தன்மைத்து, உடம்பிற்கும் உயிர்க்கும் உளதாய நட்பு "

என மணக்குடவரிற் சிறிது வேறுபட்டு உரை வகுக்கின்றார். தம் உரை வேறுபாட்டிற்குப் பரிமேலழகர் பின்வருமாறு விளக்கமும் கூறுகின்றார்.

" இனி, ' குடம்பை ' என்பதற்குக் ' கூடு ' என்று உரைப்பாரும் உளர். அது புள்ளுடன் தோன்றாமையானும், அதன்கண் அது மீண்டு புகுதல் உடைமையானும், உடம்பிற்கு உவமையாகாமை அறிக."

இங்ஙனம் மணக்குடவர் முதலினோர் உரையினை மறுப்பது மட்டுமே யன்றி, இத்திருக்குறட்குப் பரிமேலழகர் வரைந்துள்ள சிறப்புரை பொன்னினும் மணியினும் போற்றத் தகுவதாய்ப் பொலிகின்றது. அவ்வழகிய இனிய சிறப்புரை வருமாறு :

" ' தனித்தொழிய ' என்றதனால் முன் தனியாமை பெற்றாம் : அஃதாவது கருவும் தானும் ஒன்றாய்ப் பிறந்து வேறாந்துணையும் அதற்கு ஆதாரமாய் நிற்றல் ; அதனால், அஃது உடம்பிற்கு உவமை யாயிற்று. அதனுள் வேற்றுமை யின்றி நின்றே பின் புகாமற் போகலின் புள் உயிர்க்கு உவமை யாயிற்று. முட்டையுட் பிறப்பன பிறவும் உளவேனும் புள்ளையே கூறினார். பறந்து போதற் றொழிலான் உயிரோடு ஒப்புமை எய்துவது அதுவே யாகலின். ' நட்பு ' என்றது ஈண்டுக் குறிப்பு மொழியாய் நட்பின்றிப் போதல் உணர்த்தி நின்றது. சேதனமாய் அருவாய் நித்தமாய உயிரும், அசேதனமாய் உருவாய் அநித்தமாய உடம்பும் தம்முள் மாறுகலின் வினைவயத்தாற் கூடியதல்லது நட்பில என்பது அறிக."



ஆசிரியர் பரிமேலழகர் இவ்வழகிய இனிய உரையினால் மணக்குடவரின் உரையினை மறுத்துரைத்துள்ளாராயினும், மணக்குடவர் அங்ஙனம் உரை வரைந்தமைக்கு உரிய காரணம் இல்லாமற் போகவில்லை. " குடம்பை " என்னும் சொல் பழந்தமிழ் இலக்கியங்களில் யாண்டும் 'முட்டை' என்னும் பொருளில் வழங்கப் படாமையினை நினைந்தே அவர் 'கூடு' என்று பொருள் கொண்டனராதல் கூடும்.

" மனையுறை குரீஇக் கறையணற் சேவல்
பாணர் நரம்பின் சுகிரொடு வயமான்
குரற்செய் பீலியின் இழைத்த குடம்பை " (புறம் - 378)

" வெள்ளியும் இருவிசும்பு ஏர்தரும், புள்ளும்
உயர்சினைக் குடம்பைக் குரல்தோற் றினவே " (புறம் - 397)

என்பன போன்ற பாடற் பகுதிகளில் 'குடம்பை' என்னும் சொற்குக் ' கூடு ' என்னும் பொருளே ஆட்சியில் உள்ளது. மேலும்,

" கேளாதே வந்து கிளைகளாய் இற்றோன்றி
வாளாதே போவரால் மாந்தர்கள்—வாளாதே
சேக்கை மரன்ஒழியச் சேண்நீங்கு புட்போல
யாக்கை தமர்க்கொழிய நீத்து "

எனவரும் நாலடியார் வெண்பாவினை ஆதாரமாகக் கொண்டும் மணக்குடவர் தம் உரையினை வகுத்தனராதல் வேண்டும்.

இனி, ஆசிரியர் பரிமேலழகர் ' குடம்பை ' என்னும் சொல்லுக்கு 'முட்டை' என்பது நேர்முகப் பொருளன்றாயினும், அதனைக் கொண்டமைக் குரிய காரணம்,

" காண லாம்பரமே கட்கிறந்ததொர்
வாணி லாப்பொரு ளேயிங்கொர் பார்ப்பெனப்

பாண னேன்படிற் றாக்கையை விட்டுனைப்
பூணு மாறறி யேன்புலன் போற்றியே "

எனவரும் அரிய திருவாசகத் திருமொழியினை நினைந்து, அதனை ஆதாரமாகக் கொண்டமையே போலும். மாணிக்க வாசகப்பெருமான் தமது திருவாசகத்துள்,

" உரைமாண்ட உள்ளொளி உத்தமன்வந் துளம்புகலும்
கரைமாண்ட காமப் பெருங்கடலைக் கடத்தலுமே
இரைமாண்ட **இந்திரியப் பறவை** இரிந்தோடித்
துரைமாண்ட வாபாடித் தோள்நோக்கம் ஆடாமோ "

எனப் பிறாண்டும் பறவைகளின் இயல்பு பற்றிக் குறிப்பிட்டிருத்தல் குறிக்கொளற்பாலது. அன்றியும் 'குடம்பை' என்பதன் பிறிதொரு வடிவமாகிய "குரம்பை" என்னும் சொல்லை மாணிக்கவாசகர் "கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே", "மலவன் குரம்பையை மாற்றிஅம் மால்முதல் வானர்க்கப்பால் செலவன்பர்க் . கோக்கும் சிவன்" என ஆங்காங்கு அருளிச் செய்திருத்தலும் அறிந்தின்புறற் பாலது. எனவே, "இங்கொர், பார்ப்பெனப் பாணனேன் படிற்று ஆக்கையை விட்டுனைப் பூணுமாறு அறியேன்" என வரும் மாணிக்கவாசகரின் அருமைத் திருமொழியினை ஆதாரமாகக் கொண்டே பரிமேலழகர், 'புள்' என்பதற்குப் 'பார்ப்பு' (பறவைக்குஞ்சு) எனவும், 'குடம்பை' என்பதற்கு 'முட்டை' எனவும் பொருள் கொண்டார் போலும் !

பரிமேலழகரின் இச்சிறப்புரை மிகவும் பாராட்டற்குரியதே எனினும், மணக்குடவரின் உரையும் மரபு நெறி பிறழாத ஒன்று என்பது மனங்கொண்டு மகிழ்தற்குரியது. மணக்குடவரின் உரைக்கு,

" அலங்கல் அஞ்சினைக் குடம்பை புல்லெனப்
புலம்பெயர் மருங்கிற் புள்ளெழுந் தாங்கு
மெய்யிவண் ஒழியப் போகி அவர்
செய்வினை மருங்கிற் செலீஇயர்என் உயிரே " (அகம் - 113)

எனவரும் பழஞ் சங்ககாலப் பாடலின் கருத்தும் ஆக்கந் தருவதாதல் காணலாம்.



" பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்—கூடுவிட்டிங்
காவிதான் போயினபின் பாரே அநுபவிப்பார்
பாவிகள் அந்தப் பணம் "

எனவரும் ஔவையார் பாடலினும், உடல் 'கூடு' எனவே குறிப்பிடப்பட்டுண்மை காண்க.

இன்னோ ரனையவை பலவும் கருதுங்கால், பண்டையுரையாசிரியர்கள் தாம் தாம் காணும் உரை விகற்பங்களுக்கு உரிய சான்றுகள் ஏதேனும் கொண்டன்றித் தத்தம் மனஞ் சென்றவாறு உரை கூறி யொழியும் இயல்பினரல்லர் என்பது நம்மனோரால் நன்கினிது தெளியப்படும்.

இவ்வுரைத் திறங்கள் ஒருபுறம் இருப்ப, இத்திருக்குறளால் தெய்வப் புலவர் திருவள்ளுவர்தம் மெய்யுணர்வின் மேம்பாடும், மிகச் சிறந்த கவிதை நலமும் இனையவென்பதும் இனிதறியக் கிடக்கின்றன. குடம்பையும் புள்ளுமாகிய உவமைகள், உடம்பும் உயிருமாகிய இரண்டும் ஒன்றனையொன்று விட்டு நீங்கும் அம்மட்டுமே உணர்த்த வந்துள்ளன என உரையாசிரியர்கள் கொண்டிருப்பதாகக் கருத இடனுளது. ஆனால் மிகச் சிறந்த கவிஞரும் மெய்யுணர்வாளருமாகிய திருவள்ளுவர் வேறு பிற கருத்துக்களையும் ஈண்டுக் குறிப்பிட்டுள்ளார் எனலாம்.

பறவைகள் கூடுகட்டும் இயல்பினை நாம் ஊன்றிப் பார்ப்பதில்லை. பறவைகள் தொடக்கமுதலே கூடுகட்டி வாழ்வதில்லை. தத்தமக்குரிய இரை தேடியுண்டு மரக்கிளைகளில் வைகிக் கவலையின்றித் தாம் தாம் வேண்டும் இடங்களிற் றிரிந்து பறந்து பொழுது கழிப்பதே பறவைகளின் இயற்கை. ஆயினும் சூல் கொண்டு முட்டையிட்டு அடைகாத்துக் குஞ்சு பொரிக்கும் நிலை நேருங்காலத்தில் மட்டுந்தான் பறவைகள் கூடுகட்டி வாழத் தலைப்படும். இவ்வியல்பு,

" சூன்முதிர் துள்ளு நடைப்பெடைக் கிற்றுணைச் சேவல்செய்வான்
தேன்முதிர் வேழத்தின் மென்பூக் குதர்செம்மல் ஊரன்"

எனவரும் திருக்கோவையார் செய்யுளானும்,

" உள்ளூர்க் குரீஇத் துள்ளுநடைச் சேவல்
சூன்முதிர் பேடைக்கு ஈனில் இழைஇயர்

தேம்பொதிக் கொண்ட தீங்கழைக் கரும்பின்
நாறு வெண்பூக் கொழுதும்..."

எனவரும் குறுந்தொகை (85)ச் செய்யுளாலும் உணரப்படும். கூடுகட்டிய பறவை அதன்கண் நெடுநாள் தங்குவதில்லை. முட்டையிட்டு அடைகிடந்து குஞ்சு பொரித்து, அக்குஞ்சுகளை வளர்த்த பின்னர் அக்குஞ்சுகளையும் போக்கித் தானும் அக்கூட்டினை விட்டுப் பறந்து போய்விடும். ஆணவ மல இருளின்கண் அறிவு மயங்கித் திரிதரும் உயிர், தான் இருவினைப் போகம் நுகருதற் பொருட்டு இடையே வேண்டப்படும் உடம்பாகிய கூட்டில், அவ்வினை பரிபாகம் எய்தும் அளவும் வைகியிருந்து, வினைக்கழிவின்கண் விட்டுப் பிரிந்தொழியும் என்னும் மெய்யுணர்வுக் கருத்தும் பிறவும் இத் திருக்குறளில் அமைந்து திகழ்கின்றன. "வினைப்போகமே ஒரு தேகங்கண்டாய் வினைதான் ஒழிந்தால் தினைப்போதளவும் நில்லாது கண்டாய்" எனவரும் பட்டினத்தடிகள் திருமொழியும் ஈண்டுச் சிந்தித்தற்குரியது. இன்னோரனைய அரும்பெருங் கருத்துக்கள் பலவும் அமைய இவ்வழகிய திருக்குறள் மணியினைச் செவ்வதின் அருளிச் செய்த ஆசிரியர் திருவள்ளுவரின் அளப்பரிய பெருமாட்சிமையை யாம் என் என்பேம்! "கரையற்ற தொன்றைக் கரை காணலாகுமோ?"

---

## மலரின் நுண்மாண்

(மா. ப. தியாகராஜன்)

எல்லோரும் விரும்புகிற பொருள்களுள் மலர் மிகவும் முதன்மையானது. மலர்களை விரும்பாதவர்கள் எவருமிலர் என்னலாம். மாதர்கள் தலைக்கணிகலனாக மலரைக் கொள்கின்றனர். தேவர்களின் தாள்களுக்கும் அணிகலனாக மலர்களிருக்கின்றன. பூசனைக்கும் போற்றுதல் செய் உபசாரங்களுக்கும் மலர்களே உபயோகப்படுகின்றன. ஒவ்வொரு மூர்த்திக்கும் ஒவ்வொருமல ருகந்ததெனக் கூறப்படுகிறது. சிவபெருமானுக்குக் கொன்றைமலர், விநாயகருக்குத் தும்பைமலர், கந்தவேளுக்குக் கடம்பமலர், திருமாலுக்குத் தாமரை கூறப்



படுகின்றன. மலர் மாலைகளைக் கண்டாலே மனத்தில் ஓரமைதி பிறக்கிறது. அமைதி நிறைந்த அடியவர்களைக் காணில் எப்படி மனத்துக்கோர் ஆறுதல் ஏற்படுகிறதோ அதேபோல் மலர்களைக் காணில் நமது மனம் மலர்ச்சியுறுகிறது.

காகிதத்தில் எவ்வளவுதான் நுட்பமாக மலர்களைச் செய்து போதினும் அம்மலர்கள் மனத்தைக் கவர்வதில்லை. இயற்கை மலர்களிலுள்ள தண்மை அவைகளிடத்தில்லை. ஆண்டவனுடைய படைப்பில் நாம் போட்டியிடுவது பொருந்தாது. மலர்களின் பலவித வண்ணங்களைக் கண்டே மனிதன் வண்ணங்களைக் கூட்டிச் சித்திரம் வரைதற்குப் பயன்படுத்தியிருக்க வேண்டும். மனிதர்களுக்குத் தேஜஸ் அல்லது நல்லொளி முகத்தில் காணப்படும் என்று கூறுகிறார்களே அதுபோல் மலர்களிலும் ஒரு நல்லொளியிருக்கின்றது. அதுதான் இயற்கை மலர்களைக் காகிதப் பூவினின்றும் பிரித்துக்காட்டி விடுகின்றது. எனவே பூக்களில் வெறும் அழகேயன்றி வேறு தன்மைகளும் இருக்கவேண்டும். ஒரு மனிதனின் நல்லொளி அவனுடைய மனத்தூய்மையால் ஏற்படுகிறது. அவன் தன்னைப் பிறருக்கு எவ்வளவு பயன்படுத்திக் கொள்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு அவன் உள்ளொளி பெறுகிறான். மனிதன் புகழை விரும்பிப் பிறருக்கு நன்மையைச் செய்கிறான்.

மலர்களோ உலகை அழகுபடுத்தவே படைக்கப்பட்டனவாகக் காண்கின்றன. மனிதன் வாழும் இவ்வுலகம் மலர்களால் அலங்கரிக்கப்படவேண்டுமென்ற கருணையுடைய ஆண்டவனை "நன்றுடையான் தீயதிலான், நரை வெள்ளேறு ஒன்றுடையான், உமையொருபாகமுடையான்" என்று திருஞானசம்பந்தர் பாடியபடி நாம் எண்ண வேண்டாவா? "ஆண்டவனில்லையென்றோ ஆண்டவன் என்னைக் கஷ்டப்படுத்துகிறான் என்றோ கூற நமக்கு வாய் கூசவேண்டாவா? மலர்கள் காற்றினலைவுகளுக் கிடையே, சூரிய வெப்பம் தகிக்க முட்கிளைகளின் முனையில் நின்றும் ஆனந்தத்தின் அறிகுறியாக மலர்ந்த தோற்றத்தை அளிக்கின்றன. சந்தோஷமாக இருக்கிற ஒருவனுடைய முகம் மலர்ந்திருக்கிறதென்கிறோம். கற்பனைக் களஞ்சியமாக உள்ள கவிஞர்கள்

மகளிருடைய அவயவ வனப்பிற்கு உவமையாக ஒவ்வொரு மலர்களைக் கூறுகிறார்கள்.

கவிகள் மலர்களிலழகை மட்டும் கண்டனர். ஞானிகள் அவைகளில் தூய உண்மைகளைக் கண்டனர். தாயுமானவர் "பார்க்கின்ற மலரூடும் நீயேயிருத்தி" என்று ஆண்டவனையே மலர்களில் காண்கிறார். மக்களுக்கு அவைகள் எடுத்துக் காட்டும் ஒழுக்கங்கள் என்ன என்பதை ஞானிகள் கண்டு பாடியுள்ளார்கள். வண்டுகள் மலர்களில் உண்டாகும் தேனை உண்ணுகிறது. அந்த இன்பம் அற்பமாகிய இன்பமென்றும், அது நாக்கிந் திரியத்திற்குச் சிறிதளவு இன்பத்தைக் கொடுக்கக் கூடியதென்று, காண்தொறும், பேசும்தொறும், நினைக்குந்தொறும் உள்நெக ஆனந்தத்தேன் சொரியும் குனிப்புடையானுடைய பெருமையைச் சென்றாதாய் கோத்தும்பி என்கிறார் மாணிக்கவாசக சுவாமிகள். மலர்களின் காட்சி அவைகள் தரும் தேனின் இன்பத்தைவிட இனிமையான தென்னலாம். அவைகளின் குணவிசேஷங்களை எண்ணி நம் அறிவு தூய்மைப்படுகிறது.

முட்புதர்களிலோ, வனாந்தரத்திலோ சோலைகளிலோ, நந்தவனத்திலோ, மாடமாளிகைகளிலோ, உல்லாசப் பாதைகளிலோ காற்றிலோ, மழையிலோ எந்த நிலைகளிலும் அவை மலர்ந்து அழகைக் கொடுக்கின்றன. அவைகளுக்குத் தண்ணீரும், எருவும் பூமிக்குள் வேரிவிடுகின்றோம். அதுபோல் மனிதனை அழகுபடுத்துவதும் அவனுக்கு ஆக்கம் கொடுப்பதும் பஞ்சேந்திரியங்களினால் மனத்தில் இடப்படும் விஷயங்கள் ஆகும். மனத்தூய்மையால் மனிதன் மேன்மையுற வேண்டும். ஐந்து இந்திரியங்களும் ஐந்து கிளை வேர்களாக அமைந்துள்ளன. மனிதனை அஜபவிருக்ஷம் அல்லது தலைகீழான மரம் என்று கூறுவர். தலைதடுமாறினால் மனிதன் கீழே விழுகிறான். வேரறுபடின் மரம் கீழே சாய்ந்துவிடும். கஷ்டத்திலும், சுகத்திலும், மலர்ச்சியான முகத்துடன் உள்ளொளியுடன் மனிதன் வாழ்வதற்கு மலர்கள் எடுத்துக் காட்டாக இருக்கின்றன. பொறுமையின் உருவமாகப் பூக்களைக் காணலாம். சிறிதளவு நீரருந்தி வண்டுகளுக்குத் தேனும்,



மனிதர்களுக்கு வாசனையையும், அழகையுந் தந்து மலர்கள் வாழ்கின்றன. உலர்ந்து விழுமுன் தம்மைப் போன்ற பூக்கள் விருத்தியாகவேண்டுமென்று வித்துக்களை உற்பத்திசெய்துவிடுகின்றன.

சுவர்க்கலோகம் மிகவும் அழகான உலகம் என்று கூறுகிறோம். குறைபாடுகளையே நினைந்து வாழும் ஒருவனை அங்குக் கொண்டு சென்றாலும் அவன் அந்த அழகை அனுபவிக்கும் ஆற்றலிலனாவான். ஆண்டவன் தம்மக்களை மகிழ்விக்க இவ்வுலகில் இயற்கை வனப்புகளை அமைத்திருந்த போதிலும் அவைகளை அனுபவிக்க ஒரு ஆற்றலும் வேண்டும். மலர்களின் அழகை மட்டும் கண்டால் போதாது. அவைகளின் உண்மையை உணரக் கவியின் கற்பனை வேண்டுவதில்லை. அவைகளை நந்தவனங்களிலும், வீடுகளிலும் அலங்கரித்தும், நாம் வணங்கும் மூர்த்திகளுக் கிட்டும் அவைகளுடன் பழகிப் பழகி அவைகளின் நல்லுணர்ச்சியைப் பெறுதல் வேண்டும். மனம் சோர்வடைந்திருக்கும் காலத்தில் மலர்களைச் சற்று உற்று நோக்கி ஆண்டவனின் அருளாக்கங்களை அவைகளின் மலர்ச்சியில் காணில் மனம் ஊக்கம் பெற்றுச் சாந்தியை அளிக்கும். அழகான சூழலில் வாழ்வதற்கும் அழகான எண்ணங்களையே எண்ணவும் அழகான காட்சிகளையே காண விழையவும் மனிதன் பழகவேண்டுமென்பதை மலர்கள் கற்பிக்கின்றன. அதுவே ஆண்டவனை அடையமுதற்படியாக அமைத்துக்கொள்ள வேண்டும்.

எனவே இறைவனை வழிபடுதற்கு, அவ்வுணர்ச்சியை ஊட்டிய இயற்கையில் மிளிரும் மலர்களைப் பயன்படுத்துகின்றோம். அவைகளுக்கு ஆதரவளிக்கும் தண்ணீரையும் பயன் படுத்துகின்றோம். பின்வரும் பாடல்கள் பூவொடு நீர்கொண்டு இறைவழிபாடு செய்வது மனிதனுக்கின்றியமையாத பண்பாகும் என்பதை விளக்குகின்றன.

"புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ண லதுகண்டு அருள் செயாநிற்கும்
எண்ணிலி பாவிகள் எம்மிறை யீசனை
நண்ணறி யாமல் நழுவுகின் றாரே"

"வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினையேன் நெடுங் காலமே"

"கற்றுக் கொள்வன வாயுள நாவுள
இட்டுக் கொள்வன பூவுள நீருள
கற்றைச் செஞ்சடை யானுளன் நாமுளோம்
எற்றுக்கோ நமனால் முனிவு உண்பதே"

---

## செய்திச் சுருக்கங்கள்

சமாஜ நிர்வாக சபைக் கூட்டம் :—22–11–1959 ஞாயிறன்று காலை 9½ மணிக்குச் சென்னை, இராயப்பேட்டை, ஸ்ரீ பாலசுப்ரமணிய பக்தஜன சபையில் நடைபெறும்.

வெள்ளி விழா விரிவுரை : காஞ்சிபுரம் மெய்கண்டார் கழகத்தின் சார்பில் மெய்கண்டதேவ நாயனார் திருநாளின் அங்கமாக, வெள்ளி விழாக் குருபூசை விரிவுரை 1-11-59 ஞாயிறன்று உயர்திரு. ஏ. உத்தண்டராம பிள்ளை I.A.S. அவர்கள் தலைமையில் ஸ்ரீஞானப் பிரகாச தேசிக சுவாமிகள் ஆதீன மடாலயத்தில் மிகவும் சிறப்புற நடைபெற்றது. தமிழ் மறை மன்னர் திரு. ஆ. விநாயக முதலியார் அவர்கள் திருமுறை ஓதியபின், புலவர் மாமணி திரு. வீ. திருஞான சம்பந்த முதலியார் அவர்கள் வரவேற்புரை கூறினார்கள். சித்தாந்தக் கலைமணி வித்துவான் திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்களும், மதுரை ஆதீனச் செஞ்சொல்மாமணி திரு. சச்சிதானந்த சிவகுமாரன் M.A. அவர்களும் முறையே "சிவஞானபோதம்" "திருக்குறிப்புத் தொண்டர்" என்னும் பொருள்கள் பற்றி அரிய இனிய விரிவுரைகள் ஆற்றினர். தலைவர் அவர்களின் முடிவுரைக்குப் பின் திரு. என். ஆர். சடகோப முதலியார் அவர்கள் நன்றியுரையும், திரு. எஸ். காளப்ப முதலியாரவர்கள் வாழ்த்தும் கூறினர்.

காஞ்சிச் சிவதல வார வழிபாடு : காஞ்சிச் சிவதலத்தின் 9வது யாத்திரையில் 49வது வார வழிபாடு 1-11-59 அன்று திருவேகம்பநாதர் திருக்கோயிலில் நடைபெற்றது. அதுபோது புலவர் மாமணி திரு. வீ. திருஞானசம்பந்த



முதலியார் அவர்கள் "மெய்கண்டதேவ நாயனார் புராணம்" என்பது பற்றி விரிவுரை நிகழ்த்தினார்கள்.

மாதாந்தர சமயப் பிரசார வழிபாட்டுக் கூட்டம் : சென்னைத் தருமபுர ஆதீனப் பிரசார நிலையத்தின் சார்பில், திருவொற்றியூர்த் தியாகேசப் பெருமான் திருக்கோயிலில், ஸ்ரீமெய்கண்டார் குருபூசைத் திருநாள் விழாவுடன் சேர்த்து நடத்தப்பெற்றது. ஸ்ரீ வடிவுடையம்மையின் சந்நிதியில், சித்தாந்த சிகாமணி திரு. க. வச்சிரவேல் முதலியார் B.A.,L.T. அவர்கள் தலைமையில், சைவப் பெரியார் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை B.A.,L.T. அவர்கள் ஸ்ரீ மெய்கண்டார் குருபூசைத் திருநாட் சொற்பொழிவுகளைத் தொடங்கி வைத்தார்கள். திரு. ச. சிவகுமாரன் M.A. அவர்களும், திரு. புலவர் முருகவேள் M.A.,M.O.L. அவர்களும் முறையே "மெய்கண்டார் வரலாறு" "சிவஞானபோதம்" என்னும் பொருள்கள் பற்றிச் சொற்பொழிவாற்றினர். பட்டினத்தார் சமாதித் திருக்கோயிலிலும், ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள் சபையிலும் வழிபாடு நிகழ்த்தப் பெற்றது. ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள் சபையினர் வந்திருந்தோர் அனைவருக்கும் இனிய சிற்றுண்டிகள் வழங்கினர். வித்துவான் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் இந்நிகழ்ச்சிகளை நன்கினிது முன்னின்று நடாத்தி ஆசியுரை முதலியன வழங்கிச் சிறப்பித்தருளினார்கள். இராயப்பேட்டைப் பாலசுப்பிரமணிய பக்த ஜனசபை, இராயபுரம் இறைபணிக்கழகம், சென்னைச் சைவ சித்தாந்தமகா சமாஜம் முதலிய சமய அமைப்புகளும், சென்னைத் திருவாளர்கள் - கே. ஏ. அருணாசல முதலியார், மேயர் கம்பெனி மாசிலாமணி முதலியார், ருக்மணிகுக்கர் அ. சோமசுந்தர் செட்டியார் M.A., சாரதி பிலிம்ஸ் மேனேஜர் இராமமூர்த்தி ஐயர், மலேயா பொன். கோவிந்தசாமி முதலியவர்கள் பலரும் கலந்து கொண்டு மகிழ்வித்தனர்.

கந்தர் சஷ்டி விழா : மாங்காடு ஸ்ரீசிவ சண்முகானந்த பக்தஜன சபையின் சார்பில் வழக்கம் போற் சிறப்புற நடந்தது. திருப்புகழ்ச்சதுரர் திரு. சே. த. இராமலிங்கம்

பிள்ளை B.A.,B.T., திரு. நே. த. கிருஷ்ணசாமி முதலியார் B.A.,B.T., திரு. புலவர் முருகவேள் M.A.,M.O.L., திருமதி எம். கஜலஷ்மி அம்மையார், புலவர் திரு. எம். கே. புண்ணிய கோடி ஆகிய அறிஞர்கள் சொற்பொழிவாற்றி விழாவைச் சிறப்பித்தனர். திருவாளர்கள் இராஜரத்தின முதலியார், பொன்னம்பல முதலியார், அருணசல முதலியார் முதலிய உள்ளூர்ப் பெருமக்கள் பலரும் ஈடுபட்டு நின்று விழாவை நன்கினிது நடத்தியமை குறிப்பிடற்பாலது.

கூட்டுப் பிரார்த்தனை : கொழும்பு ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் வழக்கம்போல வாரந்தோறும் சென்ற மாதத்திற் சிறப்புற நடைபெற்றது. உயர்திருவாளர்கள் - கே. சுப்பிரமணிய பிள்ளை, சோ. நடராஜன், எம். எஸ். சுப்பிரமணிய பிள்ளை, பி. குப்புசாமி பிள்ளை, சி. எஸ். எஸ். மணிபாகவதர், கே. வி. கணபதி ஆகிய அறிஞர் பெருமக்கள் சொற்பொழிவாற்றியும் பண்ணென்ற இசை பாடியும் நிகழ்ச்சிகளை நன்கினிது நடத்தித் தந்தார்கள்: தெக்ஷணத்தார் சங்கத்தின் தொண்டுகள் பெரிதும் பாராட்டற்பாலன.

மெய்கண்டார் திருநாள் விழா : நமது சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் சார்பில், சென்னைத் தியாகராய நகர் தருமபுர ஆதீனப் பிரசார நிலையத்தில் 1-11-59 ஞாயிறன்று மாலை கொண்டாடப்பெற்றது. சித்தாந்த சிகாமணி திரு. க. வச்சிரவேல் முதலியார் B.A.,L.T. அவர்கள் "சிவஞான போதம்" பற்றி ஆராய்ச்சி நிறைந்த விரிவுரை யாற்றி மகிழ்வித்தார்கள். செயலாளர் திரு. மா. ப. தியாகராஜ முதலியார் B.A. அவர்கள் நன்றியுரை கூறினார்கள்.

திருப்போரூர் முருகன் செந்தமிழ்க் கழகத்தின் முதல் ஆண்டு விழா 15-11-1959 ஞாயிற்றுக்கிழமை திருப்போரூரில் தேவாலயத்தில் நடைபெறும். சமாஜ அங்கத்தினர்கள் பலர் சொற்பொழிவாற்றுவார்கள்.

திருத்தம் : "சித்தாந்தம்" அக்டோபர் இதழில் 344-ம் பக்கத்தில் வந்துள்ள அப்பர் கரையேறிய திருக்குளத் திருப்பணி நன்கொடையில் ரூபா என்றுள்ளதை வெள்ளி என்று மாற்றிப் படித்துக் கொள்க.

## சந்தா நேயர்களுக்கு முக்கிய அறிவிப்பு

**1960** ஆண்டு சமாஜ அங்கத்தினர்கள் தங்களுடைய சந்தாவை 31-12-1959க்குள் தயவு செய்து அனுப்பி விடுமாறு கேட்டுக்கொள்கிறேன். 1960 ஜனவரி மாதம் வி. பி. பி. யில் சித்தாந்தம் அனுப்புவதால் பல அங்கத்தினர்களுக்கு 58 புதுக்காசு அதிகமாகக் கட்டணத்துடன் கொடுக்கவேண்டி வருவதாலும், மற்றும் சிலருக்கு வருத்தம் ஏற்படுவதாலும் முன்னதாக அங்கத்தினர்கள் தங்கள் தங்கள் சந்தாவை அனுப்பிவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மணியார்டர் மூலமாகச் சந்தாவை அனுப்பும் அன்பர்கள் கூப்பனில் குறிக்கவேண்டிய முக்கிய விஷயங்கள் : **1.** சந்தா எண். **2.** சந்தாதாரர் பெயர் **3.** தெளிவான தற்போதைய தபால் முகவரி **4.** பல சந்தாதாரர்கள் ஒருமணியார்டர் மூலம் மொத்தமாகப் பணம் அனுப்பினல் அவரவர்கள் சந்தா எண் பெயர் விலாசம் தனித்தனியே கூப்பனில் எழுதியனுப்பவும். பணம் அனுப்பவேண்டிய முகவரி: காரியதரிசி, சைவ சித்தாந்த மகா சமாஜம் **28**, இராமகிருஷ்ணமடம் சாலை, சென்னை-**4**.

மலாய் நாட்டில் உள்ள சமாஜ உறுப்பினர்கள் தங்களுடைய சந்தாக்களை திரு. கே. ஆர். சாமிநாத செட்டியார், B.A.,B.L. அவர்களிடத்திலும், திரு. சிவநேயன் அவர்களிடத்தேனும் செலுத்திவிடலாம். —செயலாளன்

### பிரிவாற்றாமை

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் பழைய உறுப்பினரும், திருவதிகை, திருவெண்ணெய்நல்லூர் முதலிய இடங்களில் சமாஜ மாநாடுகளை நடத்தித்தந்த சைவ மெய்யன்பருமான திருவெண்ணெய்நல்லூர் திரு. எம். சின்னசாமி ரெட்டியார் அவர்களின் திருமகனார் திரு. டி. சி. சுந்தர ரெட்டியார் தமது 42-வது வயதில் இறைவன் திருவடி நிழல் அடைந்தார். அன்பர் திரு. சின்னசாமி ரெட்டியார் அவர்கட்கும் அவர்கள் குடும்பத்தினருக்கும் சைவ சித்தாந்த சமாஜத்தார் தங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர். திரு. சுந்தர ரெட்டியாரின் ஆன்மா சாந்தியடைவதாக.

## காஞ்சித் திருநகர்வலம்

காஞ்சிபுரத்தில் 38 ஆண்டுகளாக நடைபெற்றுவரு நகர்வலம் 11-10-59 ஞாயிற்றுக்கிழமை வழக்கம் போ சிறப்பாக நடைபெற்றது. 1000-க்கு மேற்பட்ட அன் கள் தாய்மார்கள் உயர்நிலைப்பள்ளிகளின் மாணவ மாண கள் இதில் கலந்து கொண்டனர். நகர்வலம் சருவ தீர்த்த குளக்கரையிலிருந்து காலை 6-30 மணிக்குத் தேவ பாராயணத்துடன் புறப்பட்டது. 8 மணிக்குத் திருவோ. காந்தன்றளியில் வழிபாடும், சிற்றுண்டியும் நடைபெற்றன 10 மணிக்கு எனுக்தூர் என வழங்கும் இனனூர்ச் சிவாலய தீர்த்தக்கரை மண்டபத்தில் சிவஞானபோதக் கூட்டு பிரார்த்தனை நடைபெற்றது. பகல் ஒரு மணிக்குச் சிவாத தானம், பாக்கீசத் திருக்கோயில்களில் வழிபாடும் மகேசுவா பூசையும் நடைபெற்றன. ஆவணக்களரி அலுவலகத் தலைவர் திரு. பெரியண்ணன் பி. ஏ. அவர்கள் தலைமையில், மதுரை ஆதீனப் புலவர்மாமணி திருஞானசம்பந்த முதலி யார் நகர் வலத்தின் சிறப்பையும், 16 மைல் சுற்றளவுள்ள காஞ்சிமா நகரை வலமாக வருகின்றவர்கள் பெறும் சிவ புண்ணிய நலத்தையும், விரிவாக எடுத்துக்கூறி நகர் வலத்தை 600 ரூபா செலவில் நடத்திக்கொடுத்த காஞ்சிமா நகர். சிவபுண்ணியச் செல்வர்கள் அனைவருக்கும் நன்றி கூறினு பின் நகர்வலத் திருக்கூட்டம் 5 மணிக்குப் புறப்பட்ட இடமாகிய சருவதீர்த்தக் குளக்கரைக்கே வந்து சேர்ந்தத 6 மணிக்கு அனுட்டானம் முடித்துத் தேவார பாராயண துடன் கச்சியேகம்பம், குமரகோட்டம், கௌசிகேசம், கச் பேசம் வழிபட்டு வாழ்த்துடன் நகர்வலம் இனிது முடிந்த.

Printed at the Sadhu Press, 15, Madhava Perumal Koil Stree Mylapore by D. Mangayarkarasi and V. K. Punithava Edited by Pulavar Murugavel, M.A., M.O.L. & Published S. Satchidanandam Pillai, B.A., L.T. for the Saiva Siddha Maha Samajam, 14, Warren Road, Mylapore, Madras-4.

T. 60

ed No. M. 2330 'SIDDHANTHAM'
Vol. 32—No. 12

# சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

32 | விகாரி மார்கழி 1959 டிசம்பர் | இதழ் 12

உள்ளுறை

| | | பக்கம் |
|---|---|---|
| ப்பரைப் பற்றிய ஓர் ஆய்வுரை) | ... | 387 |
| மம் முத்தியா ? வித்து முத்தியா ? | ... | 397 |
| மாஜம் தமிழுக்கும் சைவத்திற்கும் ஆற்றிய தொண்டு | ... | 403 |
| சவத் தேர்வு வினாக்கள்—1959 | ... | 410 |
| மாஜ மாநாட்டுப் பெருவிண்ணப்பம் | ... | 417 |
| தனைநல்லூரிற் பாமன் அடியார்கள் | ... | 418 |

பத்திராசிரியர் : புலவர் - முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.

உதவிப் பத்திராசிரியர் : மு. நாராயணசாமி

சைவ சித்தாந்த மகா சமாஜம்
14, வாரன் ரோடு, மயிலாப்பூர், சென்னை-4

சந்தா ரூபா 3 தனிப்பிரதி அணா 4

## சமாஜப் பொதுக்கூட்டம்

சென்னை இராயப்பேட்டை, ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையில் 19-12-'59 சனிக்கிழமை காலை 9 மணிக்குச் சமாஜ ஆண்டு அறிக்கையையும், இவ்வாண்டு வரவு செலவுக் கணக்கையும் ஆமோதிக்க நடைபெறும். அக் கூட்டத்திற்கு அங்கத்தினர் நிறைவெண் (Quorum) இல்லாவிடில் மேற்படி விஷயங்களை ஆமோதிக்க மேற்படி இடத்திலேயே மறுநாள் 20-12-'59 ஞாயிறு காலை அதே நேரத்தில் சமாஜ விதிகளின்படி, வருபவர்களைக் கொண்டு அக் கூட்டம் நடத்தப்படும்.

---

## செய்திச் சுருக்கங்கள்

**ஆண்டு விழா:** திரிசிரபுரச் சைவ சித்தாந்த சபையின் 74-ஆம் ஆண்டுவிழா 22-11-59 ஞாயிறன்று காலை மாலை இரு வேளைகளிலும் திருமுருக. கிருபானந்தவாரியார் அவர்கள் தலைமையிற் சிறப்புற நடைபெற்றது. உயர்திரு. கு. வரதராசனார், B. A. அவர்கள் விழாவினைத் தொடங்கி வைத்தார்கள். வித்துவான் - தி. சி. அரசப்பனார், சைவப் பெருநாவலர் வித்துவான்-திரு. அ. நடேச முதலியார் ஆகிய இருவரும் முறையே 'சமயமும் இலக்கியமும்', 'சங்க இலக்கியங்களில் சாத்திரக் கருத்துக்கள்' என்னும் பொருள்கள்பற்றி விரிவுரையாற்றினர். செயலாளர் திரு. தி. சு. சிவப்பிரகாசம் அவர்கள் நன்றி நவின்றார்கள்.

**குருபூசை விழா:** ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் அவர்களின் 80-ஆம் ஆண்டுக் குருபூசைத் திருவிழா, அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆராய்ச்சித்துறை விரிவுரையாளர் வித்துவான் திரு. க. வெள்ளைவாரணர் அவர்கள் தலைமையில் 23-11-59 அன்று சிறப்புற நடைபெற்றது. திரு. புலவர் - முருகவேள், M.A., M.O.L. அவர்கள் சொற்பொழிவாற்றினார். திருமதி. தி. க. இராசேசுவரன் அவர்கள் மாணவ மாணவியர்க்குப் பரிசுகள் வழங்கினர். நாவலர் உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர் நன்றியுரை நவின்றார். தருமபரிபாலகர் திரு. இ.க. இராசேசுவரன், B.A. அவர்களும், ஆசிரியர்களும், மாணவர்களும் ஆகிய அனைவரும் விழா சிறப்புறற்குப் பெரிதும் ஆர்வமுடன் பணியாற்றினர்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சைவ சித்தாந்த மகா சமாஜம், சென்னை

[பதிவு செய்யப்பெற்றது]

---

# 54-ஆம் ஆண்டுவிழாவும் மாநாடும்

இடம்: வாலாஜாபாத் (செங்கற்பட்டு மாவட்டம்)

நாள்: 25, 26, 27 டிசம்பர் 1959

---

# அறிக்கையும் அழைப்பும்

---

எல்லாம் செயல்கூடும் ! என்னாணை ; அம்பலத்தே
எல்லாம்வல் லான்றனையே ஏத்து !—வள்ளலார்

*திருநெறியன்பரீர் !*

செந்தமிழ்ப் பயனும் சைவ சித்தாந்தச் செந்நெறி யோம்பும் நமது சமாஜத்தின் 54-ஆம் ஆண்டு நிறைவு விழாவும், அதன் அங்கமாகச் ஸைவர், சைவ இளைஞர், சைவ மங்கையர் மாநாடுகளும், நிகழும் விகாரி ஆண்டு மார்கழித் திங்கள், 10-ஆம் நாள் (25-12-1959) வெள்ளிக் கிழமைமுதல் மூன்று நாட்கள், வாலாஜாபாத் இந்துமத பாடசாலையிலும், வன்னலார் மாணவர் இல்லத்திலும் அடுத்துக் காணும் நிகழ்ச்சி முறைப்படி நடைபெறும்.

வாலாஜாபாத் ஊராட்சி மன்றம், கூட்டுறவு வேளாண் பாங்கு, கூட்டுறவுக் குடிசைத் தொழிற் கழகம் முதலியவற்றின் தலைவரும், நெல்லாலை உரிமையாளருமாகிய திரு. வா. து. நடராசன் அவர்கள் கொடியேற்றிவைப்பார்கள்.

சமாஜ வெளியீட்டாக திரு. மா. ப. தியாகராச முதலியார், பி.ஏ., அவர்களின் யந்திர விரிவுரையுடன் கூடிய கந்தரநுபூதி நூல் ஒன்றைச் சென்னை உயர் அறமன்ற மாநடுவர், திரு. R. சுப்பிரமணிய நாடார் அவர்கள் வெளியிடுவார்கள்.

சென்னை இந்து அறநிலையத் துறை ஆணையாளர் உயர்திரு. அ. உத்தண்டராமன், I. A. S. அவர்கள் சைவர் மாநாட்டைத் திறந்து வைப்பார்கள்.

ஆண்டுவிழாவிற்கும் சைவர் மாநாட்டிற்கும் சென்னை தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத் தலைவர் - வித்துவான் - தவத்திரு. சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தலைமை தாங்குவார்கள்.

சைவ மங்கையர் மாநாட்டைச் சென்னை திருமதி. நீலாவதி இராமசுப்பிரமணியம் அவர்கள் திறந்துவைப்பார்கள்; அம் மாநாட்டிற்குச் சென்னை திருவாட்டி - சௌந்தரம் கைலாசம் அம்மையார் அவர்கள் தலைமை ஏற்பார்கள்.

சைவ இளைஞர் மாநாட்டை, சென்னை மணலி அறநிலையத் தலைவரும், சென்ன மல்லீசுவரர் சென்ன கேசவப்பெருமாள் தேவஸ்தான அறக்காப்பாளருமான திருமிகு. மணலி. சீனி. இராமகிருஷ்ண முதலியார், B.A. அவர்கள் திறந்துவைப்பார்கள்; அம் மாநாட்டிற்குக் காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் - உயர்திரு. ந. சஞ்சீவி, M.A., அவர்கள் தலைமை ஏற்பார்கள்.

நாற்பதுக்கு மேற்பட்ட அறிஞர் பெருமக்களின் அரிய சொற்பொழிவுகளும், இந்துமத பாடசாலை இளஞ்சிறுர்களின் இயல் இசை நாடக நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

சமாஜ அங்கத்தினர்களும், ஏனைய சமய அமைப்பினரும், அன்பரும் மூன்று நாட்களும் வந்திருந்து உட



னுறைவின் பயனைக்கொண்டும் கொடுத்தும் சிறப்பிப்பதுடன், சமாஜத்தை வலுப்படுத்தும் ஆக்க வேலைகளுக்கும் அடிகோலி நலஞ்செய்ய வேண்டுகிறோம்.

இங்ஙனம்:

| | |
|---|---|
| இராவ்சாகிப் நல். முருகேச முதலியார், பி.ஏ., சமாஜத் தலைவர். | தி. மாணிக்க செட்டியார், (இந்துமத பாடசாலைத் தலைவர்) வரவேற்புக்குழுத் தலைவர். |
| ச. சச்சிதானந்தம் பிள்ளை, பி.ஏ., எல்.டி., க. வச்சிரவேல் முதலியார், பி.ஏ., எல்.டி., சமாஜத் துணைத்தலைவர்கள். | வா. து. நடராசன், (பாடசாலைப் பொருளர்) வரவேற்புக்குழுத் துணைத்தலைவர். |
| கி. இராமலிங்கம், எம்.ஏ., மா. ப. தியாகராச முதலியார், பி.ஏ., சமாஜச் செயலர்கள். | நா. ப. தணிகையரசு, வரவேற்புக்குழுச் செயலர். |

---

**சில அறிவிப்புகள்:**

1. மாநாட்டில் கைக்குத்தலரிசி உணவும் நாட்டுப் பானமும் அளிக்கப்பெறும்.

2. சொற்பொழிவுகளுக்கிடையே வள்ளலார் இல்ல மாணவரால் திருநெறி உரையாடல்களும் அருட்பாக்கள் ஓதலும் நிகழும்.

3. மங்கையர் மாநாட்டில் ஆண்பாலாருக்குத் தனியிடமும் மற்ற நிகழ்ச்சிகளுக்குப் பெண்பாலாருக்குத் தனியிடமும் ஏற்பாடு செய்யப்படும்.

4. மாநாட்டில் சைவசமயப் பொருட் காட்சி ஒன்றும் நடைபெற ஏற்பாடாகி வருகின்றது.

5. நாள் தாள், பிற தாள், செய்தி வரைவோருக்கு எல்லா வசதிகளும் செய்து தரப்படும்.

6. வாலாஜாபாத்துக்குச் சென்னை முதலிய பல இடங்களிலிருந்தும் பேருந்து (பஸ்) வசதி உண்டு.

7. வாலாஜாபாத் புகைவண்டி நிலையத்திலும், பேருந்து (பஸ்) நிலையத்திலும் தொண்டர் படையினர் மாநாட்டுக்கு வரும் தலைவர் சொற்பொழிவாளர்களையும் அன்பர்களையும் வரவேற்பர்.

# நிகழ்ச்சி நிரல்

**முதல்நாள் : மார்கழி 10உ (25-12-59) வெள்ளிக்கிழமை**

முற்பகல் நிகழ்ச்சி : காலை 7-00 மணிமுதல் 12-00 மணிவரை

**கந்தர் அநுபூதி வெளியீடு**—வாலாஜாபாத் - சுப்பிரமணிய சுவாமி கோயிலில் காலை 6-45 மணி.

**தலைவர்கள் - திருமுறைகள் - ஊர்வலம்**—மாணவர்கள் தேவார பாராயணத்துடன் காலை 7 மணி.

சைவர் மாநாடு

[இ. ம. பாடசாலையில் காலைச் சிற்றுண்டிக்குப் பின் 8 மணியளவில்]

கொடியேற்றல்—இன்னிசைக் கருவிகளுடன் மாணவர் கொடி வணக்கம்.

திறப்புரை—உயர்திரு. **அ. உத்தண்டராமன், I.A.S.,** அவர்கள்

வரவேற்புரை—வரவேற்புக் குழுத் தலைவர்.

ஆண்டு அறிக்கை படித்தல்—சமாஜச் செயலர்.

தலைமையுரை—**சிவத்திரு. வித்துவான் - சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்.**

**சொற்பொழிவுகள் :**

சங்க காலத்திற்கு முற்பட்ட சைவர்—இராவ்சாகிப் - **திரு. டி. எ. வி. நாதன், பி.எ., பி.எல்., பல்கலைக் கழகம், சென்னை.**

சங்க காலச் சைவம்—**திரு. அ. மு. பரமசிவானந்தம், எம்.எ., எம்.லிட்., பச்சையப்பன் கல்லூரி, சென்னை.**

பல்லவர் காலச் சைவம்—புலவர் - **திரு. முருகவேள், எம்.எ., எம்.ஓ.எல்., கிறித்தவக் கல்லூரி, தாம்பரம்.**

பிற்பகல் நிகழ்ச்சி : 3-00 மணிமுதல் 6-00 மணிவரை

**சொற்பொழிவுகள் :**

சோழர்காலச் சைவம்—**திரு. ஜி. கலியாணம், எம்.எ., ஆசிரியர், 'திருக்கோயில்', அறநிலையத்துறை, சென்னை.**

பிற்காலச் சைவம்—**திரு. பூ. ஆலாலசுந்தரம் செட்டியார், எம்.எ., தமிழ்த்துறைத் தலைவர், கிறித்தவக் கல்லூரி, தாம்பரம்.**

இக்காலச் சைவம்—**திரு. ச. சிவகுமாரன், எம்.எ., பின்னி வணிக உயர் அலுவலர், சென்னை.**



அறிவியலும் சைவமும்—**சித்தாந்த சிகாமணி - திரு. க. வச்சிரவேல் முதலியார், பி.எ., எல்.டி., பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி, காஞ்சிபுரம்.**

சைவம் வளர வழிகள்—**டாக்டர் மா. இராசமாணிக்கனார், எம்.எ., எல்.டி., எம்.ஓ.எல்., பிஎச்.டி., பல்கலைக் கழகம், சென்னை.**

**மாலை வழிபாடு :** வள்ளலார் இல்லத்தில் - 6-30 மணிக்கு - அம்பலவாணர் திருமுன்.

இரவு நிகழ்ச்சி : 8-00 மணிக்கு [உணவுக்குப் பின்]

வள்ளலார் இல்ல மாணவர்களின் பலவகைக் களியாட்டு.

**இரண்டாம் நாள் : மார்கழி 11உ (26-12-59) சனிக்கிழமை**

முற்பகல் நிகழ்ச்சி : 7-00 மணிமுதல் 12-00 மணிவரை

**காலை வழிபாடு :** வள்ளலார் இல்லத்தில் - 7-00 மணிக்கு - அம்பலவாணர் திருமுன்.

**சொற்பொழிவுகள் :**

[இந்துமத பாடசாலையில் சிற்றுண்டிக்குப் பின் 8-00 மணிக்கு]

சைவத்தின் உயிர் நாடிகள்—**திரு. திருஞானசம்பந்தம், எம்.எ., எல்.டி., வடமொழித்துறைத் தலைவர், அரசினர் மாநிலக் கல்லூரி, சென்னை.**

அன்றட வாழ்க்கையில் சைவ சித்தாந்தம்—**வித்துவான் திரு. அருணைவடிவேல் முதலியார், பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி, காஞ்சிபுரம்.**

அருள் நூல்கள் ஓதலின் அரும்பயன்—
**திருவாட்டி இராசரத்தினம் அம்மையார், எம்.எ., எல்.டி., லேடி வில்லிங்டன் கல்லூரி, சென்னை.**

உபநிடதங்களும் சித்தாந்த சைவமும்—
**ஆசார்யா திரு. சந்திரகாந்த சாஸ்திரியார், எம்.எ.,(வடமொழி); எம்.எ.,(ஹிந்தி), அரசினர் மாநிலக் கல்லூரி, சென்னை.**

வைப்புத் தலங்கள் எவை?—**திரு. இ. கி. நாராயணசாமி நாயுடு, பெருநிலக்கிழார், கடலூர்.**

பிற்பகல் நிகழ்ச்சி : 2-30 மணிமுதல் 6-00 மணிவரை

சைவ மங்கையர் மாநாடு

[இந்துமத பாடசாலையில்]

**திறப்புரை**—திருமதி. நீலாவதி இராமசுப்பிரமணியம் அவர்கள்.

**தலைமையுரை**—திருமதி. சௌந்தரம் கைலாசம் அவர்கள்.

**சொற்பொழிவுகள் :**

மணவாழ்க்கையில் சைவம்—திருவாட்டி - கு. ரா. கமலம் அம்மையார், எம்.ஏ., எம்.எஸ்ஸி., இயைபியல் பேராசிரியர், ஸ்டெல்லா மேரி கல்லூரி, சென்னை.

வீட்டு அமைப்பில் சைவம்—திருவாட்டி-ஜெயகுமாரி பாஸ்கரன், சென்னை.

நடை உடையில் சைவம்—திருவாட்டி - சி. த. மங்கையர்க்கரசி அம்மையார், பி.ஏ., பி.டி., சென்னை.

சமையல் அறையில் சைவம்—திருவாட்டி - புனிதவதி அம்மையார், சென்னை.

விருந்தோம்பலில் சைவம்—திருவாட்டி-வ. பா. தாமரைக்கண்ணி அம்மையார், செயலர், தாய்மார் கழகம், சென்னை.

பிள்ளைவளர்ப்பில் சைவம்—திருவாட்டி-கிருஷ்ண சஞ்சீவி, பி.ஏ., பி.டி., காஞ்சிபுரம்.

மங்கையர் வாழ்வில் சைவம்—திருவாட்டி - வித்துவான் - சிவ. மீனாட்சிசுந்தரசிவை, சென்னை.

சமய வளர்ச்சியில் மங்கையர் பங்கு—திருவாட்டி - மா. இரா. தமிழரசி, பி.ஏ., சென்னை.

பிற சமயங்களில் மங்கையர் பங்கு—
திருவாட்டி - சு. இராஜலட்சுமி, பி.ஏ. (சிறப்பு), ஆராய்ச்சித் துறை, பல்கலைக் கழகம், சென்னை.

**மாலை வழிபாடு :** வள்ளலார் இல்லத்தில் 6-30 மணிக்கு அம்பலவாணர் திருமுன்.

இரவு நிகழ்ச்சி : 8-00 மணிக்குமேல்

வாலாஜாபாத் இந்துமத பாடசாலையின் ஆசிரியர்கள் எழுதிய "திருநீற்றன்பு" என்னும் நாடகம் இ. ம. பள்ளி மாணவர்களால் நடத்தப்பெறும்.



**மூன்றும் நாள் : மார்கழி 12உ (27-12-59) ஞாயிற்றுக்கிழமை**

முற்பகல் நிகழ்ச்சி : காலை 7-00 மணிமுதல் 12-00 மணிவரை

**காலை வழிபாடு :** வள்ளலார் இல்லத்தில் - 7-00 மணிக்கு - அம்பலவாணர் திருமுன்.

சைவ இளைஞர் மாநாடு

[இந்துமத பாடசாலையில் காலைச் சிற்றுண்டிக்குப் பின்]

திறப்புரை—உயர்திரு. மணலி. சீனி. இராமகிருஷ்ண முதலியார், B.A., அவர்கள்.

தலைமையுரை—திரு. த. சஞ்சீவி, M.A., அவர்கள்.

**சொற்பொழிவுகள் :**

மாணவ வாழ்க்கையில் சைவம்—
திரு. மணி அரசு-K. நாராயணசாமி, சபாநாயகர் சிவசண்முகம் மாணவர் உணவு விடுதி, இராயபுரம்.

ஆசிரியர் வாழ்வில் சைவம்—திரு. மு. அண்ணாமலை, எம்.ஏ., தமிழ்ப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சிதம்பரம்.

அலுவல்துறையில் சைவம்—திரு. டி. எஸ். பழநிவேல், பி.ஏ., மாடர்ன் பாளையக்காட் கம்பெனி, சென்னை.

வாணிபத்தில் சைவம்—திரு. இ. த. தட்சிணாமூர்த்தி, பி.காம்., சபாநாயகர் சிவசண்முகம் மாணவர் உணவு விடுதி, இராயபுரம்.

சட்டமும் சமயமும்—திரு. சி. த. சேக்கிழார், எம்.ஏ., பி.எல்., மயிலை, சென்னை.

சமுதாய வாழ்வில் சைவம்—திரு. சுந்தரவடிவேல், பி.ஏ., பி.எல்., அவர்கள், சென்னை.

சைவத்தில் இளைஞர் பற்று வைக்க வழிவகைகள்—
—திரு. சொ. பரமசிவம், எம்.ஏ., தமிழ் விரிவுரையாளர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

**சமாஜ உறுப்பினர் பொதுக்கூட்டமும் செயற்குழுக் கூட்டமும்** இடைவேளையில் பகல் உணவுக்குப்பின் 1-30 மணிமுதல் 3-00 மணிக்குள் வள்ளலார் இல்லத்தில் அம்பலவாணர் திருமுன் நடைபெறும்.

பிற்பகல் நிகழ்ச்சி : 3-30 மணிமுதல் 6-30 மணிவரை
[இந்துமத பாடசாலையில்]
சைவர் மாநாட்டுத் தொடர்ச்சி :

**சொற்பொழிவுகள் :**

சுந்தரர் வழக்கும் சேக்கிழார் வாக்கும்—திரு. ஆர். சதாசிவம், பி.ஏ.,எம்.எல்., முதன்மை மாகாணத் தண்டனையர், சென்னை.

அழுதால் உன்னைப் பெறலாமே—திரு. பி. எச். சுந்தரம், பி.ஏ., பி.எல்., ஓய்வுபெற்ற மாவட்ட மாநடுவர், சென்னை.

திருமுறைப் பண்கள்—திரு. ப. சுந்தரேசன், தமிழ்ப் பண்ணாராய்ச்சி வல்லுநர், குடந்தை.

பொதுமக்களுக்குச் சித்தாந்த உண்மைகள்—
திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை, பி.ஏ., எல்.டி., ஓய்வுபெற்ற கல்வித்துறைத் துணை இயக்குநர், சென்னை.

நன்றி கூறலும் வாழ்த்தும்.

" வாழ்க சீரடியா ரெல்லாம் "  " வையகம் துயர் தீர்கவே "

**குறிப்பு :**—ஒவ்வொரு சொற்பொழிவும் வானொலிப் பேச்சுப்போலச் செப்பனிடப்பட்ட செழுமையான முழுப்பேச்சாக அவரவர்க்குக் குறிப்பிடப்பட்டுள்ள (24 அல்லது 20 நிமிடங்கள்) கால அளவுக்குள் நிகழும். மூன்று நாட்களும் இருந்து முறையாக அவற்றைச் செவி மடுத்துவிட்டால், சைவத்தைப் பற்றிய எல்லாச் செய்திகளையும் தெரிந்துகொள்ள வாய்ப்பாகும். சொற்பொழிவுகளை எல்லாம் முன்னரே தொகுத்து நூலாக அச்சிடவும் ஏற்பாடாகின்றது. மாநாட்டு நிகழ்ச்சிகள் யாவும் சைவப்பயிற்சி யளிக்கும் தன்மையவாக இருக்குமாதலின், மாநாட்டுக்கு வருபவர்கள் சைவ ஒழுகலாற்றையும் பழகிக் கொள்ள வசதியாக இருக்கும்.

**வேண்டுகோள் :**—1. சமாஜ உறுப்பினர்களும், மற்ற அன்பர்களும் தனி அழைப்பிதழ் வராவிடினும் இதையே சிறப்பழைப்பாகக் கருதி வரவும். 2. சமாஜ மாவட்ட முகவர்கள் தத்தம் பகுதியிலிருந்து வருபவர்கள் எத்தனை பேர்களுக்கு உணவு விடுதி வசதிகள் தேவை என்பதை வரவேற்புக் குழுச் செயலாளருக்கு 23–12–59க்குள் தெரிவிக்கவும். 3. சமாஜச் செயற்குழுக் கூட்டத்திற்குத் தீர்மானங்களை அனுப்புகிறவர்கள், 'தமிழகம்', சென்னை —30 என்ற முகவரிக்கு 21–12–59க்குள் அவற்றை அனுப்பவும். 4. சமாஜ உறுப்பினரல்லாத அன்பர்களும் மாநாட்டுக்கு வரலாம். அத்தகையவர்கள் முன்கூட்டித் தெரிவித்தல் நல்லது. மாநாட்டிலேயே கட்டணம் செலுத்திச் சமாஜ உறுப்பினராகலாம்.

சாது அச்சுக்கூடம், மயிலாப்பூர், சென்னை–4

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின்
திங்கள் தமிழ்த் தாள்

மலர் : முப்பத்திரண்டு
1959

பத்திராசிரியர் :
புலவர் - முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.

உதவிப் பத்திராசிரியர் :
மு. நாராயணசாமி

சைவ சித்தாந்த மகா சமாஜம்
14, வாரன் ரோடு, மயிலாப்பூர், சென்னை-4

# உள்ளுறை


பொருள் கட்டுரையாளர் பக்க எண்

அப்பர் அருள்மொழி—வித்வான்-சிவ. மீனாட்சி
சுந்தர சிவை 217, 239
அப்பர் கரையேறிய திருக்குளத் திருப்பணி—அப்பர்
திருப்பணிக் குழுவினர் 243, 344
“ அப்பரைப்பற்றிய ஓர் ஆய்வுரை ”—புலவர்-முருக
வேள், எம்.ஏ., எம்.ஓ.எல். ... 385
அளவை இயல்—புலவர்-முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.
16, 257, 289, 321
அறனும் அன்பும்- முரு. பழ. இரத்தினம் செட்டியார் 361
ஆசிமொழி—ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் ... 76
உண்மை விளக்கம்—ஸ்ரீலஸ்ரீ சம்பந்த சரணாலயத்
தம்பிரான் சுவாமிகள் ... 37
எட்டும் இரண்டும்—வித்துவான்-அம்பை-சங்கரனார் ... 331
ஒரு பழம் பாடலின் உருவம்—முதுபெரும் புலவர்-
முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் ... 152
கந்தரனுபூதி—மா. ப. தியாகராசன், பி.ஏ. 180, 213, 336
குடம்பையும் புள்ளும்—பி. கிருஷ்ணசாமி ... 373
குடும்பக் கூட்டு வழிபாடு—வித்துவான் - அம்பை -
சங்கரனார் ... 173
கூத்தன் கூத்து—வித்துவான்-அ. சண்முகசுந்தரம்,
பி.ஏ. 250, 272
சதுரர் யார்?—திருநாவுக்கரசு தேசிகர் ... 146
சமாஜ ஆண்டு விழா—நே. த. கிருஷ்ணசாமி, பி.ஏ.,
பி.டி. ... 121
சமாஜத் தேர்வுகள் ... 119
சமாஜ மாநாட்டுப் பெருவிண்ணப்பம்—இராவ்சாகிப்-
நல். முருகேச முதலியார், பி.ஏ. ... 417
சமாஜ விழாவும் வேண்டுகோளும்—புலவர் முருக
வேள், எம்.ஏ., எம்.ஓ.எல். ... 85
“ சித்தாந்த சிகாமணி”க்குப் பாராட்டு ... 156
சித்தாந்த வகுப்புக்கள்—புலவர் - முருகவேள், எம்.ஏ.,
எம்.ஓ.எல். ... 89
சிவஞான சுவாமிகள்— ,, ,, ,, ... 129





பொருள் கட்டுரையாளர் பக்க எண்

சிவன் என் மருத்துவன்—கவியரசு கு. நடேசகவுண்டர் 225
சிவாகமப் பரிபாலனம்—மு. கிருஷ்ணசாமி முதலியார் 209
284, 350, 382
செய்திகள்
சேக்கிழார் திருவாக்குண்மை—வி. ஏ. ஆத்மாராம் நாயுடு 342
—ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர நாயகர் 56
,, ,,
சேக்கிழார் விளக்கும் செம்பொருள்—இளஞ்சைவப்
புலவர்-எஸ். ஆர். தேமொழி ... 267
சேவற் கொடி—வித்துவான்-க. சம்பந்தன் ... 368
சைவ இளைஞர் மாநாட்டுத் தலைமையுரை—வித்து
வான்-அடிகளாசிரியர் ... 26
சைவ சமயத் தெளிவு - இளைஞருக்கு—தி. கி. நாரா
யணசாமி 281, 309
சைவத் தேர்வு விடைகள்—1959 ... 410
சைவ மங்கையர் மாநாட்டுத் தலைமையுரை—வித்து
வான்-ந. மங்கையர்க்கரசி அம்மையார் ... 17
ஞான ரச வாதம்—வைத்திய ரத்தின - பு. வே. தேவ
ராஜ முதலியார் ... 318
ஞானியார் அடிகளின் பேச்சாற்றல்—ம. பொ. சிவ
ஞானம் ... 203
ஞானியார் சுவாமிகள்—மு. அருணாசலம், எம்.ஏ. ... 182
தத்துவ விளக்கம்—தி. கி நாராயணசாமி நாயுடு ... 97
தமிழுக்கும் சைவத்திற்கும் ஆற்றிய தொண்டு—அருள்
தியாகராசர் ... 403
தலைமையுரை—சித்தாந்த சிகாமணி-க. வச்சிரவேல்
முதலியார், பி.ஏ., எல்.டி. ... 49
தவம் யாது?—கோவைகிழார் - சி. எம். இராமச்சந்
திரன் செட்டியார், பி.ஏ., பி.எல். ... 177
திருக்கோவையார்—புலவர் - முருகவேள், எம்.ஏ.,
எம்.ஓ.எல். ... 353
திருநாவுக்கரசர்—மா. ப. தியாகராஜன், பி.ஏ. ... 153
“ திருநின்ற செம்மை ”—புலவர்-முருகவேள், எம்.ஏ.,
எம்.ஓ.எல். ... 193
திருநெறி விளக்கம் ... 347
திருவள்ளுவர் நினைவுநாள் நிகழ்ச்சி ... 160
“திருவாசகமணி - சிவபக்தமணி” ... 224

| பொருள் — கட்டுரையாளர் | பக்க எண் |
|---|---|
| தோழமை—மா. ப. தியாகராஜ முதலியார், பி.ஏ. | ... 278 |
| நல்லோர் நடுவில்—கே. இராமநாதன், பி.ஏ., பி.எல். | ... 95 |
| நல்வாழ்வு—வித்துவான் - மா. நடராசன், எம்.ஏ., பி.ஓ.எல். | ... 306 |
| பந்தணைநல்லூரில் பரமன் அடியார்கள் | ... 418 |
| "பிறந்த நாள்வயிற் பெருமங்கலம்"—புலவர் முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல். | ... 338 |
| புகலூர்மேவிய புண்ணியன்—ஜி. கலியாணம், எம்.ஏ., டிப். எகனமிக்ஸ். | ... 204 |
| பெண்வளர்த்த பாசம்—வ. பா. தாமரைக்கண்ணியம்மையார் | ... 107 |
| பொன் விழா—புலவர் முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல். | 340 |
| மணிவிழா | ... 158 |
| மதிப்புரைகள்—புலவர்-முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்- | 127, 192, 253, 372 |
| மரம் முந்தியா? வித்து முந்தியா?—முரு. பழ. இரத்தினம் செட்டியார் | ... 397 |
| மலரின் நுண்மாண்—மா. ப. தியாகராசன் பி.ஏ. | ... 378 |
| முன்னுரை—இராவ்சாகிப்-நல். முருகேச முதலியார், பி.ஏ. | ... 1 |
| வரவேற்புரை—எஸ். துரைசாமி அய்யர் | ... 12 |
| வரவேற்பு வாழ்த்துப்பா—மதுரைச் சைவ சித்தாந்த சபை | ... 117 |
| வாழ்த்தியல் இன்னுரை—முருகவேள் | ... 116 |
| வாழ்த்துப்பா—முருகவேள் | ... 287 |
| வாழ்வாவது எது?—ந. ரா ஆடலரசு | ... 143 |
| வீடுபேற்றில் மலம் உண்டா?—முரு. பழ. இரத்தினம் செட்டியார் | ... 228 |
| 53-வது ஆண்டு அறிக்கை—மா. ப. தியாகராஜன், பி.ஏ. | ... 64 |
| 1959-ம் ஆண்டின் சமாஜப் பணியாளர்கள் | ... 125 |


---

சாது அச்சுக்கூடம், மயிலாப்பூர், சென்னை-4

Reg. M. 2330

உ
சிவமயம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுள் நாடு

மலர் 32 | விகாரி மார்கழி 1959 டிசம்பர் | இதழ் 12

## "அப்பரைப்பற்றிய ஓர் ஆய்வுரை"

(முருகவேள்)

"அப்பர் சமணராய் இருந்தபோது அவருக்கு வயிற்று வலி உண்டாயிற்றென்றும், சைவராக மாறித் திருவதிகையில் பதிகம் பாடிய பிறகே அவருக்கு அவ்வலி நீங்கிற்றென்றும் தற்போது வழங்கிவரும் அப்பருடைய வாழ்க்கை வரலாறு கூறும். இதற்கு ஆதாரமாக இருப்பது 'கூற்றாயின வாறு விலக்ககிலீர்' என்று தொடங்கும் திருவதிகைப் பதிகமே. இதில் உள்ள பத்துப் பாடல்களையும் கூர்ந்து நோக்கினால் நாம் மேற்கூறிய வரலாற்றிற்கு மாறான முடிவுக்கு வரவேண்டி இருக்கிறது. அதாவது, அப்பர் சைவராக மாறி வாழ்ந்துவந்த காலத்தில்தான் அவருக்கு அவ்வலி உண்டாயிற்று என்று கொள்ளக் கிடக்கின்றது"—எனச் சிவநலமும் தமிழ் நலமும் செறிந்த சிறந்த நல்லறிஞர் ஒருவர் 'அப்பரைப் பற்றிய ஆய்வுரை' ஒன்றினைச் சின்னாட்களுக்கு முன்னர் நிகழ்த்தியுள்ளார்.

அவ்வாய்வுரையின் முடிவில், "எப்படி இருந்தபோதிலும், 'கூற்றாயினவாறு' என்று தொடங்கும் பதிகத்தால் குறிக்கப்படும் சூலை, அப்பர் சைவரான பிறகுதான் தோன்றிற்று என்பதற்குப் போதுமான அகச்சான்றுகள் கீழே குறிக்கப்பட்டன. இவைகள் உண்மையோ அல்லவோ என்பதைத் தமிழுலகம் நடுநிலை நின்று ஆராயுமாக" எனவும் பணித்துள்ளார். அவர்தம் விருப்பத்திற் கிணங்கக்

கருத்து விளக்கத்தின் பொருட்டே இக்கட்டுரை எழுதப் படுகின்றது.

அவ்வாய்வுரையின்படி, "அப்பர் சைவராக மாறி வாழ்ந்துவந்த காலத்தில்தான் அவருக்கு அவ்வலி உண்டாயிற்று" எனத் துணியப்படுமாயின், அது சைவ சமயத்திற்கும், அப்பரின் வாழ்க்கை வரலாற்றிற்கும், அதனை ஆராய்ந்து பாடிய சேக்கிழாரின் சிறப்புக்கும், எத்துணை முழு மாருக முடியும் என்பது அறிஞர்கள் சிந்தித்தற்குரியது.

ஆய்வுரை நிகழ்த்திய அறிஞரவர்கள், தமது ஆய்வுரையினைத்தொடக்கத்திலேயே தவறான அடிப்படையை அமைத்துக்கொண்டு நிகழ்த்தத் தொடங்கி இருக்கின்றார்கள் எனத் தெரிகின்றது. "அப்பர் சைவராக மாறித் திருவதிகையில் பதிகம் பாடிய பிறகே அவருக்கு அவ்வலி நீங்கிற்று என்று தற்போது வழங்கிவரும் அப்பருடைய வாழ்க்கை வரலாறு கூறும்" என்று அவர்கள் குறிப்பிட்டிருப்பது, தொடக்கத்திலேயே அவர்கள் பிழைபட்டதனைப் புலப்படுத்துவதாகும். திருவதிகையில் பதிகம் பாடிச் சூலைநோய் தீர்ந்த பிறகே அப்பர் சைவராக மாறினுர் என்பதுதான் தற்போது வழங்கிவரும் வரலாறு. சூலைநோய் தீர்ந்தது முன்னரும், சைவராக மாறியது பின்னரும் நிகழ்ந்தனவாகும். இவ்வுண்மையினை,

" நீற்றால்நிறை வாகிய மேனியுடன்
நிறையன்புறு சிந்தையில் நேசமிக
மாற்றார்புரம் மாற்றிய வேதியரை
மருளும்பிணி மாயை அறுத்திடுவான்
கூற்றாயின வாறு விலக்ககிலீர்
என நீடிய கோதில் திருப்பதிகம்
போற்றால்உல கேழின் வரும்துயரும்
போமாறெதிர் நின்று புகன்றனரால்."

" மன்னும்பதி கம்அது பாடியபின்
வயிறுற்றடு சூலை மறப்பிணிதான்
அந்நின்ற நிலைக்கண் அகன்றிடலும்
அடியேன்உயி ரோடருள் தந்ததெனச்
செந்நின்ற பரம்பொருள் ஆனவர்தம்
திருவார்அருள் பெற்ற சிறப்புடையோர்
முன்னின்ற தெருட்சி மருட்சியினால்
முதல்வன் கருணைக்கடல் மூழ்கினரே..."



" பொய்வாய்மை பெருக்கிய புன்சமயப்
பொறியில்சமண் நீசர் புறத்துறையாம்
அவ்வாழ்குழி யின்கண் விழுந்தெழுமா
றறியாது மயங்கி அவம்புரிவேன்
மைவாச நறுங்குழல் மாமலையாள்
மணவாளன் மலர்க்கழல் வந்தடையும்
இவ்வாழ்வு பெறத்தரு சூலையினுக்
கெதிர்செய்குறை என்கொல் எனத்தொழுவார்."

" மையற்றுறை ஏறி மகிழ்ந்தலர்சீர்
வாகீசர் மனத்தொடு வாய்மையுடன்
மெய்யுற்ற திருப்பணி செய்பவராய்
விரவுஞ்சிவ சின்னம் விளங்கிடவே
எய்துற்ற தியானம் அறுவுணர்வும்
ஈறின்றி எழுந்திரு வாசகமும்
கையிற்றிக ழும்உழ வாரமுடன்
கைக்கொண்டு கலந்து கசிந்தனரே"

எனவரும் பெரிய புராணப் பாடல்கள் ஐயமறச் செவ்விதில் தெளிவியாநிற்கும். எனவே, திருப்பதிகம் பாடிச் சூலைநோய் தீரப்பெற்ற பிறகே, அப்பர் சைவராயினர் என்றலே வரலாற்றின்படி உண்மையாகும்.

(1) "'இனி, நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன் நினையாது ஒருபோதும் இருந்தறியேன்' 'சலம் பூவொடு தூபம் மறந்தறியேன் தமிழோடு இசைபாடல் மறந்தறியேன், நலம் தீங்கிலும் உன்னை மறந்தறியேன் உன் நாமம் என் நாவில் மறந்தறியேன்' என்றபடி அப்பர் சிவனை மறந்து ஒருபோதும் இல்லையென்றால் அந்த நிலையில் அவர் சைவரான பிறகே இருந்திருக்க முடியும். அதற்குமுன் சமணராய் இருந்தபொழுது அவர் சிவனை மறந்து இருந்தறியார் என்றால் அது உண்மையாகாதன்றோ?"—என ஆய்வுரையாளர் வினவுகின்றார்.

இத்திருப்பதிகம் பாடப்பெற்ற சூழ்நிலையையும், அதுபோது அப்பர் கொண்டிருந்த மன நிலையையும் உன்னி உணர்ந்துகொண்டால், இவ்வினை நிகழ்தற்கே இடனில்லை. இத்திருப்பதிகம் பாடிய நிலையில் அப்பர் சமணராகவும் இல்லை; சைவராகவும் இல்லை. 'இருபாற் பட்டு இடை ஊசலாடி ஒருபாற் படாது உளம்' என்பது போன்ற ஒரு நிலையில் அவரது மனம் அங்குமிங்குமாக ஊசலாடிக்

கொண்டே இருந்ததெனலாம். அவர் இவ்விரு சமயங்களையும் குறித்து எத்தகைய முடிவுக்கும் வந்துவிடாமல் உண்மை காணும் ஆய்வுநிலைக் குரியவராக மட்டுமே இருந்தார் எனவே தெரிகின்றது. இவ்வுணர்ச்சித் தடுமாற்ற நிலையினை "என்போலிகள் உம்மை இனித்தெளியார் அடியார் படுவது இதுவேயாகில்" எனவரும் அப்பர் திருமொழிகொண்டே உணரலாம். "என்போலிகள்" என்றது அவர் இன்னும் சமண் சமயச் சார்பினை அறவே விட்டு நீங்காத நிலையையும், "அடியார்" என்றது மீண்டும் சைவசமயம் சார்தற்கேற்ற மனமாற்றம் எய்திவிட்ட நிலையையும் குறிப்பில் புலப்படுத்துதல் காணலாம். "அடியார்" என்றது தன்னைப் பிறன்போற் கூறிய கூற்றாகும். இது தன்மையிற் படர்க்கைவந்த வழுவமைதி எனப்படும்.

அப்பர் இங்ஙனம் உணர்ச்சித் தடுமாற்றநிலையில் இருந்ததனைக் "காத்தாள்பவர் காவல் இகழ்ந்தமையாற் கரைநின்றவர் கண்டுகொள் என்றுசொல்லி நீத்தாய கயம்புக நூக்கியிட நிலைக்கோள்ளும் வழித்துறை ஒன்றறியேன்" எனவரும் திருமொழிகொண்டும் தெளியலாம். "குறிக்கோள் இலாது கெட்டேன்" என்றதும் கருதுதற் குரியது. மேலும், பிறசமயச் சூழ் நிலைகளில் இருப்பினும் ஒருவர் சிவனை மறவாதிருத்தல் இயலும் என்பதற்குச் சாக்கிய நாயனார் வரலாறே போதிய சான்றாகும். "எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும் மன்னியசீர்ச் சங்கரன் தாள் மறவாமை பொருள்" என்பதனை மனத்தில் பதித்துக் கொண்டால், அப்பர் சமண் சமயச் சார்பில் இருந்துழியும் சிவபிரானை மறவாதிருந்திருத்தல் கூடும் எனத் தெளியலாம். மேலும், "விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயம் செய்தே எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற் கேற்றதாகும்" என்பனபோன்ற அப்பர் அருள்மொழிகளும் ஈண்டு இயைபுபடுத்தி எண்ணி உணர்தற்குரியன.

மேலும் அப்பர் சைவராக மாறிய பிறகும் "தயாமூல தன்மம்" (6.20.6., 6.40.6) என்னும் தலைசிறந்த சமண் சமயக் கொள்கையினை விடாமல் சிறப்புறத் தழீஇக் குறிப்பிட்டிருத்தல் காண்டுமாகலின், அவர் சமணராக இருந்த போதும் சீரிய சிவநெறிக் கொள்கைகள் ஒழுக்கங்கள் முதலியவற்றைக் கைவிடாது ஏற்றபெற்றி போற்றியிருப்



பார் எனத் துணிதற்கு இடன் உள்ளது. ஆதலின், சிவனை மறந்து ஒருபோதும் இராத நிலைமையில் அவர் சைவரான பிறகே இருந்திருக்க முடியும் என்றல் பொருந்தாது.

(2) "'துணிந்தே யுமக்கு ஆட்செய்து வாழலுற்றால் சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்' என்றவிடத்தில், முன் இரண்டு பாக்களில் சொன்னதைவிட வெளிப்படையாக, நான் துணிந்து சமண சமயத்தைவிட்டுச் சைவனாகி உமக்குத் தொண்டுசெய்து வாழ்கின்றேன். இந்நிலையில் எனக்குச் சூலைநோய் வந்ததே. இதைத் தவிர்த்தருள்வீராக, என்று தமக்குச் சூலைநோய் தோன்றியது எப்போது என்பதை அப்பர் வெளிப்படுத்துகின்றார். 'வாழலுற்றல்' என்றதனால், நோய் தோன்றுமுன் சிலகாலம் சைவராக வாழ்ந்தார் என்பது பெறப்படும்"—என ஆய்வுரையாளர் துணிகின்றார்.

"வாழலுற்றல்" என்ற சொல்லின் இயல்பு அவர் கருத்துக்கு ஆக்கம் தருவதன்று. அது 'செயின்' என்னும் வாய்பாட்டு வினையெச்சப் பொருளில் எதிர்காலத்தைக் குறிப்பதாகும். ஆதலின், அஃது அப்பர் இன்னும் ஆட்செய்து வாழலுறவில்லை என்பதனையே புலப்படுத்தும். 'துணிந்தே உமக்கு ஆட்செய்து வாழலுற்றால்' என்றதனால் அவர் இன்னும் சிவபெருமானுக்கு ஆட்செய்து வாழ்தற்கண் துணிவுகொள்ள இயலாது ஐயுறவு நிலையில் இருந்தார் என்பதே வெளிப்படும். எனவே, அப்பர் நோய் தோன்றுமுன் சிலகாலம் சைவராக வாழ்ந்தார் என்பது பொருந்தாது. மேலும், 'வாழலுற்றால்' என்னும் வினையெச்சம் 'சுடுகின்றது' என்னும் சொல்லோடு இயையாமல் 'தவிர்த்தருளீர்' என்னும் வினைமுற்றையே ஏற்று முடிவதாகக் கொள்ளுதல் வேண்டும். இறைவன் தமக்குச் சூலைநோய் தீர்த்தருளினால், தாம் இனி அவர்க்குத் துணிந்து ஆட்செய்து வாழலுற ஒருப்படும் துணிபை உணர்த்தும் 'வேண்டுகோள் முறை'யும் அதனால் இனிது விளங்கும். இவ்வாறன்றிப் பிறவாறு கொள்ளுதல் இலக்கண நெறிமுறைக்கும் பிறவற்றிற்கும் சிறிதும் இயையாது.

(3) "'உயர்ந்தேன் மனை வாழ்க்கையும் ஒண்பொருளும்...' 'வலித்தேன் மனைவாழ்க்கை மகிழ்ந்தடியேன்...' என வருவனவற்றால், அப்பர் சமணமதத்தில் மாணி (பிரம்ம

சாரி)யாம் வேடம்தாங்கி இருந்ததை ஒழித்துச் சைவராகித் தமக்கையுடன் இல்லற வாழ்வில் இருந்தபோதுதான் சூலை நோய் தோன்றிற்றென்பது தெற்றெனத் தெரிகின்றதல்லவா? இவர் முன்னிருந்த சமணநிலையில் மனைவாழ்க்கை ஏது?" என ஆய்வுரையாளர் வினவுகின்றார்.

சமண மதத்தில் மனைவாழ்க்கை இல்லை என்பதற்கோ, அல்லது அப்பர் சைவராக மாறிய பிறகு மனைவாழ்க்கைதான் மேற்கொண்டிருந்தார் என்பதற்கோ தெளிவான போதிய சான்றில்லை. சமண மதம் சார்ந்தவர்களிடையும் மனை வாழ்க்கை நிலையினராகிய இல்லறத்தார் (உலக நோன்பிகள்) உண்டு என்பதும், அவர்கள் 'சிராவகர்' அல்லது 'சாவகர் எனப்படுவர் என்பதும்,

" வண்டுபடப் பழுநிய தேனூர் தோற்றத்துப்
பூவும் புகையும் சாவகர் பழிச்ச "

எனவரும் மதுரைக் காஞ்சி வரிகளானும், சமண் சமயம் சார்ந்து இல்லிருந்து விரதங் காத்தொழுகும் 'சிராவகர்' களுள் ஒருவனாகக் கோவலனை மாதரி குறிப்பிடுவதாகப் போதரும்,

" சாவக நோன்பிகள் அடிகள் ஆதலின்
நாத்தூண் நங்கையொடு நாள்வழிப் படூஉம்
அடிசில் ஆக்குதற்கு அமைந்தநற் கலங்கள்
நெடியா தளிமின் நீர்!"

என்னும் சிலப்பதிகார வரிகளானும் செவ்விதிற் றெளியப்படும்.

அன்றியும், மேலைத் தொடர்களுக்குரிய பொருள் ஆய்வுரையாளர் கருதும் பொருளின் வேறுபட்டதாகும். 'உயர்ந்தேன்' 'வலித்தேன்' என்பன ஈண்டுச் செருக்குற்று மயங்கினேன் என்னும் பொருட் குறிப்புடையனவாகும். அன்றியும், 'மனைவாழ்க்கை' என்னும் தொடர் 'இல்லற வாழ்வு' என்பதனைத்தான் ஈண்டுக் குறித்தது என்பது ஐயத்திற்குரியது. 'உயர்ந்தேன் மனையும் வாழ்க்கையும் ஒண்பொருளும்' என உம்மை விரித்தும் பொருள் கொள்ளிடன் உள்ளது.



' மாசில்மனத் துயர்ஒழிய மருள்நீக்கி யார்நிரம்பித்
தேசநெறி நிலையாமை கண்டறங்கள் செய்வாராய்க்
காசினிமேற் புகழ்விளங்க நிதியளித்துக் கருணையினால்
ஆசிலறச் சாலைகளும் தண்ணீர்ப்பந் தரும்அமைப்பார் "

" காவளர்த்தும் குளந்தொட்டும் கடப்பாடு வழுவாமல்
மேவினர்க்கு வேண்டுவன மகிழ்ந்தளித்தும் விருந்தளித்தும்
நாவலர்க்கு வளம்பெருக நல்கியும்நா னிலத்துள்ளோர்
யாவருக்கும் தவிராத ஈகைவினைத் துறைநின்றார் "

என்றபடி, பசு புண்ணியங்கள் பலவற்றைச் செய்த தாம், பதி புண்ணியங்கள் செய்து முன்னரே இறையருள்பெற முயலாதொழிந்த இழிதகவினையே, அப்பர் 'உயர்ந்தேன்' 'வலித்தேன்' எனக் குறிப்பிட்டருளினார் என்பதே சிவ நெறிப் பேரறிஞர்கள் துணிபு. அப்பர் தம் இளமைப் பருவத் திற் செய்த அறங்கள் இறை நினைவோடு இயையாத வெறும் பசுபுண்ணியங்களே என்பது, 'மனத்துயர் ஒழிய' 'தேசநெறி நிலையாமை கண்டு' 'புகழ் விளங்க' எனவரும் தொடர் களால் சேக்கிழார் பெருமான் குறிப்பிட்டருளி யிருத்தல் பற்றி உணர்ந்து கொள்ளப்படும். எனவே, 'உயர்ந்தேன் மனைவாழ்க்கை' 'வலித்தேன் மனைவாழ்க்கை மகிழ்ந்தடி யேன்' என்பனவற்றால் அப்பரை இல்லறவாழ்வு மேற் கொண்டவராகக் கொண்டு, அவர் இத்திருப்பதிகம் பாடிய பொழுது சைவராக இருந்தார் எனத் துணிதல் அமையாது.

(4) "'முன்னம் அடியேன் அறியாமையினால் முனிந் தென்னை நலிந்து முடக்கியிடப் பின்னையடியேன் உமக்கு ஆளும்பட்டேன்' என வருவதனால், முதலில் ஒருமுறை அப்பர்க்குச் சூலைநோய் தோன்றியதென்றும், அதனால் அவர் சைவரானார் எனத் தெரிகின்றதென்றும், இப்பாடல் களால் விளக்கப்படும் சூலைநோய் இரண்டாம்முறை வந்த தென்றும், அது 'Appendicitis' என இக்காலத்தில் கூறப் படுவதாக இருக்கலாமென்றும்"—ஆய்வுரையாளர் அறிவிக் கின்றார்.

இங்ஙனம் சூலைநோய் இருமுறை வந்ததென்பது ஆய் வுரையாளரின் வெறும் உன்ன (யூக)மே யன்றி அதற்குச் சான்று வேறெதுவுமில்லை. அப்பர்க்கு வந்த சூலைநோய்;

'Appendicitis' என இக்காலத்தார் வழங்கும் நோய்தானா என்பது குறித்தும், நாம் சான்றில்லாமையால் தெளிவாக எதுவும் துணிதல் இயலவில்லை. இன்னோரன்னவை 'தன்னான் ஒருபொருள் கருதிக் கூறல்' எனவே அறிஞர்களாற் கொள்ளப்படும். அப்பர்க்குச் சூலைநோய் இருமுறை வந்ததாகல் வேண்டும் என நிறுவும் சான்றாக, அவர் காட்டும் மேற்கோளுக்கு அவர் கருதும்பொருள் 'ஓர்த்தது இசைக்கும் பறை' என்பதற்கு ஏற்ப வலிந்தும் நலிந்தும் கொள்ளப்படுவதாகும். அம்மேற்கோளில் அமைந்துள்ள 'முன்னம்' என்னும்சொல் 'அறியாமை'யினைத் தழுவிநிற்க, அடுத்துவரும் 'பின்னை' என்பது அறியாமை நீங்கிய அறிவு நிலையினைச் சுட்டுகின்றது எனக் கொள்ளுதலே பொருத்தம். முன்னைய அறியாமைநிலை சிவபிரானுக்கு ஆட்படாதொழிந்த நிலையென்றும், பின்னைய அறிவுநிலை ஆட்பட்ட நிலையென்றும் கொள்ளுவதே இயல்பான உண்மைப் பொருளாகும். 'பின்னை அடியேன் உமக்குஆளும் பட்டேன்' என்புழிப் 'படுவேன்' எனற்பாலதே விரைவும் தெளிவும் பற்றிப் 'பட்டேன்' எனப் பெற்றதெனக் கோடல் வேண்டும்.

"வாராக் காலத்தும் நிகழும் காலத்தும்
ஓராங்கு வரூஉம் வினைச்சொற் கிளவி
இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல்
விரைந்த பொருள என்மனார் புலவர்"

என்பது தொல்காப்பியம். அன்றியும், கவிஞர் திரு. சுப்பிரமணிய பாரதியார் அவர்கள், நம் இந்தியப் பெருநாடு சுதந்திரம் எய்துவதற்கு நெடுநாட்கு முன்னரே "ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம்" என்று பாடியிருத்தலும் பிறவும் கருதி யுணர்தற்குரியன. எனவே, அப்பர் இத்திருப்பதிகம் பாடியபோது சமண் நெறியினின்று மீண்டு, சிவநெறி சார்தற்குரிய மனநிலையினை எய்தியிருந்தார் எனக் கோடலே வாய்வதாகுமன்றி, அவர் இதற்கு முன்னரே சைவராக மாறிவிட்டிருந்தார் என்று துணிதல் அமையாது.

(5) "இறுதியாக மேற்சொன்னவைகளை யெல்லாம் உறுதிப்படுத்த அச்சாணி அன்னதோர் வரி ஒன்பதாவது செய்யுளிற் காணப்படுகின்றது. அது, யாதெனில் 'என்போலிகள் உம்மை இனித் தெளியார் அடியார் படுவது இதுவே யாகில்' என்பது. இங்கே நாவுக்கரசரின் கருத்து என்ன? 'என் போன்று பிறசமயத்தில் இருந்து சைவ சமயத்தைத் தழுவியவர்கள் படும்பாடு இதுவேயானால், இனி ஒருபோதும் எவரும் நீரே உண்மைக் கடவுள், சைவ சமயமே சமயம்' என்னும் கூற்றுக்களை ஒப்புக்கொள்ள மாட்டார் என்பது அல்லவோ? இதிலிருந்து அவருக்குச் சூலைநோய் வந்தது சமண சமயத்தை விட்டுச் சைவரான பின்னரே என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல விளங்குகின்றதன்றோ?"—என ஆய்வுரையாளர் 'முடிந்தது முடித்தல்' ஆகத் துணிந்து கூறிவிடுகின்றார்.



'என்போலிகள்' என்பதற்கு 'என்போன்று பிற சமயத்தில் இருந்து சைவ சமயத்தைத் தழுவியவர்கள்' என ஆய்வுரையாளர் பொருள் கொள்கின்றார். 'என்னைப் போன்ற தெளிவில்லாதவர்கள்' என்பதே நேரிய இயல்பான பொருளாகும். 'தெளியார்' என வருவதனால் 'என் போலிகள்' என்று சுட்டியது தெளிவில்லாதவர்களையே என்பது பெறப்படும். தெளிவில்லாதவர்களோடு தம்மையும் ஒருவராகச் சேர்த்துக்கொண்டு 'என்போலிகள்' என்றது, அப்பர் பெருமானின் 'தாழ்வெனும் தன்மை'யை அறிவிப்பதாகும். இவ்வாறன்றி, இச் சொற்கிடக்கை முறையில், ஒரு சமயஞ் சார்ந்ததும் பிறிதொரு சமயத்தை விடுத்ததுமாகிய குறிப்பெதுவும் பெறப்படவில்லை. அறிவுடையோர் தாம் அனுபவிக்கும் துன்பங்களுக்கு,

"தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன"

எனவரும் புறப்பாடல் புகலுமாறு போல, முன்னர்த்தாம் செய்த தீவினையே காரணம், அவற்றிற்கு இறைவன் பொறுப்புடையன் அல்லன் என உணர்ந்து, அத்துன்பங்களை அனுபவியா நின்றுகொண்டே இறைவனுக்கு அடிமை செய்து ஒழுகுவர். தெளிவில்லாதவர்கள் அவ்வாறொழுகார்! ஆதலின் 'என்னுடைய சூலைநோயையே எடுத்துக் காட்டி நின்னுண்மை தெளியாமல் தெளிவில்லாதவர்கள் நின்னைப் பழித்துரைப்பார்கள்' என்னும் கருத்திலேயே, அப்பர் பெருமான் "என்போலிகள் உம்மை இனித் தெளி

யார் அடியார்படுவது இதுவே யாகில்" என அருளிச் செய்தனர் எனக்கோடலே ஈண்டைக்கு ஏற்புடையதாகும்.

ஆய்வுரையாளர் கருத்தின்படி, 'அப்பர் சைவராக மாறிய காலத்தில்தான் அவருக்குச் சூலைநோய் உண்டாயிற்று' எனத் துணிந்து கூற முற்படுவது, சைவசமயத்திற்குக் களங்கம் கற்பிப்பதாகவே முடியும். அன்றியும், சமணராக இருந்த அப்பர் சைவராக மாறியதற்குரிய காரணமும் சூழ்நிலையும் அதனால் விளங்காமற் போகும். "பிணிகாட்டி ஆட்கொண்டு பிணிதீர்த்த ஆரூரர்" "ஆமயந்தீர்த்தடியேனை ஆளாக் கொண்டார்" "பொல்லாஎன் நோய்தீர்த்த புனிதன் தன்னை" என்பன போன்று அப்பர் பாடல்களில் ஆங்காங்குப் போதரும் அகச் சான்றுகள் புறக்கணிக்கப்பட்டுப் பொருளிழந்து பொலிவழியும்.

ஆய்வுரையாளர் கூற்றின்படி, அப்பர்க்குச் சூலைநோய் இருமுறை வந்ததெனின், அஃது அருளாற் போந்த நோய் எனப்படாதொழியும். மேலும், அப்பர் முதல் முறைச் சூலைநோயால் சைவராக மாறியிருந்த காலத்தில்தான் இரண்டாம் முறைச் சூலைநோய் வந்ததெனக் கொள்ளின், அப்பர் முதன்முறைச் சூலைநோயால் சைவராக மாறியமை பயனில் செயலாக மதிக்கப்படும். அப்பருக்குச் சூலைநோய் ஏற்பட்டமை இறையருட் செயல் என்பதனையும், அப்பர் சைவராக மாறியமை தமிழக வரலாற்றில் ஒரு மாபெரும் சிறப்பு நிகழ்ச்சி என்பதனையும், நேர்முகமாக இல்லையாயினும் மறைமுகமாக மறுத்துரைக்கும் குறிப்பு, ஆய்வுரையாளரின் கூற்றில் அமைந்துள்ளது. இவ்விரு பேருண்மைகளையும் புறக்கணித்துக் குறிப்பாகவேனும் மறுத்துரையாடுதல், முறையே இறையுணர்வும் வரலாற்றுணர்வும் இல்லாதவர்கட்கே ஏற்புடைத்தாகுமன்றி, மிகச் சிறந்த பேரறிஞராகிய ஆய்வுரையாளர் அவர்கட்கு ஏற்புடைத்தாகாது.

அப்பரின் சூலைநோய் ஒருபுறம் இருப்ப, அவர்தம் சமய மாற்றம் குறித்து வேறு சிலவும் கூறுதல், இக்கால நிலையில் ஈண்டைக்கு இன்றியமையாததாகும். சமயம் அல்லது மதம் எனப்படுவது தனித்ததொரு பொருளன்று. அஃது ஒரு நாட்டு மக்களின் வாழ்க்கை மொழி நாகரிகம் பண்பாடு அரசியல் முதலிய பலவற்றோடும் பிரிவற விரவிப் பிணைந்து நிற்பது. எனவே, அப்பர் பெருமான் தாம் புதிது புகுந்த வேற்றுச் சமயத்தி



னின்று மீட்டும் சிவநெறிக்குத் திரும்பியமை, தமிழ்நாடு தமிழ்மொழி தமிழினம் தமிழ்ப்பண்பாடு தமிழ்க்கொள்கை நாகரிகம் தமிழ்நாட்டரசியல் முதலியவற்றின் நலங்களுக்குத் தாம் புதிது புகுந்த சமயச் சூழ்நிலை மாறுபட்டதாதலை நன்கினிது கண்டுணர்ந்த அனுபவத்தின் விளைவே யாகும். எனவே, அப்பர் மீண்டும் சிவநெறி சேர்ந்தமை மனமாற்றமே யன்றி மதமாற்றம் அன்று எனத் தெளிதல் வேண்டும்.

"புந்திவட் டத்திடைப் புக்குநின் றானையும் பொய்யென்பேனோ ?"

"நானேதும் அறியாமே என்னுள் வந்து
நல்லனவும் தீயனவும் காட்டா நின்றாய்"

எனவரும் அப்பரின் திருமொழிகள் அவர்தம் மனச்சான்றுடைமையினை நன்கினிது விளக்கவல்ல சிறந்த சான்றுகளாகும் எனலாம். அன்றியும்,

"கூவ லாமை குரைகடல் ஆமையைக்
கூவ லோடொக் குமோகடல் என்றல்போல்"

"விரிவிலா அறிவி னார்கள் வேறொரு சமயம் செய்தே
எரிவினாற் சொன்னா ரேனும் எம்பிராற் கேற்ற தாகும்"

"ஆறொன் றியசம யங்களின் அவ்வவர்க் கப்பொருள்கள்
வேறொன் றிலாதன"

"ஆறு சமயத் தவரவரைத் தேற்றும் தகையன"

என்றெல்லாம் அருளிச் செய்துள்ள அப்பர் பெருமான், சமயங்களுள் உயர்வு தாழ்வு கருதும் தன்மையர் அல்லர் என்பது தெளியப்படும். எனவே, தமிழ்நாட்டுப் பற்று, தமிழ் மொழிப் பற்று, தமிழினப்பற்று முதலியனவே அப்பரின் மனமாற்றத்துக்குக் காரணம் என்பதனை இடைக்காலத்தில் தமிழ் நாட்டிற் கிளர்ந்தெழுந்த சமய இயக்க வரலாறுகளை ஆராய்ந்தறிந்த கல்வியறிவுடையார் அனைவரும் ஐயுறவின்றித் துணிவர்.

"பற்றிலா வாழ்க்கை வாழ்ந்து பாழுக்கே நீர்இ றைத்தேன்
உற்றலால் கயவர் தேறார் என்னும்கட் டுரையோ டொத்தேன்"

"தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்"

என்பன போன்றுவரும் அப்பரின் அருண்மொழிகள், அவர்தம் தமிழ்ப்பற்றினை விளக்கப் போதிய சான்றாகும். எனவே, அப்பர் சமணராக இருந்து சைவராக மாறினார் எனக் கூறுதலைவிடத் தமிழராக மாறினார் எனக் கூறுதலே பெரிதும் பொருந்துவதாகும். பிற்காலத்தில் தமிழ்நாட்டில் வாழ்ந்து விளங்கிய சமண பௌத்தச் சான்றோர்கள் பலரும், தாம் மதத்தால் வேறுபடினும் இனத்தால் தமிழர் எனத் தம்மை உணர்ந்துகொண்டு, தமிழ்த் தொண்டுகள் பலவும் ஆற்றுதற்கு வழிகோலிய பெருமை, இவ்வாற்றால் அப்பரடிகளுக்கே உரியதாகும். இற்றை நாளில் நாம் காந்தியடிகளை " The Father of the Nation " என எவ்வெச் சிறப்புகள் குறித்துப் பாராட்டுகின்றோமோ, அவ்வச் சிறப்புகள் குறித்தே திருஞானசம்பந்தப் பெருமான் திருநாவுக்கரசரை " அப்பர் " (தமிழ்நாட்டுத் தந்தை) எனப் பாராட்டிப் போற்றியருளினார் என்பது ஈண்டு அறிந்தின்புறற்பாலது. " தேசம் உய்ய வந்தவர் " " தமிழ்மொழித் தலைவர் " எனச் சேக்கிழார் அடிகள் திருநாவுக்கரசரைப் பாராட்டிக் குறிப்பிடும் புகழுரைகளும் கருதியுணாற்குரியன. இன்னோரன்ன ஒருசில கருத்துக்கள், ஈண்டு எடுத்துக்கொண்ட பொருட்கு நேரே இயைபுடையன அல்ல எனினும், சமய உணர்வு குன்றிச் சமய மறுதலை யுணர்வு தலையெடுத்து வரும் இன்னாள்றை நிலையில், எவர்க்கும் எத்தகைய திரிபுணர்ச்சிகளும் ஏற்படாமைப் பொருட்டு, 'ஒன்றின முடித்தல் தன்னின முடித்தல்' என்னும் உத்திபற்றி இயைத்துக் கூறப் பெற்றன எனக்கொள்க!

சூலைநோய் தலைக்கீ டாகத் தொல்சிவ நெறிக்கு மீண்டு
மூலையும் முடுக்கர் தோறும் முத்தமிழ் முழங்கும் வண்ணம்
சாலநற் புரட்சி செய்த தமிழ்நாட்டுத் தந்தை யாகும்
சீலமார் அப்பர் பெம்மான் சிறப்பெலாம் போற்றி யுய்வாம்!

—முருகவேள்

---

# மரம் முந்தியா? வித்து முந்தியா?

திரு. முரு. பழ. இரத்தினம் செட்டியார்

மரம் முந்தியா? வித்து முந்தியா? என்னும் கேள்வியைக் கற்றவர் முதல் கல்லாதார் ஈறாக எல்லாரும் கேட்பதுண்டு. மரம் இன்றி வித்தோ, வித்தின்றி மரமோ தோன்றாதாதலால், இக்கேள்விக்கு விடை இல்லை என்றே நாம் நினைக்கிறோம். ஆனால் சைவசித்தாந்தத்தில் இதற்கு விடை கூறியாக வேண்டிய ஒரு கட்டம் வருகிறது.

வினைக்கீடாக உயிர்களுக்கு உடல்கள் அமைகின்றன என்பது சைவசித்தாந்தக் கொள்கையாகும். இது பற்றிச் சிவஞான சித்தியாரில் அருணந்தி சிவம் பின்வருமாறு அருளிச் செய்திருக்கிறார்:—

" உடற்செயல் கன்மம் இந்த உடல்வந்த வாறே தென்னின்
விடப்படும் முன்னுடம்பின் வினைஇந்த உடல்விளைக்குந்
தொடர்ச்சியால் ஒன்றுக்கொன்று தொன்று தொட்டநாதி வித்தின்
இடத்தினின் மரம் மரத்தின் வித்தும்வந் தியையு மாபோல்."

இதன் பொருள்:—" உடலின் முயற்சியால் வினை உண்டாகும். அவ்வாறானால் இவ்வுடல் உண்டாவதற்குக் காரணம் யாதெனின் விடப்பட்ட முன் உடம்பின் வினையாம். அவ்வினையே இவ்வுடம்பை உண்டு பண்ணும். இவ்வாறு உடம்பால் வினையும் வினையால் உடம்பும் வருதல், வித்தின்கண் மரமும் மரத்தின்கண் வித்தும் வந்து பொருந்துமாறு போலாம். வினை, உடல் என்னும் இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று காரண காரியமாய்த் தொன்றுதொட்டு அநாதியாக வரும்."

இச் செய்யுளிலிருந்து உடல் அமைவதற்கு வினை காரணம் என்றும், வினைசெய்வதற்கு உடல் காரணம் என்றும் தெரியவருகிறது. அங்ஙனமானால் உடல் முந்தியா? வினை முந்தியா? என்னும் கேள்வி இயல்பாகவே எழுகிறது. இதற்கு விடை காணும் பொழுதுதான் மரம் முந்தியா? வித்து முந்தியா? என்னும் கேள்விக்கும் விடை பிறக்கிறது.

தொன்றுதொட்டு அநாதியாக வருவதால், உடல், வினை என்னும் இவ்விரண்டில் எது முந்தி என்று கூற இயலாது என்று இக் கேள்விக்கு விடை இறுத்தோமானால், அது யார்க்கும் திருப்தியை அளிக்காது. இதனை நன்கறிந்த பின்வந்த சந்தானாசாரியரான உமாபதி சிவம், இங்கு அருணந்திசிவம் கூறுவது புனருற்பவம் பற்றியாதலால், "அநாதி" என்பது "பிரவாக அநாதியைக்" குறிக்கும் எனக் கொண்டு, இக் கேள்விக்குச் சரியான விடையைச் சிக்கறுத்துப் "போற்றிப் பஃறொடை"யில் கூறியருளியிருக்கிறார். அதனை ஈண்டு ஆராய்வோம்.

அநாதி கேவலத்தில் ஆன்மாக்களுக்கு எந்தவகையான உடலும் இல்லை. காரண, சூக்கும, தூல சரீரங்கள் யாவும் பின்னே இறைவனால் அவைகளுக்கு மாயையினின்றும் ஆக்கி அளிக்கப்பட்டவையாகும். மேலும் அக் கேவல நிலையில் ஆன்மாக்களின் அறிவு, இச்சை, செயல்களை நிகழவொட்டாமல் ஆணவமலம் மறைத்து நிற்பதால், அவை எந்த வினையையும் ஆற்றுவதற்கு இல்லை. இதனால் இறைவன் அவைகளுக்கு முதன்முதல் படைத்தளிக்கும் உடல்கள் வினைகாரணமாக அமையமுடியாது. எனவே, ஆணவமலக் கட்டினின்றும் உயிர்களை விடுவிக்க வேண்டும் என்னும் கருணையால், இறைவன் தன் விருப்பத்திற்கே முதன்முதல் அவைகளுக்கு உடல்களைப் படைத்தளிக்கின்றான் என்பது தெளிவாகும்.

வினை காரணமாக அமையாமல் இறைவனின் கருணை காரணமாக அமைகின்ற உடல்கள், எல்லா ஆன்மாக்களுக்கும் ஒரே தன்மையனவாகவே இருத்தல் வேண்டும். அங்ஙனம் இல்லாமல் பல்வேறு வகையான உடல்கள் உயிர்களுக்கு அமைந்திருக்கக் காரணம் என்னை? இங்கு மிக நுண்ணியதான ஒரு கருத்தைச் சைவசித்தாந்தம் வெளியிடுகின்றது. இது சைவ சித்தாந்தத்திற்கே உரிய தனிக் கருத்தாகும்.

ஆன்மாக்கள் பல என்று கூறுகிறோம். எல்லா ஆன்மாக்களும் ஒரே மாதிரியான இயல்புகளை உடையன என்றால் அவை பலவாக இருத்தல் முடியாது. **இலக்கணத்துள் ஒருவாற்றானும் வேற்றுமையில் வழி இலக்கியம் பலவாதல் செல்லாது.** (சிவஞானபோதம் - பிரமாணவியல்-முதற் சூத்திரம்-



3-ம் அதிகரண உரையில் சிவஞான முனிவர் கூறுவது காண்க.) இதனால் ஒவ்வோர் ஆன்மாவுக்கும் அதற்கே உரித்தான தனி இயல்புகள் உண்டு என்பது பெறப்படும். இவ்வியல்புகளின் வேறுபாட்டால் ஆணவமல மறைப்பிலும் வேறுபாடு உண்டாகிறது. அநாதியில் ஆன்மாக்களுக்குள் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்னும் பேதம் வரக் காரணம் என்ன என்பதற்கு, ஆணவமலம் மட்டும் உடைமையால் விஞ்ஞானகலர் என்றும், ஆணவம் கன்மம் ஆகிய இரு மலம் உடைமையால் பிரளயாகலர் என்றும், ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலம் உடைமையால் சகலர் என்றும் பகுக்கப்பட்டனர் எனக் கூறுவது சரியான விடையாகாது. ஏனெனில் அநாதியில் எல்லா ஆன்மாக்களுமே ஆணவமல பந்தம் ஒன்றுமட்டும்தான் உடையனவாய் இருந்தன. எனவே ஆணவமல மறைப்பின் வேறுபாட்டாலேயே அவை மூன்றாகப் பகுக்கப்பட்டன என்பதை உணர்தல் வேண்டும். மல சத்தி புலவாதலால் மறைப்பும் பலவேறு வகைப்படும் என்பதும் விஷயத்தைப் போதிய அளவு விளக்கியதாகாது. சடமாகிய மலசத்திக்கு இன்ன ஆன்மாவை இன்ன அளவுதான் மறைக்க வேண்டும் என்னும் உணர்வு இருக்க முடியாது. ஆன்மாக்களுக்குரிய தனிஇயல்பு வேறுபாட்டாலேயே(Individual difference) மல மறைப்பிலும் வேறுபாடுகள் ஏற்பட்டன வென்றும், அங்ஙனம் உள்ள வேறுபாட்டிற் கேற்பப் பெரும்பிரிவாய் ஆன்மாக்கள் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் எனப் பகுக்கப்பட்டனர் என்றும், இங்ஙனம் மூவகையாகப் பகுக்கப்பட்டன ரெனினும், ஒவ்வொரு பகுப்பினுள்ளும் ஆன்மாக்களுக்குள்ள தனி இயல்புகள் பலவாதலால், மலமறைப்பு வேறுபாடும் பலவகையாகும் என்றும் நாம் தெளிந்து கொள்ளல் வேண்டும். இந் நுட்பங்களை எல்லாம் சிவஞானபோதப் பேருரையில் சிவஞான முனிவர் நன்கு விளக்கியுள்ளார். இனி எடுத்துக் கொண்ட விஷயத்திற்கு வருவோம்.

அநாதி கேவலத்தில் ஆணவமலத்தால் மறைப்புண்டு, அறிவு, இச்சை, செயல்கள் விளக்கம் இன்றிக் கிடந்த ஆன்மாக்களுக்கு மாயையினின்றும் இறைவன் **முதற்கண் நுண்ணுடல்களைப் படைத்தருளுகின்றான். அவன் கருணையைக்**

காரணமாகப் படைத்தளிப்பதால் எல்லா ஆன்மாக்களுக்கும் ஒரே தன்மையனவான நுண்ணுடல்களையே ஆக்கி அளிக்கின்றான். ஓர் அறிவுமுதல் ஆறறிவு ஈறாக உள்ள எல்லா உயிர்கட்கும் நுண்ணுடல் ஒன்று போன்றே உள்ளது. நுண்ணுடல் என்பது சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் தன்மாத்திரை ஐந்தும் மனம், அகங்காரம், புத்தி என்னும் அந்தக்கரணங்கள் மூன்றும் ஆக எட்டுறுப்புக்களால் ஆயதாகும். இறைவன் எல்லா ஆன்மாக்களுக்கும் ஒரே மாதிரியான நுண்ணுடல்களை ஆக்கி அளித்தவுடன் அவற்றின் அறிவு, இச்சை, செயல்கள் சிறிது விளக்கம் பெறுகின்றன. நாம் முன்னர் எடுத்துக்காட்டியவாறு ஆன்மாக்களுக்குரிய தனி இயல்பு வேறுபாட்டாலும், அவ்வேறுபாட்டால் ஏற்பட்ட மலமறைப்பு வேறுபாட்டாலும் நுண்ணுடற்கண் உள்ள மனத்தில் அவை ஒவ்வொன்றுக்கும் வெவ்வேறு விதமான விருப்பு, வெறுப்புக்கள் தோன்றுகின்றன. தெளிவுபெறாத இவ்விருப்பு, வெறுப்புக்களைக் குறிப்பால் உணர்ந்து, இவைகளையே துவக்க வினைகளாகக் கொண்டு, இறைவன் உயிர்களின் மனநிலைக்கு ஏற்றவாறு தூலவுடல்களைப் படைத்தளிக்கின்றான். இதனாலேயே தூல உடல்கள் பலவாறாக அமையவேண்டுவதாயிற்றென்க. இங்ஙனம் அமைந்த தூல உடல்களால் உயிர்கள் வினைகளை ஆற்ற, அவ்வினைகளால் பின்னர் உடம்புகளும், அவ்வுடம்புகளால் வினைகளும் மாறி மாறித் தொடர்ச்சியாய் வந்துகொண்டிருக்கும். முக்திபெற்றாலன்றி முதற்கண் அமைந்த நுண்ணுடல் அழிவுறாமல் படைப்புக்காலந் தொடங்கிச் சங்கார காலமளவும் (பேரொடுக்கக் காலம் வரை) நிலைபெற்றிருக்கும் என்பதும் ஈண்டு அறியத்தக்கதாகும். இது காறும் கூறியவாற்றால் உடல் முந்தியா? வினை முந்தியா? என்னும் கேள்விக்கு உடலே முந்தி என்னும் விடை பெறப்படுதலைக் காணலாம். இவ்விடை அமைந்த உமாபதி சிவாசாரியாரின் திருமொழி வருமாறு :—

" கண்ணை மறைத்த கடியதொழில் ஆணவத்தால்
எண்ணும் செயல்மாண்ட எவ்வுயிர்க்கும்—உள்நாடிக்
கட்புலனுற் காணார்தங் கைக்கொடுத்த கோலேபோல்
பொற்புடைய மாயைப் புணர்ப்பின்கண்—முற்பால்



தனுகரண மும்புவன முந்தந் தவற்றான்
மனமுதலால் வந்த விகாரத்தால்—வினை இரண்டும்
காட்டி யதனாற் பிறப்பாக்கிக் கைக்கொண்டு
மீட்டறிவு காட்டும் வினைபோற்றி."

—போற்றிப்பஃறொடை - வரி - 10-17

இங்ஙனம் " முற்பால் தனுகரணமும் தந்து " என உமாபதிசிவம் கூறியிருப்பதைச் சிவஞான முனிவர் சிவஞானபோதப் பேருரையில் எடுத்துக்காட்டும் பொழுது மணிவாசகப்பெருமான் திருவாய் மலர்ந்தருளிய திருவாக்கு ஒன்றிற்கு அரியதோர் உரையைக் குறிப்பால் உணர்த்துகிறார். இவ்வுரையே மரம் முந்தியா? வித்து முந்தியா? என்னும் கேள்விக்கு விடையாக அமைகிறது. இனி அதனை ஆராய்வோம்.

திருவாசகத்தில் மணிவாசகப் பெருமான்,

" விச்சதின்றியே விளைவு செய்குவாய்
விண்ணும் மண்ணக முழுதும் யாவையும்
வைச்சு வாங்குவாய் " திருச்சதகம் - செய்யுள் - 96

என அருளியிருக்கிறார். " விச்சதின்றியே விளைவு செய்குவாய் " என்பதற்கு " வித்தே இல்லாமல் விளைவிப்பாய் அதாவது மூலம் இல்லாமலே ஒரு பொருளை உண்டாக்குவாய் " எனப் பொருள் கூறி, " எல்லாம் செய்யவல்லவனாதலால் இஃது இறைவனின் அகடிதகடனா சாமார்த்தியத்தை உணர்த்திற்று " எனச் சிலர் சமாதானம் கூறுவர். இவ்வுரை சற்காரியவாதம் கூறும் சைவசித்தாந்தத்திற்குப் பொருந்தாது. " உள்ளதே தோன்றும் " என்பது சற்காரிய வாதம். இல்லாத ஒன்று தோன்றாது. ஆகவே மூலம் இல்லாமலே ஒரு பொருளை இறைவன் அகடிதகடனா சாமார்த்தியத்தால் உண்டாக்குவான் எனப்பொருள் கூறுதல் சைவசித்தாந்தக் கொள்கைக்கு ஏற்றதன்று. அங்ஙனமானால் "விச்சதின்றியே விளைவு செய்குவாய்" என்னும் மணிவாசகப்பெருமான் திருவாக்குக்கு என்ன பொருள்? " இது முதலுற்பவம் ஆமாறுணர்த்திற்று " எனச் சிவஞான முனிவர் நுண்ணூர்வால் உரை காண்கின்றார்.

முதலுற்பவத்தில் நாம் முன் கூறியவாறு இறைவன் நுண்ணுடற்கண் தோன்றும் உயிர்களின் மனோநிலைக்கு ஏற்பத் தூலவுடல்களை நல்குகின்றான். அங்ஙனம் நல்கப்பட்ட தூல உடல்கள் பல என்றும் முன்னர்க் குறிப்பிட்டோம். அவற்றுள் ஒன்றே மரம் என்னும் தூலவுடல் என்பதைக் கூறவேண்டுவதில்லை. எனவே மரமாகிய தூலவுடல் முதலுற்பவத்தில் வித்தின்றியே தோன்றுகிறது. அதன்பின் அதினின்றும் வித்தும், அவ்வித்தினின்றும் மரமும் மாறிமாறித் தொடர்ச்சியாய் வரும். இதனால் மரமும், வித்துமாகிய காரண, காரியத் தொடர்ச்சி முதலுற்பவத்திற்குப் பின்னரே என்பது தெளிவாகும்.

" விச்சதின்றியே விளைவு செய்குவாய் " என்பதற்கு, " இல்லாததை உண்டாக்குவாய் " என்று உரை செய்யாமல், என்றும் இருக்கின்ற பொருளாகிய மாயையினின்றும் படைக்கப்படும் சட உடல்களான மரம், வித்து என்னும் இவ்விரண்டில் முதலுற்பவத்தில் வித்தில்லாமல் மரமே முன்னர் இறைவனால் படைக்கப்படுவதால், " விச்சதின்றியே விளைவு செய்குவாய் " என மணிவாசகப் பெருமான் கூறியருளுகின்றார் எனப் பொருள் கொள்ளல் வேண்டும். இங்ஙனம் இயல்பாகக் கொள்ளுகின்ற தூலப்பொருளோடு, நாம் முன்னர் எடுத்துக் காட்டியவாறு முதலுற்பவத்தில் வினை இன்றியே, ஆன்மாக்களின் ஈடேற்றம் கருதி, இறைவன் உடல்களைப் படைத்தளிக்கின்ற பெருங் கருணைத் திறம் நோக்கி இவ்வாறு கூறுகின்றாரென்னும் நுண்பொருளையும் கொள்ளுதல் வேண்டும். சிவஞான முனிவர் குறிப்பால் கூறும் இவ்வுரையை நாம் விரித்துப் பொருள்கொள்ளும்போது, " மரம் முந்தியா ? வித்து முந்தியா ? என்னும் கேள்விக்கு, " மரமே முந்தி " என்னும் விடை மணிவாசகப் பெருமான் திருவாக்காக அமைவது அறிந்து இன்புறத்தக்கதாகும்.

இக்கட்டுரையின் துவக்கத்தில் காட்டிய சிவஞான சித்தியார், " உடற்செயல் கன்மம் " என்னும் திருவிருத்தத்திற்குச் சைவ சித்தாந்தப் பேரறிஞர் திரு. பொ. முத்தைய பிள்ளை அவர்கள் உரை எழுதும்போது பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள் :



" வித்தும், மரமும் ஒன்றுக்கொன்று காரண, காரியமாக இருப்பினும் இறைவன் முதலாவதாக இரண்டிலொன்றைத்தான் உற்பத்தி செய்திருக்கவேண்டும். அது மரமாகவே இருக்கவேண்டும். இக்கருத்துப்பற்றியே, "விச்சதின்றியே, விளைவு செய்குவாய் " என மணிவாசகப் பெருமான் அருளிச் செய்தனர். (சிவஞான சித்தியார் சுபக்கம் - முத்தைய பிள்ளை அவர்கள் உரை - பக்கம்-140).

இங்ஙனம் எளியநடையில், " மரம் முந்தியா ? வித்து முந்தியா ?" என்னும் கேள்விக்கு " மரமே முந்தி " என்னும் சைவ சித்தாந்த விடையை எடுத்துக் கூறிய திரு. முத்தைய பிள்ளை அவர்களுக்குச் சைவ உலகம் பெரிதும் கடமைப்பட்டதாகும்.

---

சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாஜம்

# தமிழுக்கும் சமயத்திற்கும் ஆற்றிய தொண்டு

திரு. அருள். தியாகராசர் (தமிழ் நிகழ்ச்சியாளர், இலங்கை வானொலி) அவர்கள், இலங்கை வானொலியில் ஒலிபரப்பியது.

சைவசமயம் மிகத் தொன்மை வாய்ந்தது. இதை மேனாட்டுப் பேரறிஞர்களும் ஆராய்ச்சியாளர்களும் இன்று ஒப்புக் கொண்டுள்ளனர். மொஹஞ்சதாரோ, ஹரப்பா முதலிய இடங்ககளில் அகழ்ந்தெடுக்கப்பட்ட புதை பொருள்களுள், சிவலிங்கம், அம்பிகை உருவம் முதலியன காணப்படுகின்றன. இதிலிருந்து சிவ வழிபாடு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக இந்தியாவில் நிலவி வந்திருக்கிறதென்பது தேற்றம். வேதங்களும், ஆகமங்களும், சங்க இலக்கியங்களும், சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய நூல்களும், தேவாரம் திருவாசகம் முதலிய பன்னிரு திருமுறைகளும், சிவஞானசித்தியார், சிவஞான போதமாகிய சித்தாந்த சாத்திரங்களும், புராண இதிகாசங்களும் சிவபெருமானின் பரத்துவத்தையும், பெருமையையும் எடுத்துக் கூறுகின்றன. இமயமலையிலுள்ள கைலாச பர்வதமே இன்றும் சிவனுருடைய இருப்பிடமாக இருந்து

வருகின்றது. இந்தியாவின் பெரிய புண்ணிய நதியாகிய கங்கையும், இமயமலையில்தான் உற்பத்தியாகி வருகிறது.

இவ்வாறு பரத கண்டமானது சைவ சமயத்திற்கு இருப்பிடமாகப் பல்லாயிரம் ஆண்டுகளாக இருந்து வந்திருக்கின்றது. ஒரு காலத்தில் பாரத நாட்டின் வடமேற்கெல்லையிலுள்ள காஷ்மீர் தேசத்தில் சைவம் சிறப்புற்றோங்கியது. தென்னாட்டில்தான் இச்சமயம் என்றும் பெருமையுடன் திகழ்கின்றது. இதனாலன்றோ மாணிக்கவாசக சுவாமிகளும் "தென்னாடுடைய சிவனே போற்றி! எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!" என்று சிவபெருமானை வாழ்த்தியுள்ளார்.

இவ்வாறு சைவ சமயத்தை, சைவ சமய நாயன்மார்களும், திருவிசைப்பா ஆசிரியர்களும், நக்கீரர் கபிலதேவர் போன்ற புலவர்களும், சேக்கிழார் பெருமானும், சேர, சோழ, பாண்டிய மன்னர்களும் போற்றி வளர்த்துவந்தார்கள். இவர்களுக்குப் பின்பு திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள், மயிலம், திருப்பாதிரிப்புலியூர் என்ற இடங்களிலுள்ள சைவாதீனங்கள் சைவ சமயத்திற்கும், தமிழ் மொழிக்கும் ஊக்கமும், ஆக்கமும் அளித்துவந்தன. பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மேனாட்டவர்கள் இந்தியாவைக் கைப்பற்றி ஆதிக்கஞ் செலுத்தத் தொடங்கினர். அத்துடன் அவர்கள் தமது சமயத்தையும் மக்களிடையே பரப்பத் தொடங்கினர். மக்கள் செய்வதறியாது திகைத்தனர். இராஜாராம்மோகன்ராய் (Rajaram Mohan Roy) தயானந்த சரஸ்வதி (Dayananda Saraswathi) போன்ற பெரியார்கள் வட நாட்டில் முறையே பிரம சமாஜத்தையும் (Brahma Samaj) ஆரியசமாஜத்தையும் (Arya Samaj) தோற்றுவித்து, மேனாட்டவரின் ஆதிக்கத்தாலும் சமயப் பிரசாரத்தாலும், மயங்கிய மக்களின் தளர்ச்சியை ஒருவாறு போக்கினர். இவர்களைத் தொடர்ந்து ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர், வடக்கேயுள்ள இந்து மக்களுக்குத் தமது சமயக் கொள்கைகளில் நம்பிக்கை பிறக்குமாறு தமது வாழ்க்கையினாலும் உபதேசத்தினாலும் வாழ்ந்து காட்டினர்.



தெற்கே எங்கள் ஆறுமுக நாவலர் பெருமான், ஈழத்திற் பிறந்தவராயினும் தென்னாட்டிற்குச் சென்று சைவசித்தாந்தப் பேரொளியைத் தாம் சென்றவிடமெல்லாம் பரப்பினார். சைவ சமயத்தைப் பரப்புவதற்கு இவர் மேனாட்டவர்களின் முறையையும் கையாண்டார்.

நாவலர் பெருமானின் உபதேசத்தினாலும் முயற்சியாலும் தென்னாட்டிலும், ஈழ நாட்டிலும் பல சைவப் பேரறிஞர்கள் தோன்றினர். மடாதிபதிகளுக்கும் விழிப்புவந்தது. இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் சைவ சமயத்தைப் பலவாற்றானும் ஓம்புதல் வேண்டுமென்ற எண்ணம் திருப்பாதிரிப்புலியூரிலுள்ள வீரசைவ மடத்தைச் சேர்ந்த ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகளிடம் உதித்தது. காலஞ்சென்ற பெரியார்களாகிய உயர்திரு. மறைமலையடிகளும், ஜே. எம். நல்லசாமிப் பிள்ளையும், இதில் பெரும் சிரத்தை காட்டினார்கள்.

இதன் பயனாகச் சைவ சித்தாந்த மகாசமாஜம் திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீமத் ஞானியார் மடாலயத்தில் ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் முன்னிலையில் விசுவாவசு ஆண்டு ஆனிமாதம் 24-ந் தேதி (7-7-1905) தொடங்கப்பெற்றது. சில காலத்தின் பின்னர் சபைப் பதிவுச் சட்டப்படி இச் சமாஜம் பதிவு செய்யப்பட்டது. இச் சமாஜத்தின் முதலாண்டு விழாவானது சிதம்பரத்தில் 1905 டிசம்பர் மாதம் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவிற்குத் தலைமை தாங்கியவர் ஈழநாட்டுச் சிங்கமாகிய சர். பொன்னம்பலம் இராமநாதனேயாவர்.

சென்ற 54 ஆண்டுகளாக இச் சமாஜம் செய்துவரும் அரும் பணியைத் தமிழகம் நன்கறியும். ஆயினும் ஒரு சிலவற்றை இங்குக் குறிப்பிட விரும்புகின்றேன். ஆண்டு விழாக்கள் வருடந்தோறும் பற்பல இடங்களில் நடத்துதல், சித்தாந்தம் என்ற பத்திரிகையைப் பிரசுரித்து அதன் அங்கத்தவர்களுக்கு வழங்குதல், மாதக் கூட்டங்களை வெவ்வேறிடங்களிற்கூட்டிக் கிராம மக்களிடையே சைவ உணர்ச்சியை வளர்த்தல், சைவப் புலவர், இளஞ்சைவப் புலவர் தேர்வுகளை நடத்தி அதில் தேர்ச்சி அடைந்தவர்களுக்குச் சாட்சிப் பத்திரம் வழங்கல், இன்னும் பல.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில், சில கழகங்கள் ஆதாயத்தைக் குறிக்கோளாகக் கொண்டு தேவார திருவாசகம் முதலிய பன்னிரு திருமுறைகளையும், சிவஞானசித்தியார், சிவஞானபாடியம், ஆகிய சித்தாந்த நூல்களையும் அச்சிட்டு மிக உயர்ந்த விலையில் விற்பனை செய்துவந்தன. விலையின் உயர்வால் பொதுமக்கள் இவற்றை வாங்கிப் படிக்கக்கூடிய நிலையில் இல்லாதிருந்தனர். இப்படி என்றால் சைவ சமயம் எங்ஙனம் வளரும்? இந்தக் குறைபாட்டைச் சைவசித்தாந்த சமாஜம் நன்றாக உணர்ந்தது. இதனை நீக்குதற்கு ஏற்ற முயற்சிகளைச் செய்தது. முதன் முதலாக ஏழாந் திருமுறையாகிய சுந்தரர் தேவாரத்தை அடக்கவிலைச் சுத்தப்பதிப்பு வெளியீடாக அச்சிட்டுச் சுக்கில வருஷத்தில் சுவாமிகளின் திருநட்சத்திரமாகிய ஆடிச் சோதியில் (11-8-1929-ல்) திருமயிலாப்பூரில் வெளியிட்டது. இதனைத் தொடர்ந்து திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரத்தை அடுத்த ஆண்டில் சித்திரைச் சதய நட்சத்திரத்தில் வெளியிட்டது. 1931-ம் ஆண்டில் வைகாசி மூலத்தில் திருஞானசம்பந்தர் தேவாரம் முழுவதையும் வெளியிட்டது. இம்முறையைப்பின்பற்றி மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த திருவாசகம் திருக்கோவையார் என்ற எட்டாந் திருமுறையையும், ஒன்பதின்மர் அருளிச்செய்த திருவிசைப்பா திருப்பல்லாண்டு என்ற ஒன்பதாம் திருமுறையையும், ஆங்கீரச வருஷம் ஆனிமாதம் மகத் திருநாளில், திருப்பெருந்துறை யென்னும் ஸ்தலத்தில் மணிவாசகர் பாதகாணிக்கையாகச் சமர்ப்பித்தது. பின்பு திருமந்திரம் என்ற பத்தாந் திருமுறையையும் திருமுகப் பாசுரம் முதலிய பிரபந்தங்களைக் கொண்ட பதினோராந் திருமுறையையும், சேக்கிழார் அருளிச்செய்த திருத்தொண்டர் புராணமென்னும் பெரிய புராணத்தையும் வெளியிட்டது. இந்நூல்கள் எல்லாம் கண்கவர் வனப்புடன் சிறந்த முறையில் வெளிவந்தன. சைவ உலகம் இவற்றை அன்புடன் வரவேற்றது. இந்நூல்களின் இரண்டாம் பதிப்புகளும் விரைவில் வெளிவந்தன. சைவ சித்தாந்த சமாசம் இதனுடன் அமையவில்லை சிவபெருமானைத் “தோத்திரமும் சாத்திரமு மானார் தாமே”



என்று ஒரு அடியார் பாடியுள்ளார். பின்பு சித்தாந்த முதல் நூலாகிய சிவஞானபோதச் சிற்றுரையை முதலில் வெளியிட்டது. இதனைத் தொடர்ந்து சித்தாந்த சாத்திரம் பதினான்கையும் உரையுடன் பிரசுரித்தது. சைவ சித்தாந்த மகா சமாசமானது பன்னிரு திருமுறைகளையும், பதினான்கு சைவ சித்தாந்த சாத்திரங்களையும் இந்தியாவிலும், இலங்கையிலும், மலாயாவிலுமுள்ள பல்லாயிரக் கணக்கான சைவ இல்லங்களில் நுழைத்தது. சைவ சமயத்தை அறியாதாரை அறிய வைத்தது. பிரிட்டிஷ் வேதாகம சபையென்னும் (British and Foreign Bible Soceity) கிறிஸ்தவ நூல்களை அச்சிட்டு மிக எளிய விலைக்கு வழங்கிவருவதை நீங்கள் அறிவீர்கள். அதுபோலவே சைவ சித்தாந்த மகா சமாஜமும், சைவ நூல்களை அச்சிட்டு உபகரித்து வருகின்றது. இதற்குச் சைவ மக்கள் என்ன கைம்மாறு செய்யவல்லர்?

இவ்வாறு இந்நூல்களை யெல்லாம் சுத்த அடக்கவிலைப் பதிப்பாக வெளியிட்டு உபகரிப்பதற்கு மூலகாரணமா யிருந்தவர் யாரென்று அறிய நீங்கள் ஆவல்கொள்வது இயல்பல்லவா? அவர்தான் ஓராண்டுக்கு முன்பு (14-3-58)ல் சைவ உலகும் தமிழுலகும் துயர்க்கடலில் மூழ்க எம்மை விட்டுப் பிரிந்த ம. பாலசுப்பிரமணிய முதலியார் பி.ஏ.,பி.எல். ஆவர். இவர் சைவப் பரம்பரையிலுதித்தவர். ஆங்கிலத்தில் பி.ஏ., பி.எல். பரீட்சையில் தேறி, பிரபல வக்கீலாயிருந்த சர். அல்லாடி கிருஷ்ணசாமி ஐயருடன் சேர்ந்து வக்கீல் தொழிலைச் சிலகாலம் பார்த்தவர். வக்கீல் தொழிலைப் பார்த்த காலத்திலும் இவருடைய மனமானது சைவப் பணியிலேயே ஈடுபட்டது. சைவ சித்தாந்த மகா சமாசம் தொடங்கி ஐம்பத்துநான்கு ஆண்டுகள் ஆகின்றன. திரு. பாலசுப்பிரமணிய முதலியார் முப்பத்தாறு ஆண்டுகள் வரையில் சமாசத்துடன் தொடர்பு பூண்டவர். இருபது ஆண்டுகள் வரையில் இதன் செயலாளராகப் பணியாற்றியுள்ளார். ஆங்கிலம், செந்தமிழ், சமஸ்கிருதம் முதலிய மும்மொழிகளிலும் புலமை மிக்கவர். விரிவுரையாற்றுவதிலும், ஆராய்ச்சிக் கட்டுரை எழுதுவதிலும் வல்லுநர். “சித்தாந்தம்”

என்னும் பத்திரிகையின் ஆசிரியராக இவர் பத்தாண்டுகள் கடமை செய்துள்ளார். யான் அவரைச் சென்ற பதினெட்டு ஆண்டுகளாக அறிவேன். சைவ சித்தாந்த சமாசத்தைத் தன்னுயிரினும் பார்க்கப் போற்றிவளர்த்த ஆண்டகை. சமாஜமே அன்னாரின் வாழ்வும் வைப்புமாகும். 1948-ம் ஆண்டில் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் நாற்பத்து மூன்றாவது ஆண்டு விழா யாழ்ப்பாணத்தில் சைவ பரிபாலன சபையின் ஆதரவில் நடந்தது. அதற்குத் தலைமைதாங்கிய பெருமை பாலசுப்பிரமணிய முதலியாரையே சாரும். முன்னாள் உதவிக் கல்வி மந்திரியும் கொழும்பு விவேகானந்த சபையின் தலைவருமாகிய திரு. க. கனகரத்தினம் அவர்களுடைய பெருமுயற்சியில் சைவ சித்தாந்த சமாஜத்தின் நாற்பத்து நான்காவது ஆண்டு விழா, 1950-ம் ஆண்டில் ஜனவரி மாதத்தில் கொழும்பு மாநகரில் நடந்தது. இதற்கும் பாலசுப்பிரமணிய முதலியாரவர்களே தலைமை வகிக்க இருந்தார். அவருக்கு ஏற்பட்ட உடல்நலக் குறைவினால் அவர் வரமுடியாமற் போயிற்று. இவ்விழாவிற்குப் பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சிசுந்தரம் அவர்கள் தலைமை தாங்கினார்கள். திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் மிக விரிந்த மனப்பான்மையுள்ளவர்கள். அவருடைய பேரூக்கத்தினால், சங்க இலக்கியமூலம், சீவகசிந்தாமணி மூலம், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் முதலிய பெருமைவாய்ந்த நூல்களையெல்லாம் சமாஜமானது மிக்க எளிய விலையில் அச்சிட்டுத் தமிழ் மக்களுக்கெல்லாம் உதவியது. இதனாற் சங்க நூல்களைக் கற்று ஆராயும் தமிழ் மக்கள் தொகை பெருகியது. பழுத்த தமிழ்ப் புலமைவாய்ந்த இவர் இன்னும் சில காலம் வாழ்ந்திருந்தால், டாக்டர் உ. வே. சாமிநாதையரைப்போல இன்னும் சிறந்தமலர்மாலைகளைத் தமிழன்னைக்குச்சூட்டி மகிழ்ந்து சமாஜத்தின் நிலையையும் உயர்த்தியிருப்பார். இவர் தமது உடல், பொருள், ஆவி மூன்றையும் சமாஜத்தின் ஆக்கத்திற்கு அர்ப்பணித்தார். இவர் தொடங்கிய முயற்சிகளை இவரின் மருகர் மணலி இராமகிருஷ்ண முதலியார், B. A. அவர்கள் முற்றுவிப்பாரென்றே நம்புகின்றோம்.



இனி ஈழநாட்டிற்கும் சைவ சித்தாந்த மகா சமாஜத்திற்குமுள்ள நெருங்கிய தொடர்பைக் கவனிப்பாம். சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் முதலாண்டு விழாவிற்குச் சர். பொன்னம்பலம் இராமநாதன் தலைமை தாங்கினாரென்று முன்பு கூறினோம். 1922-ம் ஆண்டில் சென்னை மாநகரில் நடந்த ஆண்டு விழாவிற்கு மீண்டும் சர். பொன்னம்பலம் இராமநாதரே தலைமை தாங்கிய செய்தி மகிழ்ச்சிக்குரியதாகும். கொக்குவில் சபாரத்தின முதலியார் 1915-ம் ஆண்டில் சென்னையில் நடந்த ஆண்டு விழாவிற்கும், சர். அம்பலவாணர் கனகசபை 1916-ம் ஆண்டில் திருச்சியில் நடந்த விழாவிற்கும், வட்டுக்கோட்டை அம்பலவாண நாவல பராசக்தி சுவாமிகள் 1918-ம் ஆண்டில் நடந்த விழாவிற்கும், முறையே தலைமை தாங்கினார்கள். 1936-ம் ஆண்டில் திருவண்ணாமலையில் நடந்த விழாவிற்கு ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த அருட்டிரு விபுலானந்த அடிகள் தலைமை வகித்து விழாவை இனிது முடித்தார்கள். 1953-ம் ஆண்டில் வட்டுக்கோட்டை வே. நாகலிங்கம் ஜே. பி. அவர்கள் தலைமை வகித்தார்கள். விருதுநகரில் 1954-ம் ஆண்டில் சிறப்பாக நடந்தேறிய சமாஜத்தின் நாற்பத்து ஒன்பதாம் ஆண்டுவிழாவிற்கு இலங்கை முன்னாள் அமைச்சர், சர் கந்தையா வைத்தியநாதன் அவர்கள் தலைமைதாங்கிச் சிறப்பாக நிறைவேற்றி வைத்தார்கள். சமாஜத்தின் பொன்விழாவானது 1955-ம் ஆண்டின் சிதம்பரத்தில் நடந்தது. அதற்கு முன்னாள் அமைச்சர் சு. நடேசபிள்ளை அவர்கள் தலைமை வகித்தார்கள். இச்சமாஜத்தின் வெளியூர் ஆலோசனைச் சபை அங்கத்தினராக ஈழநாட்டில் பலர் இருக்கின்றார்கள்.

இந்தியாவிலும் ஈழநாட்டிலும் மலேயாவிலுமுள்ள சைவத் தமிழன்பர்கள் ஆயிரக்கணக்கில் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் சாதாரண அங்கத்தவர்களாகவோ, ஆயுள் அங்கத்தினராகவோ சேர்ந்து அதனை வளம்படுத்தினால் சமாஜமானது மேன்மேலும் வளர்ந்து விருத்தியடைந்து அருங்கனியுதவிப் பல நூற்றாண்டுகளுக்கு வாழும் என்பதில் ஐயமில்லை.

# சைவத் தேர்வு வினாக்கள் 1959

## சைவப்புலவர் - இலக்கியம்

மூன்று மணி நேரம்] [மதிப்பெண் நூறு

**எவையேனும் பத்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

1. சீர்காழியைப் பற்றிச் சேக்கிழார் செய்துள்ள வருணனையைத் தொகுத் தெழுதுக (அல்லது) சீர்காழிக் குரிய பன்னிரண்டு பெயர்களைக் குறிப்பிட்டு விளக்கம் தருக.

2. "தோடுடைய செவியன்" எனத் தொடங்கும் திருப்பதிகம் குறித்துச் சேக்கிழார் செய்துள்ள விளக்கங் களைக் குறிப்பிடுக.

3. திருஞான சம்பந்தரின் உபநயன நிகழ்ச்சிச் சிறப்பை விவரிக்க. (அல்லது) அவர் காலத்தில் உடன் இருந்த நாயன்மார்களைப் பற்றிக் குறிப்பெழுதுக.

4. திருஞான சம்பந்தர் வரலாற்றிற் சில நிகழ்ச்சி களைக் குறிப்பிட்டு, அவற்றிற்கு அவர்தம் பாடல்களில் அகச்சான்றுகள் காட்டுக.

5. "நடுங்க நாட்டம்" என்பது யாது? அத் துறை யமைந்த செய்யுளை யேனும், அதன் பொருள் நலத்தை யேனும் வரைக.

6. பின்வரும் பகுதிகளுக்குரிய சிறப்புரைகளைத் தருக.

அ. "தவளத்த நீறணியும் தடந்தோள் அண்ணல் தன்
அவளத்தனும் மகனும் தில்லையான்" [ஒருபா

ஆ. "தெவ்வரை மெய்யெரி காய்சிலை யாண்டென்னை ஆண்டு
செவ்வரை மேனியன்" [கோண்ட

7. திருக்கோவையாரின்கண் நுமக்கு இனியவாகப் படும் இரண்டு செய்யுட்களை எழுதி, அவற்றிற்குரிய துறைகளையும் குறிப்பிடுக.

8. பொருளும் துறையும் புலப்படுத்துக :—

சங்கந் தருமுத்தி யாம்பெற வான்கழி தான்கெழுமிப்
பொங்கும்புனற்கங்கை தாங்கிப்பொலிகலிப் பாறுலவு



துங்க மலிதலை யேந்தலின் ஏந்திழை தொல்லைப்பன்மா
வங்க மலிகலி நீர்தில்லை வானவன் நேர்வருமே.

9. திருவாசகம் திருச்சதகத்தின்கண் போதரும் இரு சிறந்த பாடல்களை எழுதி, அவற்றில் ஏதேனும் ஒரு பாடற்கு நயவுரை தருக.

10. பின்வரும் தொடர்களுக்குப் பொருள் விளக்குக:—

அ. "யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக் கென்கட
[வேன்"

ஆ. "பட்டி மண்டபம் ஏற்றினை ஏற்றினை
எட்டி னொடிரண் டும்அறி யேனையே"

இ. "விச்சுக் கேடு பொய்க்காகா தென்றிங் கெனைவைத்
[தாய்"

ஈ. "ஊரா மிலைக்கக் குருட்டா மிலைத்திங்கு"

உ. "தாம் வளர்த்ததோர் நச்சுமா மரமாயினும் கொலார்"

11. பொருள் எழுதுக :—

புணர்ப்ப தொக்க எந்தை என்னை யாண்டு பூணநோக்கினாய்
புணர்ப்ப தன்றி தென்ற போது நின்னொ டென்னொ டென்னிதாம்
புணர்ப்ப தாக அன்றி தாக அன்பு நின்க ழற்கணே
புணர்ப்ப தாக அங்க ணாள புங்க மான போகமே.

12. 'சைவ சமயமாட்சி' (அல்லது) 'சமரச சன் மார்க்கம்' என்பது குறித்துச் சிறு கட்டுரை வரைக.

13. "திருவுருவ வழிபாடு" இன்றியமையாதது என் பதை நிறுவுக.

14. 'திருக்குறளைச் சிறந்த பிரமாண நூலாகச் சித்தாந்த சைவரே போற்றி வருகின்றனர்' என்பதற்குச் சான்று தருக.

15. 'திருவள்ளுவர் தமது நூலுள் வீட்டு நெறியினையும் விளக்கி யுள்ளார்' என்பதனைத் தெளிவுறுத்துக.

## சைவப்புலவர் - சாத்திரம்

மூன்று மணி நேரம்] [மதிப்பெண் நூறு

**எவையேனும் பத்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

1. சிவஞானபோதச் சிறப்புப் பாயிரத்தினை எழுதி, அதன்கண் ஆக்கியோன் பெயர் முதலிய எட்டும் அமைந்துள்ளமையினைப் புலப்படுத்துக.

2. மூவகை வாழ்த்துக்கள் யாவை? அவற்றுள், சிவஞான போதக் கடவுள் வாழ்த்து எவ்வகையைச் சார்ந்தது? விளக்குக.

3. அதிகரணம் என்பது யாது? மூன்றாம் சூத்திரத்தில் எத்தனை அதிகரணங்கள் உள்ளன? அவற்றால் முறையே மறுக்கப்படும் கொள்கையாளர்களின் பெயர்களைச் சுட்டுக.

4. "அத்துவிதம் என்ற சொல்லானே ஏகம் என்னில், ஏகம் என்று சுட்டுவ துண்மையின், அத்துவிதம் என்ற சொல்லே அந்நிய நாத்தியை உணர்த்து மாயிட்டு" என வரும் ஏதுவின் பொருளைத் தெளிவுறுத்துக.

5. ஏழாம் சூத்திரத்தினை எழுதி, அதன் அதிகரணப் பாகுபாட்டினை விளக்குக. (அல்லது) "இருதிறன் அறிவுளது இரண்டலா ஆன்மா" எனவரும் மேற்கோளுக்கு மெய்கண்டார் வகுத்த பொழிப்புரையைப் புலப்படுத்துக.

6. சிவஞானபோத வெண்பாக்களுள் நீவிர் அறிந்த இரண்டனை எழுதி, அவற்றின் கருத்தினையும் சுருங்கத் தருக. (அல்லது) சிவஞான போதத்தின் சூத்திரங்கள் பன்னிரண்டும் உணர்த்தும் பொருளியல்பினை முறையே குறிப்பிடுக.

7. சைவ சித்தாந்தத்தின் சிறப்பைச் சிவப்பிரகாசத்தின்கண் உமாபதி சிவம் எத்தகையதென விளக்கியுள்ளார்?

8. பசுவின் இலக்கணம் சிவப்பிரகாசத்தில் எவ்வாறு கூறப்பெற்றுள்ளது? (அல்லது) பஞ்ச மலங்கள் எவையெவை எனச் சிவப்பிரகாசம் கூறுகின்றது?

9. முத்தி பேதங்களின் இயல்பைக் கூறும் சிவப்பிரகாசச் செய்யுளில் மறுக்கப்படும் மதங்கள் எவையெவை? சித்தாந்த முத்திநிலை யாது? விளக்குக.



10. சிவப்பிரகாசம் உண்மையதிகாரத்தில் என்னென்ன பொருள்களை விளக்கப் புகுவதாக ஆசிரியர் அதன் தொடக்கத்தே குறிப்பிடுகின்றார்? (அல்லது) உயிர் ஒரு பொருளை நுகருங்கால் அதற்குத் துணை செய்யும் தத்துவங்கள் எவை யெவை?

11. சிவப்பிரகாச நூற்கருத்தினையும் உபதேச முறைமையையும் நூலின் இறுதியில் உமாபதிசிவம் எவ்வாறு உணர்த்தி யுள்ளார்?

12. "நித்தமாய் அருவாய் ஏக நிலையதாய்" என்வரும் சிவஞான சித்தியார் செய்யுளுக்கோ, அல்லது வேறு பிற செய்யுள்களுக்கோ சிவஞான முனிவரர் வரைந்தருளிய சிறப்புரையை இயன்ற அளவு விவரிக்க.

13. ஆசிரியர் மெய்கண்டாரின் சிவஞானபோத நூலை அடியொற்றியே, அருள் நந்தி சிவம் தமது நூலை இயற்றியுள்ளார் என்பதற்குச் சான்று தருக.

14. தத்துவ நூல்களில் நீதி நூற் கருத்துக்களும் விரவி வரும் என்பதற்குச் சிவஞான சித்தியாரினின்று மேற்கோள் காட்டுக.

15. குறிப்புரைகள் வரைக :—

1. சற்காரிய வாதம்.
2. சார்ந்ததன் வண்ணமாந் தன்மை.
3. போக யோக வேக மூர்த்தங்கள்.
4. ஐவகை அவத்தைகள்.
5. சிவோகம்பாவனை.

---

## இளஞ்சைவப் புலவர் — இலக்கியம்

மூன்று மணி நேரம்] [மதிப்பெண் நூறு

**எவையேனும் பத்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

1. 'கோளில் பொறியில்' என்னும் திருக்குறட்குப் பதவுரை எழுதி, இறைவனின் எண் குணங்கள் இவை யெனவும் குறிப்பிடுக.

2. 'ஐந்தின் வகை தெரிவான் கட்டே யுலகு'— ஐந்தின் வகை என்பதனைப் பரிமேலழகர் யாங்ஙனம் விளக்கியுள்ளார்?

3. வாக்கின்கண் நிகழும் பாவங்கள் நான்கு யாவை? அவற்றைத் திருவள்ளுவர் எவ்வெவ் வதிகாரங்களால் விளக்கியுள்ளார்?

4. 'இலன் என்னும் எவ்வம் உரையாமை ஈதல்' என்னும் திருக்குறளுக்குப் பரிமேலழகர் வரைந்துள்ள உரை விகற்பங்களைத் தருக.

5. பின்வரும் அணிகள் அமைந்துள்ள திருக்குறள் ஒவ்வொன்றனைக் குறிப்பிட்டு விளக்குக :—

1. எடுத்துக் காட்டுவமை
2. ஏகதேச உருவகம்
3. நிரனிறை
4. சொற்பொருட் பின்வருநிலை
5. இல்பொருள் உவமை

6. இந்திரன், ஔவையார், கோச்சேரமான் யானைக் கட்சேஎய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை, சிபி, கோவலன் என்பவர்கள் பரிமேலழகரால் சுட்டப்பெற்ற இடங்களைக் குறிப்பிடுக.

7. பரிமேலழகரின் நுண்ணிய உரைத் திறம் விளங்கும் சிறப்புரைப் பகுதிகள் இரண்டனைக் குறிப்பிடுக.

8. திருமுனைப் பாடி நாட்டினைச் சேக்கிழார் எங்ஙனம் சிறப்பித்துள்ளார்?

9. திருநாவுக்கரசர் தமது தேவாரத் திருப்பதிகங்களின் இறுதியில் இராவணனைக் குறித்துப் பாடுதற்குச் சேக்கிழார் தரும் விளக்கம் யாது?

10. திருநாவுக்கரசரைப் பற்றிய 'தியான சுலோகங்கள்' எனத் தகுந்த நிலையில் அமைந்துள்ள பெரிய புராணச் செய்யுள் ஒன்றனை எழுதுக.

11. திருநாவுக்கரசரும் திருஞான சம்பந்தரும் சீர்காழியிற் சந்தித்து மகிழ்ந்த செய்தியினைச் சேக்கிழார் எங்ஙனம் பாராட்டி யுள்ளார்?



12. திருவீழிமிழலை, திருப்பழையாறை வடதளி, திருப்புகலூர் என்னும் இடங்களில் திருநாவுக்கரசர் வரலாற்றில் நிகழ்ந்தனவற்றைக் குறிப்பிடுக.

13. திருநாவுக்கரசர் வரலாற்று நிகழ்ச்சிகள் சிலவற்றைக் குறிப்பிட்டு, அவற்றிற்கு அவர்தம் பாடல்களில் அகச் சான்றுகள் காட்டுக.

14. 'ஞானத்தின் திருவுரு' (அல்லது) 'அன்பின் திருவுரு' என்னும் தலைப்பில் ஓர் அழகிய சிறு கட்டுரை வரைக.

15. 'முருகனின் வழிபாடு மிகமிகத் தொன்மையானது' என்பதனை விவரிக்க.

---

## இளஞ்சைவப் புலவர் - சாத்திரம்

மூன்று மணி நேரம்] [மதிப்பெண் நூறு

**எவையேனும் பத்து வினுக்களுக்கு மட்டும் விடை தருக.**

1. 'திருவுந்தியார்' 'திருக்களிற்றுப் படியார்' என்னும் நூற்களின் பெயர்க் காரணத்தைப் புலப்படுத்துக.

2. திருவுந்தியாருக்கு வழிநூலாக அதன் பொருளை விளக்குதற்கு எழுந்ததே திருக்களிற்றுப்படியார் என்பதற்குச் சில சான்றுகள் தருக.

3. பொருள் கூறுக :—

" கண்டத்தைக் கொண்டு கருமம் முடித்தவர்
பிண்டத்தில் வாரார்என் றுந்தீபற
பிறப்பிறப் பில்லையென் றுந்தீபற "

" எட்டுக்கொண் டார்தமைத் தொட்டுக்கொண்
விட்டார் உலகம்என் றுந்தீபற [டேநின்றார்
வீடேவீ டாகும்என் றுந்தீபற "

4. எளிய இனிய நடையில் சிறந்த மெய்யுணர்வுக் கருத்துக்களை விளக்குவது திருவுந்தியார் என்பதனைச் சான்று காட்டித் தெளிவுறுத்துக.

5. திருவாசகத் திருமொழிகள் எடுத்தாளப் பெற்றுள்ள திருக்களிற்றுப் படியார் செய்யுள்களை எழுதுக.

6. வல்வினை, மெல்வினை என்பன யாவை? வல்வினை செய்தவர்களாகத் திருக்களிற்றுப்படியார் கூறும் மூவரைக் குறிப்பிடுக.

7. அகமார்க்கம் சகமார்க்கம் என்பன யாவை? அகமார்க்கத்தால் மலவாதனையை மாற்றிக் கொண்ட அடியார்கள் எவர் எவர் எனத் திருக்களிற்றுப்படியார் குறிப்பிடுகின்றது?

8. மங்கையர்க்கரசியார்தம் அன்பின் திறனைத் திருக்களிற்றுப்படியார் எவ்வாறு பாராட்டுகின்றது?

9. 'எங்கும் இலை கண்டாய் இது' எனத் திருக்களிற்றுப்படியார் வியந்து போற்றும் அருள்நிகழ்ச்சிகள் யாவை?

10. திருவதிகை மனவாசகங் கடந்தார் மெய்கண்டதேவரை நோக்கி நிகழ்த்திய வினாக்கள் யாவை?

11. வித்தியா தத்துவங்கள் என்பன யாவை? அவற்றிற்கு முறையே உரிய தொழில்கள் என்னென்ன?

12. "சிட்டன் சிவாயநம என்னும் திருவெழுத்து அஞ்சாலே அவாயமற நின்றுடுவான்" என்பதனை விளக்குக.

13. எந்தையார் ஐந்தொழில் நிகழ்த்தும் முறையும், அவர்தம் பாதத்தின் குறிக்கோளும் பற்றி 'உண்மை விளக்கம்' கூறுவதனை விவரிக்க.

14. 'பரமுத்தியைப் பெற்றவர் இரண்டறச் சிவத்திற் கலந்திருப்பர்' என்பதற்குக் கூறப்பெற்ற உவமைகள் யாவை?

15. 'முத்தியிலும் முப்பொருள்கள் உண்டு' எனக் கூறும் உண்மை விளக்கச் செய்யுளை எழுதி, அதன் பொருளைத் தெளிவிக்க.

---

# சமாஜ மாநாட்டுப் பேருவிண்ணப்பம்

(இராவ்சாகிப்- நல். முருகேச முதலியார், B.A., சமாஜத்தலைவர்)

நமது சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் 54-ஆம்
ஆண்டு நிறைவு விழாவும், சைவர் - மங்கையர் - இளைஞர்
மாநாடுகளும் வாலாஜாபாத்தில் இம்மாதம் 25, 26, 27 தேதி
களில் சிறப்புற நடைபெறவுள்ளன. அவைகளைப்பற்றிய
நிகழ்ச்சி நிரலும் விவரங்களும் இவ்விதழின் பிறிதோர்
இடத்தில் வெளியிடப் பெற்றுள்ளன. இம்முறை நமது
சமாஜ விழாவானது பல வகைகளில் மிகச் சிறப்புற நடை
பெற உள்ளது. நாற்பதுக்கு மேற்பட்ட அரிய பல சொற்
பொழிவுகளும் கலை நிகழ்ச்சிகளும் பிறவும் ஏற்பாடு
செய்யப்பட்டிருக்கின்றன...

சமாஜ உறுப்பினர்களும் அன்பர்களும் ஆதரவாளர்
களும் சமாஜத்தின் மாவட்டப் பிரதிநிதிகளும் ஆகிய அனை
வரும் விழாவிற்குத் தவறாமல் திரளாக வந்திருந்து சிறப்
பித்துச் சமாஜம் 50 ஆண்டுகளுக்கு மேலாக ஆற்றிவரும்
அரும்பெரும் பணிகள் மேலும் மேலும் ஆக்கம் பெற்று
வளர்ந்தோங்க, ஆவன பலவும் செய்துதவும்படி வேண்டிக்
கொள்கின்றேன். புது அங்கத்தினர்கள் முன் கூட்டியே
பெருவாரியாகச் சேரவேண்டும் எனக் கோரப்படுகிறது.
சைவ சபைகளும் பிரதிநிதிகளை அனுப்பி ஒத்துழைக்குமாறு
விரும்புகின்றேன்.

சமாஜப் பொருள் நிலை மிகவும் குறுகியதாய்ப் பல்
லாண்டுகளாக இருந்துவருகிறது. எனவே இவ்வாண்டு முடி
வுக்குள் குறைந்தது ஐந்நூறு அங்கத்தினர்களாவது அதிகப்
படி சேர்க்க முயலல்வேண்டும். ஆயுள் அங்கத்தினர்களும்
போஷகர்களும் மிகமிகத் தேவை. இதை அன்பர்கள் ஒரு
கடமையாகக் கொள்வார்கள் என வேண்டுகிறேன்.

சமாஜ அலுவல்களுக்குச் சொந்தமான ஒரு இடம்
தேவையாயிருக்கிறது. இதற்கும் அன்பர்கள் ஆதரவு சீக்கி
ரத்தில் கிடைத்தால் இப் பெருங்குறையை ஒருவாறு பூர்த்தி
செய்யலாம். இவ்விஷயத்தைச் சமாஜ மாநாட்டில் ஆலோ
சித்துத் தீவிர நடவடிக்கைகள் எடுக்கவேண்டுவது அவசி
யமாயிருக்கிறது.

சமாஜ அரியநூல் வெளியீடுகள் பல இன்னும் விலைக்குக்கிடைக்கின்றன. முக்கியமாகப் 'பெரிய புராணம்' அரிய ஆராய்ச்சிக் குறிப்புகளுடன் கிடைக்கிறது. இந்நூல்களையும் அன்பர்கள் விரைவில் வாங்கினால், வேறு நூல்கள் வெளியிடுவதற்கு வசதியாயிருக்கும்.

இவ்வாண்டும் சென்ற ஆண்டு மயிலத்தில் நடைபெற்றதுபோல், மாநாட்டில் இரவு 10-30 மணிக்குச் சைவ சித்தாந்த ஆய்வுக்குழுக் கூட்டங்களும் நடைபெறும். அவைகளுக்கும் அறிவும் ஆற்றலும்பெற்ற அன்பர்கள் தங்கள் கருத்துகளைச் சமர்ப்பிக்குமாறு வேண்டுகிறேன்.

விழா இனிது நிகழ இறையருள் துணை புரிவதாக! அன்பர்கள் உழைப்பும் பெரிதும் தேவை!

---

# பந்தணைநல்லூரிற் பரமன் அடியார்கள்

தேவாரப் பாடல்பெற்ற சிவத்தலங்களுள் பந்தணைநல்லூர் என்பது ஒன்று. அப்பதியின்கண் வதிந்துவரும் திரு. P. S. நாகலிங்கஞ் செட்டியார் அவர்கள் சிவபக்திச் செல்வம் பெரிதும் சிறக்கப் பெற்றவர்கள். நமது சமாஜ உறுப்பினராகத் திகழும் அவர்கள், தேவாரப் பாடல்பெற்ற 274 சிவத்தலங்களையும், பதரி கேதாரம் காசி துவாரகை முதலிய புண்ணியத் தலங்களையும் தமது அருமை மனைவியாரோடும், மூத்த புதல்வரோடும் சென்று தரிசித்து வழிபட்டு முடித்த பெருஞ் சிவபுண்ணியம் வாய்க்கப்பெற்றவர்கள். 'எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர்தாம் விரும்பும் உண்மையாவது பூசனை' என உணர்ந்து, தம் குடும்பத்தினருடன் சிவ வழிபாட்டில் ஈடுபடும் தவப்பேறு உடையவர்கள். அப் பெருந்தகையாரின் 70-ஆம் ஆண்டு நிறைவு 4-10-59 அன்று பந்தணைநல்லூரிற் சிறப்புற நடைபெற்றது. அதன்கண், சிவபூசைச் செல்வர்கள் 71 பேர் கலந்துகொண்டு பந்தணைநல்லூர்ப் பசுபதி ஈசர் கோயிலில் முறைப்படி சிவபூசை நிகழ்த்திச் சிறப்பித்தருளினார்கள். திருவையாற்று அரசர் கல்லூரிப் பேராசிரியர் பண்டித வித்துவான் திரு. இராமகோவிந்தசாமி பிள்ளை அவர்கள் "சிவபூசை" என்னும் பொருள்பற்றிச் சிறந்ததொரு சொற்பெருக்கு ஆற்றினார்கள். சிவபத்தியிற் சிறந்த சிவபூசைச் செல்வர்கள் பலரும் இங்ஙனம் ஆங்காங்கு அவ்வப்போது ஒருங்கு கூடி வழிபாடு இயற்றுதல் நாட்டின் நலத்துக்கும் சமயு வளர்ச்சிக்கும் பெரிதும் ஆக்கம் பயக்கும். ஆதலின், அப்பெருமக்களின் பெயர்ப் பட்டியலை ஈண்டுப் பெருமகிழ்வுடன் வெளியிடுகின்றோம். இம் மெய்யடியார்களின் திருக்கூட்டம் மேன்மேற் பெருகிவளர இறையருள் துணைபுரிவதாக.



சூரியனார் கோயில்:—ஸ்ரீலஸ்ரீ மீனாட்சிசுந்தர பண்டார சந்நிதி அவர்கள்.

சிதம்பரம்:—ஆ. சு. கணபதிஐயா பிள்ளை. வித்துவான் - திருநாவுக்கரசு பிள்ளை. எஸ். சோமசுந்தரம் பிள்ளை. அ. இராஜகோபால் பிள்ளை.

சீர்காழி:—எஸ். டி. நடேச பிள்ளை (திருஞானசம்பந்தர் கழகம்)

கூறைநாடு:—வா. ப. குஞ்சு செட்டியார். அ. மு. மாணிக்கம் பிள்ளை. பி. முத்துக்குமரன் பிள்ளை. எஸ். கந்தசாமி தேசிகர்.

நாகப்பட்டினம்:—டாக்டர் பி. எஸ். சொக்கலிங்கம் பிள்ளை.

குற்றாலம்:—எஸ். தண்டபாணி தேசிகர். கே. மருதப்ப பிள்ளை. கே. எம். வசந்தா அம்மாள். கே. எம். இராஜாராமன். கே. எம். காசியம்மாள். மேயர்-இராமலிங்க தேசிகர். ரா. பாலகிருஷ்ணன் ஆசாரியார். டாக்டர்-அழகப்பா அண்ணாமலை.

திருக்கோடிகாவல்:—சா. சம்பந்த தேசிகர்.

ஆடுதுறை:—வெ. க. விருத்தாசலம் செட்டியார்.

திருவிடைமருதூர்:—பிச்சையப்ப தேசிகர்.

திருநாகேஸ்வரம்:—எம். சுப்பிரமணியம் செட்டியார்.

குடந்தை:—பி. டி. எஸ். சிங்காரம் செட்டியார். மா. அருணாசலம் செட்டியார். சா. சண்முகம் பிள்ளை. எஸ். கே. சொக்கலிங்கம் செட்டியசர். எஸ். நடனமூர்த்தி பிள்ளை. தா. மகாலிங்கம் செட்டியார். மு. வைத்தியலிங்கம் செட்டியார். எஸ். சிவகுருநாதஞ் செட்டியார். எஸ். அருணாசலம் செட்டியார். திருமதி-எஸ். அருணாசலம் விருத்தாம்பாள் அம்மையார். சங்கீதம்-ப. சுந்தரேசம் பிள்ளை. திருமதி-சுந்தரேசம் அம்மையார். ரைஸ்மில் முத்த. வெ. சொக்கலிங்கம் செட்டியார்.

கோட்டையூர்:—ப. கிருஷ்ணசாமி மண்ணையார்.

சுந்தரபெருமாள் கோவில்:—மா. சிவகுருநாத பிள்ளை.

திருவையாறு:—இராம. கோவிந்தசாமி பிள்ளை.

தேவகோட்டை:—உ. [illegible] ம. மெ. சு. ப. சேவு. வள்ளல் மெய்யப்ப செட்டியார். மெ. அரு. லெ[illegible]ராம கணேசன் செட்டியார். சி. வீர. [illegible]ராஜ செட்டியார். சுப. ராம. சுப்பிரமணியஞ் செட்டியார்.

காரைக்குடி:—நா. இராமநாதன் செட்டியார். திருநாவுக்கரசு செட்டியார் (முத்துப்பட்டணம்)

தென்னலூர்:—காண்ட்ராக்டர்-சாமிநாத பிள்ளை.

திருப்பனந்தாள்:—பஞ்சநத தேசிகர்.

சிதம்பரம் வட்டம் :—சுப்பராயப் பிள்ளை (வளையமாதேவி). கோ. ர. தங்கவேல் பிள்ளை (சாத்தநத்தம்). முத்து தியாகராச பிள்ளை. எஸ். கனகசபை பிள்ளை. கு. பஞ்சநதம் பிள்ளை. ப. நாராயணசாமி பிள்ளை (சி. சாத்தநத்தம்). மெ. ச. கந்தசாமி பிள்ளை (மெய்யாத்தூர்). சற்குருபாதம் பிள்ளை (இராசேந்திரபட்டணம்).

பந்தணைநல்லூர்:—பி. எஸ். நாகலிங்கம் செட்டியார். பி. எஸ். என். மீனாட்சிசுந்தரத்தம்மையார். பி. எஸ். என். குஞ்சிதபாதம் செட்டியார். மு. சொ. வேலாயுதஞ் செட்டியார். திருமதி மு. சொ. வே. [illegible]சம்மாள். ஓதுவார்-எஸ். தண்டபாணி தேசிகர். ஓதுவார். எம். [illegible]க்கலிங்க தேசிகர். திருமதி எம். சொக்கலிங்க தேசிகர். திரு. அருணாசலம் செட்டியார். ஞானகுருசாமி பிள்ளை. இராஜ கோபால் பிள்ளை. சி. அருணாசலம் பிள்ளை கிருஷ்ணசாமி பிள்ளை. சொக்கலிங்கம் பிள்ளை. பரமசிவம் பிள்ளை.

## சமாஜத் தேர்வுகளின் முடிவு

நம் சமாஜம் 22-11-59 அன்று நடத்திய சைவத் தேர்வுகளிற் கீழ்க்காணும் அறிஞர்கள் வெற்றி பெற்றுள்ளனர். **சைவப் புலவர் தேர்வு** :—அ. சண்முகசுந்தரம் பிள்ளை, அ. S. R. இராமசாமி, மு. க. மாசிலாமணி, மா. வீரபத்திரன், S. R. தேமொழி, A. அழகப்ப பிள்ளை, அ. சிவசுப்பிரமணிய பிள்ளை, இ. திருநாவுக்கரசு, இ. செல்லத்துரை, T. கிருஷ்ண பிள்ளை, வ. சித்திவிநாயகம். **இளஞ்சைவப் புலவர்** :—செல்வி S. மங்கையர்க்கரசி, K. செல்லப்ப கவுண்டன் (சிவநேசன்). இத்தேர்வுகளை நடத்துதற்கு உதவி புரிந்த அன்பர்களுக்குச் சமாஜம் நன்றி தெரிவித்துக் கொள்ளுகின்றது. தேர்வுகளில் வெற்றி பெற்றோர்க்கு வாலாஜாபாத்தில் நிகழ இருக்கும் சமாஜ மகாநாட்டிற் பட்டமளிப்பு நடைபெறும்.

**பிரிவாற்றுமை** : நமது சமாஜத் தலைவர் இராவ் சாகிப் திரு. நல். முருகேச முதலியார் B.A. அவர்களின் அருமைத் தாயார் திருமதி. நல். ஜனகம்மாள் அவர்கள் 25-11-59 அன்று இறையடி நீழல் எய்தினர்கள். 4-12-59 வெள்ளியன்று வீராகம சைவ விதி வழியே நீத்தார் வழிபாடு நிகழ்த்தப் பெற்றது. நம்சமாஜச் சார்பிலும், வாலாஜாபாத் இந்துமத பாடசாலையார் சார்பிலும் "வழிபாட்டு வாழ்த்து மலர்கள்" வழங்கப்பட்டன. திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை, பி. ஏ., எல். டி. அவர்களும், திரு. ச. சிவகுமாரன், எம். ஏ. அவர்களும் அம்மையாரின் அரும்பெரும் சிறப்புக்களைப்பற்றியும், சமாஜத் தலைவர்களைப்பற்றியும் பாராட்டிப் பேசினர். அம்மையார் அவர்களின் ஆருயிர் அம்பலவாணர் திருவடிக்கீழ் அமைதியின்பம் பெற்றுத் திளைப்பதாக!

**மாதாந்தர வழிபாடு** : சென்னை தியாகராய நகர்த் தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலையத்தின் சார்பில் 6-12-59 ஞாயிறன்று திருவான்மியூரில் நடைபெற்றது. மாலை 3-மணிக்குப் பாம்பன் சுவாமிகள் சமாதிக் கோயிற் திருமட[illegible] வளர்ச்சி சம்பந்தமான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள், சைவப் பெரியார் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை, இராமநாதபுரம் திரு. காசிநாத துரை ஆகிய பெருமக்கள் தத்தம் கருத்துக்களைத் தெரிவித்தனர். மாலை 6-மணிக்குத் தியாகேசப் பெருமான் திருக்கோயிலில் வழிபாடு நிகழ்ந்தது. பின்னர்க் கூடிய சமயப் பேரவையில் திரு. புலவர் முருகவேள், புலவர் ப. சொக்கலிங்கம், திரு. ச. சிவகுமாரன் ஆகியோர் சொற்பொழி வாற்றினர். ஸ்ரீலஸ்ரீ தம்பிரான் சுவாமிகள் தலவரலாறு குறித்துச் சிறந்ததொரு சொற்பெருக்கு நிகழ்த்தினர்கள். திருவாளர்கள் N. சங்கரனர், ஆவுடைநாயகம் பிள்ளை, கடிகாசலம் பிள்ளை, அப்பா வா. தி. மா., தி. கி. நாராயணசாமி நாயுடு, G. கலியாணம் பிள்ளை, K. வச்சிரவேல் முதலியார் ஆகிய பெருமக்கள் பலரும், ஏராளமான தாய்மார்களும் திரளாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மேயர் கம்பெனி திரு. மாசிலாமணி முதலியார் அவர்கள் வந்திருந்தோர் அனைவர்க்கும் இனிய சிற்றுண்டிகளும் பருகுநீரும் வழங்கி மகிழ்வித்தார்கள்.

Regd. M. 2330 "SIDDHANTHAM" Vol. 32—No

# "சித்தாந்தம்" மலர் 3: இதழ்

**1960 ஜனவரி மாதம் 10உ** வெளிவரும். அந் தேதிக்குள் ரூபா மூன்றைக் கீழ்க்காணும் முகவரி அனுப்பிவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன். வி. பி. மூ அவ்விதழை அனுப்புவதால் அங்கத்தினர்களுக்கு 75 பு. காசு (நையே பைசே) அஞ்சல் செலவு அதிகம் ஆகிவி( சந்தா ரூபா மூன்றை அனுப்பவேண்டிய முகவரி :—

செயலாளர், **சைவ சித்தாந்த மகா சமாஜம்,**
*28, இராமகிருஷ்ண மடத்துச் சாலை, சென்னை*

## திருவெம்பாவை-திருப்பள்ளியெழு

### மூலமும் - உரையும்

சைவசமய பரமாசாரியருள் ஒருவரான மாணிக்கவா சுவாமிகளால் அருளப்பெற்ற இந்நூல், மார்கழி மா ஒவ்வொரு நாளும் காலையில் பாராயணம் செய்யப்ப வேண்டிய 30 பாடல்களைக் கொண்டது. இவற்( அனைவர்க்கும் பயன்பட வேண்டுமென்று, உரையுடன் புதுக்காசு விலையில் இவ்வாண்டு சமாஜத்தில் பதிப்பிச் பட்டுள்ளது. நூறு பிரதிகள் பதிவுத் தபாற்கூலி உள் ரூ. 7·50.

கிடைக்குமிடம் :—சமாஜப் புத்தக விற்பனை அலுவலகம்,
28, இராமகிருஷ்ண மடத்துச் சாலை, சென்னை—

Printed at the Sadhu Press, 15. Madhava Perumal Koil St Mylapore by D. Mangayarkarasi and V. K. Punithav Edited by Pulavar Murugavel, M.A., M.O.L. & Publishe S. Satchidanandam Pillai, B.A., L.T. for the Saiva Siddh Maha Samajam, 14. Warren Road, Mylapore, Madras-4.